# காளான்

சிவசங்கரி

24 JUN 1991

வானதி பதிப்பகம்
13. தீனதயாளு தெரு
தி.நகர், சென்னை-17.

முதற் பதிப்பு : அக்டோபர் 1981
இரண்டாம் பதிப்பு : செப்டம்பர் 1989

திருநாவுக்கரசு தயாரிப்பு

414369

24 JUN 1991

894.8113
SIV

விலை ரூ. 14-00

அச்சிட்டோர் :
ராமன்ஸ் பிரிண்டிங் பிரஸ்
தி.நகர், சென்னை—17.

24 JUN 1991

# பதிப்புரை

தமிழ்நாட்டில் பெண் எழுத்தாளர்களில் முதன்மை பெற்று விளங்கும் எழுத்தாளரான திருமதி சிவசங்கரியின் இரு குறு நாவல்கள் இந்நூலில் உள்ளன. காளான் முதல் நாவல். சீமான்கள் வீட்டுக்கதை, உயிர்த்துடிப்பும் மன அலைகளின் மென்மையும் பண்பும் நிறைந்தது.

இரண்டாவது கதை இருக்கிறதே!

அடேயப்பா! சிவசங்கரியவர்களை சமீபத்தில் தமிழகத்தின் 'பெர்ல் பக்' என்று தாய் பத்திரிகை விளம்பரப்படுத்தியிருந்தது. அது முற்றிலும் உண்மை என்பதை நிரூபிக்கிறது, 'கடைசியில்' என்ற குறுநாவல்.

அமெரிக்கப் பெண்; சீனமக்களின் யதார்த்த வாழ்க்கையைப் படம் பிடித்தார்,

மேட்டுக்குடிப் பெண்; தென்னாற்காடு மாவட்டச் சேரியை— அங்குள்ள அஞ்சலையை, தேவகியை பழனியம்மா'வை-அந்தக் கதையின் 'ஹீரோ' பாவாடையை எவ்வளவு இயல்புடன் கொண்டு வந்து நம்முன் நடமாட விடுகிறார்!

பாவாடை ஏழைதான். சேரிப் புழுதியிலே அலைபவன் தான். ஆனால் மனம் மாசுமறுவற்றது. உண்மையானது. சுயம்புவானது!

பாங்க் மானேஜர் அம்மா ஊரிலிருந்து திரும்பி வந்ததும், நம்மை அவன் மீது சந்தேகப்பட வைக்கிறார்! ஆனால் அவன் அப்படி ஒன்றும் 'வீழ்ச்சி'யடையவில்லை. நம்

எல்லோரையும் போல மாறிவிட்டான். அவ்வளவுதான். அவனுக்கு—வாழ 'போக்கியத்திற்கு' நிலம் எடுக்க பணம் தேவை! தேவகிக்காக அவன் சாகவா முடியும்? 'ஹீரோ' வாக இருந்தவன் மனிதனாக மாறிவிட்டான்!

ஒரு வேளை அந்த அம்மாள் அவன் கேட்ட பணத்தைக் கொடுத்திருந்தால்?

ஆமாங்காட்டியும், இந்த அம்மாவுக்கு சேரி பாஷை இவ்வளவு அத்துபடியாகியிருக்கிறதே! பாஷை மட்டுமா? பழக்கவழக்கம் எல்லாவற்றையும் கூர்ந்து கவனித்து வந்திருக்கிறார்!

தமிழகத்தின் 'பெர்ல்பக்' திருமதி சிவசங்கரிக்கு என் வாழ்த்துக்கள். இந்நாவலைப் படித்து வாசகர்களும் வாழ்த்துவார்கள் என நம்புகிறேன்.

ஏ. திருநாவுக்கரசு
வானதி பதிப்பகம்.



# காளான்

## 1

சங்கர் புரண்டு படுத்தான்.

தூக்கம் போய் விட்டது.

மணி என்ன?

ரேடியம் டயல் வாட்ச் ஐந்து என்றது.

சப்தம் இல்லாமல் எழுந்து உட்கார்ந்து இரண்டு கை களையும் தேய்த்து முகத்தில் ஒற்றிக் கொண்டான்.

உடம்பை முறுக்கி, சின்னதாய் சோம்பல் முறித்த போது, அன்று தங்களுக்கு வெட்டிங் ஆனிவர்ஸரி என்பது ஞாபகத்துக்கு வந்தது.

ஐந்து வருஷங்கள் முடிந்து ஆறாவது எட்டிப் பார்க் கிறதா?

வேதனை கலந்த சிரிப்பொன்று ஒரு பக்கமாய் உதட்டிலிருந்து சீறியது.

தலையைத் திருப்பி பக்கத்தில் உறங்கும் சித்ராவைப்

நயக்க ... என்

நிலா முகம் நல்ல வெளுப்பு. சற்றே திறந்த உதடு நெற்றியில் அலட்சியமாய் படர்ந்திருக்கும் முடி. சுற்ற.

அதே சித்ராதான். ஐந்து வருஷங்களுக்கு முன் இவன் கை பிடித்த போது இருந்த சித்ராதான். முகத்தளவில் மட்டும்—

கனத்த நெஞ்சோடு சங்கர் எழுந்து டீபாய் மேல் இருந்த சிகரெட், தீ பெட்டி எடுத்துக் கொண்டு பால் கனி கதவைத் திறந்து, வெளியே போனான்.

காலை நேரத்து டெல்லி ரொம்ப சமர்த்தாக இருந்தது.

செப்டம்பர் மாசத்து பூக்கள் அந்த அரைகுறை இருட்டில் வெளுப்பும், சிகப்புமாய் பளிச்சிட்டன.

சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு சுவர் மேல் சாய்ந்தான்.

சின்ன வயசு சித்ராவின் நினைப்பு ஆளை ஓட ஓட விரட்டியது.

என்ன சிரிப்பு?

என்ன துறுதுறுப்பு?

லொட லொடவென்று என்ன பேச்சு?

சித்ரா அவனுக்கு சொந்தம் தான். ஒன்றுவிட்ட மாமாவின் பெண். மாமா கோயம்புத்தூர் மில் சொந்தக் காரர்களில் ஒருவர்.

உறவினர் வீட்டுத் திருமணத்துப் போயிருந்தபோது முதன் முதலில் அந்த வாயையும் துறுதுறுப்பையும் சங்கர் அனுபவித்தான்.

சித்ரா அவனை விட ஒன்பது வயசு சின்னவள், அப்போது அவன் பி.ஏ. கடைசி வருஷம். அவள்? ஸ கிளாஸ் இன் ஸ்கூல்.





...கல ஜரிகை பாவாடை, சட்டை, ...மிக்கி, படா ஸ்டைல்.

சந்தன கிண்ணத்தோடு குறுக்கும், ...வளின் கால் தடுக்க, அத்தனை சந்தனமும் அருண்டிருந்தவள் ...திருந்த இவன் மேல் கொட்ட, பக்கத்தில் பெரியம்மா "அதென்னடி கால் தரையிலே ப... திதானே ஓட்டம்...? நிதானம் வேணாம் பொம்பளை குட்டி" என்று திட்ட, "அவரே சும்மா இருக்கார், அப்புறம் ...ளுக்கு என்ன பெரியம்மா? வேணும்னா கொட்டினேன். என்னமோ கால் தடுக்கிடுச்சி...சந்தனம் தானே? கமகமன்னு இருக்கும். ஆளை வெரட்டாதீங்க" என்று பெரியமமாவிடம் நீளமாய் பேசிவிட்டு இவன் பக்கம் திரும்பி 'ஸாரி' என்று சொல்லி புன்னகைத்தபடி திரும்ப அதே வேகத்துடன் ஓடிப் போனாள்.

இந்த நிகழ்ச்சி முதலில் சங்கருக்கு நினைப்பு இல்லை. கல்யாணம் ஆன பிறகு சித்ரா எடுத்துச் சொன்ன பிறகே ஞாபகத்துக்கு வந்தது.

பத்து வயசில் நடந்த சம்பவத்தை சித்ரா மறக்காமல் இருந்தது கூட பெரிசில்லை, அப்புறம் இங்கு அங்கு அரை நிமிஷம், ஒரு நிமிஷம என்று இவனைச் சந்தித்ததைக் கூட மனசில் குறித்து வைத்துக் கொண்டதும் அல்லாமல் திருமணப் பேச்சை பெற்றவர் எடுத்ததும் நாசூக்காக இவனையே தான் மணக்க விரும்புவதை அவர்களிடம் தெரிவித்தாளே, அதுதான் நிஜமாகவே வியப்பில் ஆழ்த்தும் சமாசாரம்.

பி.ஏல்லே ...டித்து, எம்.ஏ. முடித்து, அமெரிக்காவில் இருந்த ... பிட்டு ...ணாவின் உதவியுடன் அங்கே சென்று எம்பிஏ. படித் ... "அப்...பார்க்கில் இரண்டு வருஷம் வேலை பார்த்து. "இ...ரியலே ...பரும் அயல் நாட்டுலே தங்கிட்டா எப்படி? இ... மு...க்கிற பணம், அந்தஸ்து, சௌகரியம் நமக்கு ...நயக்க ...?" என்று சதா அம்மா புலம்பியது தாங்காமல்

...சில் இந்தியாவுக்கு வந்து, டெல்...ல ...ன்றில் அமர்ந்த பிறகு சித்ராவி... ...ா சொல்லாமல் கொள்ளாமல் இவனைத் ...டு வந்தார்.

அம்மாவிடம் பேசிவிட்டாராம். அவர்களுக்குச் ...ம். இவன் 'ம்' என்று சொல்லிவிட்டால் முகூர்த் ... குறித்து விடலாமாம்.

சங்கருக்கு ரொம்ப ஆச்சரியமாக இருந்தது.

சித்ராவையா?

நானா? கல்யாணம் பண்ணிக் கொள்வதா? எப்படி?

என்னைவிட ஒன்பது வயசுசின்னவள், சின்னக்குழந்தை அவளையா?

ஆனால் இந்த எண்ணமெல்லாம் அடுத்த வார... அவளை பார்க்கும் வரையில்தான்.

சாட்டை சாட்டையாய் காலும், கையும், நில... முகமும், வாய் நிறைந்த சிரிப்புமாய் இருபத்தியொரு வய... பெண்ணாக அவளைப் பார்த்ததும் சங்கர் மயங்கித் தா... போனான்.

இவளா?

இந்த அழகா?

எனக்கா?

எனக்கே எனக்கா?

மனசை சந்தோஷம் விசிறிவிட அவன் ச...மணத்து சம்மதிக்க, உடனடியாக நிச்சயதாம்பூலம் ...ந்து.

அதன் பிறகு, டெல்லிக்குப் புறப்படும்ம... அவ... வெளியில் அழைத்துப் போய் வந்தபோத... சி... தன்னை வருஷ வருஷமாய் காதலித்திருக்கிற...ு, ... அவனால் புரிந்து கொள்ள முடிந்தது.

ரேஸ் கோர்ஸ் மைதானத்தில் வண்டியை நிறு... அவளைப் பார்த்து திரும்பி உட்கார்ந்தா...ன்.





"சித்ரா"

"ம்?"

"லுக் அட் மி"

ஏதோ பாடலை முணு முணுத்துக் கொண்டிருந்தவள் நிமிர்ந்தாள்.

"வந்து, உனக்கு, இந்த ஏற்பாட்டுலே திருப்திதானே சித்ரா?"

சித்ரா அழகாய் சிரித்தாள். பின் "இது என்ன திடீர் சந்தேகம்?" என்றாள்.

"இல்லே...வந்து...யு.ஸி...நீ என்னைவிட ஒன்பதுவயசு சின்னவ...அந்த டிபரென்ஸ் உனக்கு கொஞ்சம் சங்கடமா இருக்கலாம்...இந்த காலத்துலே இவ்வளவு வயசு வித்தியாசத்துலே யாரும் அதிகமா கல்யாணம் பண்ணிக்கறதில்லே அதான்..."

சித்ரா விழிகளை விரித்து 'நீங்க இப்படி சந்தேகப் பட்டால் எப்படி' என்கிற மாதிரி சங்கரைப் பார்த்தாள். அப்புறம் என்னமோ நினைத்துக் கொண்டு வாயைப் பொத்திக் கொண்டு சிரித்தாள்.

"வாட் ஈஸ் இட் சித்ரா?"

"ம்...ஒன்றுமில்லே"

"கமான் டெல் மி..."

சித்ரா சிரிப்பை அடக்கிக் கொண்டு பேச முற்பட்ட போது கன்னங்கள் சிவந்து போயின.

"இல்லே...அப்பா தயங்கின காரணத்தையே நீங்களும் குறிப்பிட்டு சொல்றீங்களேன்னு நினைச்சேன்...அதான்..."

"அப்பாவா? தயங்கினாரா? சித்ரா எனக்கு ஒண்ணும் புரியலே..."

முழுசாய் ஒரு நிமிஷம் சித்ரா பேசாமல் இருந்துவிட்டு நயக்கத்தோடு சின்ன குரலில் பேசினாள்.

''நிஜமா புரியலையா சங்கர்? என் மனசு உங்க... இன்னுமா புரியலை?...சரி, சில பழைய சம்பவங்க... சொல்றேன்; அதுக்கப்புறமாவது என் மனசு புரிய...னு பாருங்க. உங்க மேல நா சந்தனத்தைக் கொட்டிடே...னே, அந்த நாள் ஞாபகம் இருக்கா சங்கர்? அப்புறம் ஒரு ...வுலே கன்யாகுமாரியிலே எதேச்சையா சந்திச்சோமே, அது? உங்க அண்ணா கல்யாணத்துலே எனக்கு எதிர்லே உட்கா...ர்ந்து நீங்க உங்க கிநேகிதங்களோட சாப்பிட்டீங்களே, அது? ஒரு சமயம் உங்க அப்பா அம்மாவோட நீங்க அமெரிக்கா போறதுக்கு முன்னால எங்க வீட்டுக்கு வந்திருந்தீங்க, அப்ப, ''ஓ! நீ எஸ். எஸ். எல். ஸி. யா? இப்படி அப்படி டகல்பாஜா பண்ணி எப்படியோ எஸ். எஸ். எல். ஸி ...துட்டேனு சொல்லு''னு நீங்க கேலி பண்ணப்போ நா ...ல்பாஜானா என்னன்னு புரியாமமுழிச்சேன். இதுகூடவா ...யாதுனு மேலே மேலே சீண்டினிங்களே அது?...''

...ப்பவோ, என்றோ நடந்துவிட்ட காசு பெறாத ...யங்களை மனசில் பதித்துக் கொண்டு ஒவ்வொன்றாய் சித்ரா எடுத்துச் சொல்ல ஐ ஹாவ் லவ்ட் யூ ஃபார் மெனி இயர்ஸ் என்று அவள் சொல்லாமல் சொல்வது புரிய சங்கர் நெகிழ்ந்து போனான்.

மறுமாசம் ஒரு வெள்ளிக்கிழமை திருமணம் தடபுடலாய் நடந்தேறியது. டெல்லியில் உடனடியாய் தனிக் குடித்தனம்.

தேனிலவுக்கு காஷ்மீர் போனார்கள்.

டால் ஏரியில், படகு வீட்டில் தங்கின ஒரு இரவில், அவன் மடியில் முகம் புதைத்து இந்தக் கல்யாணம் நடக்குமா நடக்காதா என்று தான் பயந்து நடுங்கின நாட்களைப் பற்றி சித்ரா சொன்னாள்.

''நீங்க யு. எஸ். லே இருந்தப்போ நா ரொம்ப தவ...சிருக்கேன் சங்கர்...''

...ாளான்



''வொய்?''

''சொல்ல மாட்டேன் யு வில் டீஸ் மீ...''

''சொல்லும்மா...''

''கேலி பண்ணக் கூடாது...''

''ஓ. கே.''

''ப்ராமிஸ்?''

''ப்ராமிஸ்...''

''அங்கேயே ஒரு அமெரிக்கனை நீங்க கல்யாண பண்ணிக்கிற மாதிரி நினைச்சுப்பேன்; ரொம்ப க... மாயிடும்...''

அந்த நினைப்பு இப்போதும் வேதனைப் படுத்த ரீதியில் கண்களில் கலக்கம், குரலில் பிசிறு.

என்ன பெண் இவள்!

பிடித்துக் கொண்டிருந்த சிகரட்டை அணைத்துவிட்டு சித்ராவை சங்கர் மார்பு மீது இழுத்துக் கொண்டான்.

''அப்படி என்கிட்ட என்ன இருக்கு சித்ரு டார்லிங்? நீ இயர்ஸ் டுகெதர் எனக்காக உருகி, காத்திருக்கிற அளவுக்கு என்கிட்ட என்ன இருக்கும்மா?''

''இப்படி குறுக்கு கேள்வி கேட்டா எனக்குப் பதில் சொல்லத் தெரியாது. நினைவு தெரிஞ்ச நாளா ஐ ஹாவ் லவ்ட் யு; ஐ லவ் யு; ஐ வில் ஆல்வேஸ் லவ் யு... அவ்வளவு தான் சொல்லத் தெரியும்...''

இந்த அன்பையும், இந்த மனசையும் நினைத்து சங்கர் புளகாங்கித மடைந்த நாட்கள் தான் எத்தனை...

ஒரு வருஷம் ஓடின ஓட்டம் தெரியவில்லை.

அந்த ஒரு வருஷத்தைத்தான் எப்படி எல்லாம் கழித்தார்கள்?

வெள்ளிக்கிழமை என்றால் வார வெட்டிங் டே, இரண்டாம் தேதி என்றால் மாச வெட்டிங் டே...

பணம், அன்பு, இளமை, ஆர்வம் எதற்குப் பஞ்சம்? ம்ஹூம், ஒன்றும் இல்லை. அப்புறம் சந்தோஷத்துக்கு கேட்க வேண்டுமா?

முதலாவது வெட்டிங் டேயைக் கொண்டாட லீவு நீ[illegible]த்துக் கொண்டு ஊருக்குப் போனார்கள்.

ஒருபத்து நாள் கோயமுத்தூரில் சித்ராவின் பெற்றோ போன், பத்துநாள் தூத்துக்குடியில்— அவன் அப்பா அம்மா வீட்டில்.

ரொம்பநாட்களுக்கு மண்டையை உடைத்துக்கொண்டு அ[illegible]டு சங்கர் சின்ன இதய வடிவிலான வைர மோதிரத்தை [illegible]ளுக்குப் பரிசளித்தான்.

அ[illegible] பேப்பரைப் பிரித்து, மோதிரத்தைக் கையில் எடுத்தவளுக்கு ஏக மகிழ்ச்சி.

''எனக்கா? இது எனக்கா? ஹௌ ஸ்வீட்...எங்க, எப்ப பண்ணீங்க சங்கர்?...ஓ...திஸ் ஈஸ் லவ்லி...''

அந்த குதிப்பும், குதூகலமும் திருப்தியாக இருக்க ''உன்கிட்ட ஏற்கனவே வைரசெட், அது இதுனு அத்தனையும் இருக்கேன்றதால ரொம்ப யோசிச்சு இதைச் செய்தேன் சித்ரு... யு ரியலி லைக் இட்?''—

''ஐ லவ் திஸ் சங்கர்... எத்தனை இருந்தாலும் நீங்க இப்படி பிளான் பண்ணி ஸர்ப்ரைஸா கொடுக்கறதுக்கு ஈடாகுமா? ம். திஸ் ஈஸ் வெரி ப்ரிடி... இனிமே விரலை விட்டு கழட்டாம நா இதைப் போட்டுக்கப் போறேன்... ஆமா, ஒவ்வொரு வெட்டிங் ஆனிவர்ஸரிக்கும் ஒரு மோதிரம் கொடுத்தீங்கன்னா பத்து விரலுக்கும் பத்து மோதிரம் ஆச்சு...அப்புறம்? தென், வாட் வில் யு கிவ் மீ—'' கொஞ்சம் நிறுத்தின சித்ரா கிளுகிளுவென்று சிரிக்க தொடங்கினாள்.



''பத்து விரலேயும், மோதிரங்களை போட்டுக்கிட்டா எப்படி இருக்கும் சங்கர்? ஒரு மஹாராணி மாதிரி? ராஜாதி ரா[illegible]ராஜ கம்பீர மஹாராணி சித்ரா சங்கர் பராக் பராக்...''

தொடர்ந்து சிரிப்பு— அலை அலையாய்...

என்ன சிரிப்பு அது?

வாய் ஓயாமல் தானும் சிரித்து அருகில் நிற்பவரையும் தொற்றிக் கொள்ளும சிரிப்பை சிரிக்க சித்ரா யாரிடம் கற்றுக் கொண்டாள்?

ஆனால், இந்த சித்ரா ஒரு விநோத கலவைதான். ஒரு நிமிஷம் சிரிப்பாள். மறு நிமிஷம் ஒன்றுமேயில்லாத விஷயத்துக்காக ஆடிப் போவாள்.

அன்றும் அப்படித்தான்.

இரவு நேரம்.

சங்கர் க்ரஹாம் க்ரீனின் 'எண்ட் ஆஃப் தி அபேர்' ...ல் லயித்திருந்தான்.

''சங்கர்...''

''......''

''டா...ர்லிங்.''

''ம்...என்னம்மா?''

நிமிர்ந்து பார்த்தவன் அவள் என்னமோ விசனத்தில் இருப்பது புரிய புத்தகத்தை மூடி வைத்துவிட்டு கிட்டவந்து அமர்ந்தான்.

''என்ன சித்ரு?''

''நான் ஏன் இன்னும் ப்ரெக்னென்ட் ஆகலை சங்கர்''

முகத்தை ரொம்ப சீரியஸாக வைத்துக் கொண்டு திடுமென்று சித்ரா இப்படி கேட்கவும் சங்கருக்கு சிரிப்பு வந்து விட்டது.

"இதுலே சிரிக்கறத்துக்கு என்ன இருக்கு?"

பதில் சொல்லாமல் சங்கர் தொடர்ந்து சிரித்தான்.

"நா எவ்வளவு வேதனையா பேசறேன்னு உங்களுக்குப் புரியலை சங்கர். புரிஞ்சிருந்தா இப்படி சிரிக்க மாட்டீங்க...நம்மோட கல்யாணமான ஸபிதாக்கு பிள்ளை பிறந்தாச்சு. இரண்டு மாசம் கழிச்சு மாரேஜ் ஆன ஊர்மிளாக்கு இப்ப நாலு மாசம்..."

"ஹேய்...ஹோல்ட் இட்...இப்படி பட்டியல் போட்டு வருத்தப்படும்படி இப்ப நமக்கு பத்து வருஷமா ஆச்சு? ஹார்ட்லி ஒன் இயர். கமான் டேக் இட் ஈஸி..."

"ஈஸியா எப்படி எடுத்துக்கறது சங்கர்? இல்ல...என் கிட்ட ஏதோ கோளாறு இருக்கு..."

"அட! பைத்தியக்கார குட்டிப் பொண்ணு, நத்திங் ஈஸ் ராங் வித் யூ..."

"அப்ப, உங்க கிட்ட ஏதோ மிஸ்டேக்"

சங்கருக்கு திரும்ப சிரிப்பு வந்து விட்டது.

"யார் கிட்டயும் எந்த கோளாறும் இல்லே சித்ரு."

"எப்படித் தெரியும்? அப்ப ஏன் நான் இன்னும் கன்ஸீவ் பண்ணலை?"

"ஒரு வருஷத்துக்குள்ள குழந்தை பிறக்கலைனு நீ தவிக்கிறது வெளிலே தெரிஞ்சா எல்லாரும் கேலி பண்ணப் போறாங்க...ஆமா..."

"பண்ணட்டும் ஐ டோண்ட் கேர். ஐ வாண்ட் எ பேபி..." பேசினவளை இழுத்து முகத்தோடு முகம் வைத்துக் கொண்டான் சங்கர்.

"நீயே ஒரு குழந்தை. உனக்கு குழந்தை ஆசையா? கடவுளே... இந்த பொண்ணை வைச்சிகிட்டு நா என்ன பண்ணறது? சரி...சீரியஸா பேசலாம் உனக்கு குழந்



வந் "தம், ரைட்? ஓ. கே... அதுக்கான முயற்சி இப்பவே நாட ங்க பெக்கலாமா? ஹௌ அபௌட் இட்? ம்? எத்தனை குழ றாத பெத்துக்க நீ ரெடி சித்ரு? அரை டஜன்? நீ 'ம்' னா நானும் தயார்—என்ன குட்டிப் பொண்ணு?"

"விளையாடதீங்க சங்கர்"

துடிக்கும் உதடுகளும், கெஞ்சும் கண்களும் பார்க்க பாவமாய் இருக்க மனைவியை அணைத்திருந்த பிடியை சங்கர் இறுக்கினான்.

எத்தனை ஆசைகள் சித்ராவுக்கு?

வதவதவென்று குழந்தைகள் வேணடாமாம் ஒரு பெண், ஒரு பிள்ளை போதுமாம். பிரமாதமாக இருவரையும் படிக்க வைப்பதோடு பெண்ணுக்கு நாட்டியம், பாட்டு கற்றுத் தரவேண்டுமாம்.

பிள்ளையை என். ஸி. ஸி. யில் சேர்த்து. டென்னிஸ் சாம்பியனாக்க வேண்டுமாம். அப்புறம் இரண்டு பேருக்கும் நீச்சல், பியானோ, குதிரை ஏற்றம் என்று அத்தனையிலும் பயிற்சி தந்து ஆல் ரவுண்டர்களாக்க வேண்டுமாம்.

ஆ! சங்கர் சித்ரா பசங்களா? ப்ரிலியண்ட் சில்ரன் ஆயிற்றே? என்று ஊர் பூராவும் மூக்கில் விரலை வைக்க வேண்டுமாம்...

இன்னும்...இன்னும்...

ஜனனமே இல்லாத எத்தனை ஆசைகள்!

ஒன்றுகூட நிஜமில்லாமல் போன எத்தனை நிழல்கள்?...

முதல் வெட்டிங் ஆனிவர்ஸரி ஆன மறுமாசம் சித்ராவுக்கு காரணமில்லாமல் ஜுரம் வந்தது.

நூற்றி மூன்று, நாலு...

இரண்டு நாளில் சித்ரா துவண்டு போனாள்.

இடுப்பு, கால்களில் குடைச்சல், தலைவலி...

ஃப்ளுவா?

இல்லை டைபாய்டா?

'ஊர் பூராவும் இப்ப டைபாய்ட்தான்' ...று சொல்லிக் கொண்டே நாலாம் நாள் டாக்டர் வைடாலின் டெஸ்ட் எடுத்தார்

ஆறாம் நாள் 'கால் மரத்துப் போன மாதிரி இருக்கு' என்றாள் சித்ரா.

மேற்கொண்டு இரண்டு நாட்கள் ஆவதற்குள் இடுப்பை அசைப்பது, திருப்புவது ப்ரும்மப் பிரயத்னமாய் இருந்தது.

அப்புறம்?

அப்புறம் என்ன?

முதுகு தண்டில் 'வைரஸ்' அட்டாக்.

ஏன் வருகிறது, எப்படி வருகிறது, எதனால் வருகிறது என்று இன்று வரை வைத்தியத் துறைக்கு புரிபடாமல் டிமிக்கிக் கொடுக்கும் 'வைரஸ்' நுண்கிருமிகள் சித்ராவின் முகுதுத் தண்டில் புகுந்து கொண்டு அதை பாதித்ததில், நினைத்த நினைப்பில்லாமல் அவள் இடுப்புக்கு கீழே ஸ்வாதீனத்தை இழந்து விட்டாள் என்பதை அறிந்த போது சங்கரும் உற்றோரும் அதிர்ந்துதான் போனார்கள்.

''ஹௌ ஈஸ் திஸ் பாஸிபிள் டாக்டர்? அப்படி கூட ஒரு வைரஸ் உண்டா? ஒரு அறிகுறி இல்லாமல், மருந்துகளுக்கு கட்டுப்படாமல், முதுகு தண்டை தாக்கி, பாரிச வாயுவை உண்டாக்குவது சாத்தியமா? எந்த சிகிச்சையும் சரிபடாதா? பணம் பெரிசில்லை டாக்டர்... எவ்வளவு செலவழிந்தாலும் பரவாயில்லை டாக்டர்...''

என்ன துடித்து என்ன?

என்ன வைத்தியம் பார்த்து என்ன?

ஒன்றுக்கும் கடுக்கத்தனை பலன்கூட இல்லா போனது தானே நிஜம்?



''தனியா இருந்து டெல்லிலே அவஸ்தைப்பட வேணாம் நா ங்க கோயமுத்தூருக்கு கூட்டி வந்துடுங்க...என் ஃபாக்டரி ...ாறுப்பை நீங்க ஏத்துகிட்டு இங்கேயே இருந்திடுங்க... ந ங்க கிட்ட இருந்தா உங்களுக்கு தெம்பா இருக்கும்...''

''ஆமாம்பா. அவங்க சொல்றதும் நியாயம்தான். ஒண்ணு அங்க போ, இல்ல, நம்ம ஊரோட வந்துடு. இரண்டு பக்கமும் பணங் காசுக்கு பஞ்சம் இல்லே நீ ஒண்டியா தவிக்க வேணாம். நாங்க யாராவது உங்க கூடவே தங்கிடலாம்னு பாத்தா, அவங்க அவங்களுக்கு குடும்பம், பாக்டரி, நிலம், நீச்சுனு பொறுப்பு இருக்கு. அத்தனையும் விட்டுட்டு வரமுடியாது. அதனால் நீ சித்ராவோட நம்ம பக்கம் வந்திடறதுதான் எல்லாருக்கும் நல்லது...''

சித்ராவைப் பெற்றவரும், இவனைப் பெற்றவர்களும் எவ்வளவோ கெஞ்சினார்கள். சங்கர் அசைந்து கொடுக்கவில்லை.

''எனக்குப் போதுமான அளவு சம்பளம் வருது, கம்பெனிலே ஆள், வீடு கொடுத்திருக்காங்க...இப்போதைக்கு இதெல்லாம் வைச்சிட்டு என் மனைவியை என்னால சௌக்கியமா பாத்துக்க முடியும்...ஏதாவது உதவி தேவைப் பட்டா கண்டிப்பா நானே கேக்கிறேன். தயவுசெய்து எங்களுக்காக யாரும் அளவுக்கு மீறி பரிதாபப் படாதீங்க. சித்ரா இப்படி ஆயிட்டதை நா பெரிய குறையா நினைக்கலை. அதனால நீங்களும் பெரிசு பண்ணாம, எங்களை நிம்மதியா இருக்க விடுங்க...''

பெரியவர்கள் இந்த பதிலால் வாயை மூடிக்கொண்டு விட்டார்கள்.

ஆனால் சித்ரா?

ஆறுமாசம் பேசாமல் இருந்தாள். அப்புறம் தன் இயலாமை தனக்கே தாங்க மாட்டாமல் போக அவனிடம் கெஞ்சினாள்.

''ப்ளீஸ் டிவோர்ஸ் மீ...ஆயுசு பூராவும் என்னே அவஸ்தைப் படணும்னு உங்களுக்கு தலை எழுத்தா?இ சுகமும் தர முடியாத என்னால உங்களுக்கு பிரயோஜட எதுவும் இல்லே...ப்ளீஸ் சங்கர்...ப்ளீஸ். நா நா யோசனை பண்ணிட்டுதான் பேசறேன்...ப்ளீஸ்...''

சீறிக் கொண்டு எழுந்த கோபத்தை அடக்கினபடி சங்கர் கேட்டான்.

''யு லவ் மீ சித்ரா?''

''வித் ஆல் மை ஹார்ட்...''

''என்னிக்கும்?''

''நா சாகறவரைக்கும் சங்கர்...''

''அப்ப—எனக்கு இந்த மாதிரி அட்டாக் வந்திருந்தா நீ என்ன பண்ணியிருப்பே? டிவோர்ஸ் செய்திட்டு வேற ஒருத்தனை கல்யாணம் பண்ணிப்பியா?''

''ஏன் இப்படி பேசறீங்க சங்கர்?''

''பின்னே? என்னை மட்டும் ஏன் வித்தியாசமா நினைச்சு நீ பேசறே சித்ரு? உன்னை கவனிக்கிறது எனக்கு சுமையா இல்லே. நீ இப்படி படுத்த படுக்கயா இருக்கறது எனக்கு எந்த விதத்திலும் கஷ்டமா இல்லே...நா உன் மனசை காதலிக்கிறேன். உன் உடம்பை இல்லே...இது உனக்கு ஏன் புரியலை டார்லிங்?''

விசித்து விசித்து அழுத வண்ணம் அன்று சித்ரா கணவனை இறுக அணைத்துக் கொண்டாள்.

அதன் பிறகு அவள் இதுகுறித்து எதுவும் பேசினவளில்லை.

ஆனால் சிரத்தையுடன் மருந்துகளை சாப்பிட்டாள். கொஞ்சமாவது தன் உடல் நிலை தேற வேண்டும் என்ற பிடிவாதத்தோடு பிஸியோ தெரபி பயிற்சிகளை விடாமல் செய்தாள்.



சக்கர நாற்காலியில் அமர்ந்தபடி தன்னால் இயன்ற வந் த்தில் வீட்டை கவனித்து, ஆட்களை மேய்த்து, கணவ நாடு கு பணிவிடைகள் செய்ய அவள் முனைந்தது கூட பயல றுக்க மாட்டாதது போல மூன்று வருஷங்களுக்குப் திரும்ப இன்னொரு வைரஸ் அட்டாக்.

இந்த முறை, கைகளின் ஸ்வாதீனம் பெருமளவுக்குப் போனதோடு, அருவியாய் கொட்டின பேச்சு, திக்கு வாயாகி விட்டது.

மார்பு புடவையை சரி செய்ய, ஒரு வரி பேசக் கூட ஏக முயற்சிகள், உதடுகளின் கைகளின் துடிப்புகள், நாக்கின் கோணல்கள்.

சிகரெட் கையைச் சுட சங்கர் விரல்களை உதறிக் கொண்டான்.

ஆயாசத்துடன் படுக்கை அறைக்குள் நுழைந்த போது சித்ரா முழித்துக் கொண்டு விட்டதைப் பார்த்து அருகில் சென்று உட்கார்ந்தான்.

''குட் மார்னிங் சித்ரு...''

''குட்... மார்...''

அவள் முடிப்பதற்காகக் காத்திராமல் சங்கர் குனிந்து மென்மையாய் முத்தமிட்டான்.

''ஹாப்பி வெட்டிங் ஆனிவர்ஸரி டார்லிங்...மெனி மெனி ஹாப்பி ரிட்டர்ன்ஸ் ஆஃப் த டே...''

சட்டென்று சித்ராவின் கண்கள் கலங்கிப் போயின குளமென ஊறிய நீர் கோடாக வழியத் தொடங்கியது.

''நே...நோ...'' என்றவள் ''மெ...மெனி...ரிடர்ன்ஸ் வே...வேணாம்'' என்றாள்.

''ஏம்மா வேண்டாம்?''

''நீங்க ப...ப...படற கஷ்டம் போ...போதாதா?''

'எனக்கு ஒரு கஷ்டமும் இல்லே சித்ரு...ஐம் ( ஹாப்பி...வீணா மனசு வேதனைப் படாதேம்மா ...ராத்திரி நல்லா தூங்கினியா? இன்னிக்கு லீவு போ நா உன் கூடவே இருக்கட்டுமா?''

கன்னத்தில் வழிந்த நீரை துடைத்து அவன் பு கவும் சித்ராவும் மெதுவாகச் சிரித்தாள்.

கதவைத் திறந்து 'ஆயா, அம்மா எழுந்துட்டாங்க, கவனி' என்று குரல் கொடுத்த போது, போன் ஒலிக்க சங்கர் ரிஸீவரை எடுத்தான்.

அவனுடைய எம். டி. பேசினார்.

சேர்மனிடம் விவரத்தை சொன்னாராம். அவர் உடனடியாக ஆவன செய்து விடு என பச்சை விளக்கு காட்டி விட்டாராம்.

''மெட்றாஸ் ஃபாக்டரிக்கு உங்களை ஜி. எம். மாக நியமித்து, ட்ரான்ஸ்ஃபர் பண்ண இன்று ஆர்டர் கொடுக்கப் போகிறேன் சந்தோஷம் தானே சங்கர்?''

சித்ராவுக்கு இரண்டாவது அட்டாக் ஆனதிலிருந்து டெல்லியில் அவளை தனியாக பார்த்துக் கொள்வது சிரமமாக இருக்க, முழு நேரம் கவனிக்க ஆள் இருந்தாலும் சொந்தக்காரர்கள் கிட்டத்தில் இருப்பது நல்லது என்று தோன்ற, பதினைந்து நாட்களுக்கு முன் எம். டி. ஐ பார்த்து தன் நிலைமையை சங்கர் விளக்கினதை அவர் புரிந்து கொண்டு, சேர்மனையும் புரிந்துகொள்ள வைத்ததின் விளைவுதான் இந்த போன் கால்.

நன்றியை தெரிவித்து போனை வைத்த சங்கர், சித்ராவிடம் விஷயத்தைச் சொன்னான். கோயமுத்தூருக்கும், தூத்துக்குடிக்கும் ட்ரங்கால் போட்டு பேசினான்.

சென்னை கம்பனியோடு தொடர்பு கொண்டு, ஊருக்கு சற்று ஒதுக்குப்புறமான பகுதியில் தோட்டம் இருக்கும் தனி வீட்டை வாடகைக்கு எடுத்து பர்னிஷ் செய்து விரை வில் தயார் செய்யச் சொன்னான்.



அடுத்த பதினைந்தாம் நாள் வீடு ரெடி, என்று தகவல் வந்த பிறகு டெல்லி வீட்டை ஒழித்துக்கொண்டு தமிழ் நாடு எக்ஸ்ப்ரஸில் சித்ரா, ஆயாவுடன் சென்னைக்கு சங்கர் பயணமானான்.

## 2

ஏ.ஸி. கம்பார்ட்மெண்டில் சித்ராவை படுக்க வைத்து ஆயாவைத் துணைக்கு உட்காரச் செய்தபின் பிளாட்பாரத்தில் இறங்கி புத்தக ஸ்டாலை நோக்கி சங்கர் சென்றான்.

ஹெரால்ட் ராபின்ஸ், ட்ரிவேனியன்...

எல்லாம் ஏற்கனவே படித்த புஸ்தகங்கள்.

மாக்ஸ் எர்ரிலிக்கின் 'தி பாண்ட்' என்ற புஸ்தகம் கண்களைக் கவர அதைக் கையில் எடுத்தான்.

இந்த எழுந்தாளரின் இரண்டு நாவல்களை அவன் ஏற்கனவே படித்திருக்கிறான். பூர்வ ஜென்மம, வழிபாடு, தியானம் போன்ற சமாசாரங்களை எல்லாம் வைத்துக் கொண்டு எழுதுவதில் மன்னன்.

புத்தகத்துக்கான விலையைக் கொடுத்துவிட்டு பாக்கி சில்லறைக்காகக் காத்து நின்ற நிமிஷத்தில் அவர்கள் அங்கு வந்தார்கள்.

ஒரு பெண், சின்ன வயசுதான்.

நல்ல உயரம், மாநிறம், அடர்த்தியான கேசம்.

மேக்கப் அதிகம் போடாவிட்டாலும் என்னைப் பாரேன் என்று இரண்டாம் தரம் பார்வையை, தன் பக்கம் இழுக்கும் முகம், பெரிய கண்கள்.

ப்ரின்டட் காட்டன் புடவை. காதுகளில் சின்ன முத்துத் தோடு. வலது கையில் மெல்லிய வளை. இடதில் வாட்ச். கழுத்தில் ஒன்றும் இல்லை.

அவள் அருகில் ஐந்தாறு வயசுப் பெண் குழந்தை.

அதே மாநிறம், குண்டுக் கண்கள், சுருட்டை முடி.

அக்கா—தங்கையா?

பார்க்க இரண்டு பேரும் பளிச்சென்று இருக்க, ஒரு நிமிஷம் அவர்களைக் கவனிக்கிறோம் என்ற உணர்வே இல்லாமல் சங்கர் நின்றான்.

''மம்மி...ப்ளீஸ்...''

அம்மா, மகளா?

''ஐ வாண்ட் தட் பக்ஸ் பன்னி காமிக்ஸ் மம்மி,ப்ளீஸ்''

இவர்கள் எந்த ஊரைச் சேர்ந்தவர்கள்?

உடம்பின் வளர்த்தியைப் பார்த்தால் நார்த் இண்டியன் மாதிரி இருந்தாலும், பஞ்சாபிக்கு உரித்தான நிறம் இல்லையே!

மஹாராஷ்ட்ரா?

கேரளா?

''ஹோட்டல்லே நாலு வாங்கிக் கொடுத்ததைப் படிச்சிட்டியா நித்தி?''

ஓ! தமிழ்க்காரர்களா?

''இல்லேம்மா...''

''அத முடிச்சப்புறம்தான் வேற வாங்கித் தருவேன். சும்மா கண்ல பார்க்கறதை எல்லாம் வாங்கணும்னு பிடிவாதம் பண்ணறது பாட் ஹாபிட் நித்தி...''

''ஸாரிம்மா...''



புது பெமினாவையும், விகடனையும் வாங்கிக் கொண்டு அந்தப் பெண், குழந்தையுடன் நகர்ந்தாள்.

பெண்ணை ரொம்பக் கண்டிப்பாக வளர்ப்பவளோ? அந்தக் குழந்தையும் 'நோ' என்ற உடன் சொன்ன பேச்சைக் கேட்டுவிட்டதே... சமர்த்துதான். நெற்றியில் பொட்டைக் காணோம், கழுத்தில் தாலியைக் காணோம்... க்ரிஸ்டியன்ஸ்?

கணவன் எங்கே காணோம்? ஊருக்குப் போக வந்திருக்கிறார்களா, இல்லை வழி அனுப்பவா?

சட்டென்று சங்கர் தன்னை உலுக்கிக் கொண்டான்.

என்ன ஆயிற்று இன்று எனக்கு?

எந்தப் பெண்மணி எப்படி இருந்தால் எனக்கு என்ன? யாரோடு வந்திருந்தால் என்ன? பிரயாணம் செய்தால் என்ன, செய்யாவிட்டால் என்ன?

என்ன புதுப் பழக்கம் இதெல்லாம்...

தன் செய்கைக்குத் தானே வெட்கப்படுகிற பாவனையுடன் சில்லறை, புத்தகத்தோடு சங்கர் கம்பார்ட்மெண்டை நோக்கிப் போனான்.

பிரயாணம் அதிகக் களைப்பைத் தரலாம் என்று டாக்டர் சித்ராவுக்கு ஸெடடிவ் கொடுத்திருந்ததில் அவள் அரை குறைத் தூக்கத்தில் இருந்தாள்.

இவனைக் கண்டதும் ஆயா எழுந்து நின்றாள்.

உட்கார் என்று அவளுக்கு சைகை காட்டிவிட்டு சங்கர் எதிர் பர்த்தில் அமர்ந்தான்.

சித்ரா கண்களைத் திறந்து இவனைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

''என்னமமா, ஆர், யு கம்பர்டபிள்.''

''[illegible]ப்...''

''

"கொஞ்சநாழி தூங்கப்பாரு—இப்ப ட்ரெய்ன் புறப்பட்டுடும். ஒன் அவர் கழிச்சு ப்ரேக்பாஸ்ட் சாப்பிடலாம்..."

சித்ரா கண்களை மூடிக் கொண்டாள்.

வண்டி புறப்பட்டதும் சங்கர் 'திபாண்ட்' புஸ்தகத்தைக் கையில் எடுத்தான்.

திடீரென்று சின்னக்குழந்தையின் கலகலவென்ற சிரிப்பு.

' கமான் நித்தி...ஒண்ணு காமிக்ஸ் படி... இல்லே ஐஸ்க்ரீம் தின்னு...மேலெல்லாம் சிந்திகிட்டு, சிரிச்சுகிட்டு...டர்டி கேர்ல்..." பாஸேஜில் ஒலித்த அந்தப் பெண்ணின் குரலை அடுத்து சில நொடிகளில் டிக்கெட் பரிசோதகர் வரலாம் என்ற நினைப்பில் திறந்து வைத்திருந்த கதவு அருகில் நித்தி வந்து நின்று கொண்டாள்.

ரயில் புறப்படுமுன் அவள் தாய் அவளுக்கு சாக்கோபார் ஐஸ்க்ரீம் வாங்கித் தந்திருக்க வேண்டும்.

வாய், கன்னமெல்லாம் ஐஸ்க்ரீம்.

குச்சியில் பாக்கி இருப்பதை ஒழுங்காகத் தின்ன முடியாமல் அவளுக்கு ஏனோ சிரிப்பு பொங்கி எழுந்தது.

"அந்த பக்ஸ் பன்னி இருக்கு பாருங்க மம்மி... அது... அது..." திரும்ப சிரிப்பு பொத்துக்கொண்டு வர "ஓ. கே. நா பாத்ரூம் போய் வாஷ் பண்ணிகிட்டு வந்திடறேன்" என்று சிரிப்பு மாறாமலேயே அவள் ஓடினாள்.

காமிக் புத்தகம் படிக்கும் ஜோரா? பக்ஸ் என்ற முயல் குட்டி செய்யும் பொல்லாத்தனங்களைப் படித்த பின்பு உண்டான மகிழ்ச்சியா?

சங்கர் எழுந்து கதவிடம் சென்று நின்றுகொண்டான்.

ஒரு நிமிஷத்தில் கை, முகத்தை அலம்பி, ஈரம் சொட்டச் சொட்ட நித்தி பாத்ரூமிலிருந்து வந்து, இவனைக் கடந்து பக்கத்து கூபேயினுள் நுழைந்ததும் அந்தப் பெண் எழுந்து, கதவைச் சாத்தினாள். ' ம்.



ஆக்ராவில் வண்டி நின்றபோது ஏதோ ஒரு ஆர்வத்தின் காரணமாய் பெயர் பலகையிலிருந்து அவள் மிஸஸ் பாஸ்கர் பெண் மிஸ் பாஸ்கர் என்பதை சங்கர் தெரிந்து கொண்டான்.

அதன்பிறகு அடிக்கடி பக்கத்து கம்பார்ட்மெண்டிலிருந்து நித்தியின் சிரிப்பும், குரலும் கேட்டுக்கொண்டே இருக்க, சாப்பாட்டு நேரத்தில் சித்ராகூட அதைப்பற்றிக்கேட்டாள்.

"கு...குழந்தையா?"

"ம்...பக்கத்து கூபேலே இருக்கா; வெரி ஸ்வீட் சைல்ட்..."

பிற்பகலில் பாத்ரூம் போன குழந்தை இவர்கள் பெட்டியில் எட்டிப் பார்க்க சித்ராவின் முகம் அவளைக் கண்டதில் பிரகாசிக்க, குறிப்பு உணர்ந்து சங்கர். 'கம்இன்' என்றான்.

அவள் தயக்கத்துடன் கதவருகே நின்றாள்.

"ஆண்ட்டி ஈஸ் நாட் வெல்?"

ரொம்ப அக்கறையுடன் அவள் கேட்கவும், சங்கர் சிரிப்புடன் "எஸ்" என்றான். அப்புறம்..."உள்ளே வாம்மா" என்றான்.

"நீங்க தமிழா, அங்கிள்?"

"ம்..."

"நாங்களும் தமிழ்தான்..."

இப்போது இரண்டடி வைத்து அவள் உள்ளே வந்தாள்.

"உன் பேர் என்னம்மா?"

"நித்யா அங்கிள்"

"ஸ்வீட் நேம்...என்ன சாப்பிடறே? பிஸ்கட் ஆப்பிள்?"

"ஒண்ணும் வேணாம் அங்கிள்..."

சித்ராவின் ஆர்வம் குழந்தையிடம்இருப்பதைஉணர்ந்து "இங்க வா நித்யா...ஆண்ட்டி வான்ட்ஸ் டு டாக் டு யு" என்றான். நித்யா கிட்டத்தில் வந்து நின்றாள்.

சித்ரா "பி...பிஸ்கட்" என்றாள்.

சங்கர் கூடையிலிருந்து முழு கஸ்டர்ட் க்ரீம் பிஸ்கெட் பொட்டலத்தை எடுத்து நீட்டினான்.

"வேணாம் அங்கிள்"

"அம்மா திட்டமாட்டாங்க, வாங்கிக்க."

சித்ரா "ப்ப்...ளீஸ்..." என்றாள்.

"ஆண்ட்டி ஆசையா சொல்றாங்க... எடுத்துக்க நித்யா..."

நித்யா சித்ராவை ஊன்றிப் பார்த்தாள். பிறகு, சட்டென்று அவள் நெற்றியில் கை வைத்து "ஜுரமா ஆண்ட்டி?" என்றாள்.

அந்தக் கரிசனமும், பரிவும் இதயத்தைத் தொட, பிரயத்தனத்துடன் வலது கையைத் தூக்கி நித்யாவின் ப்ராக்கை பிடித்து அருகில் இழுத்து அந்தக் குழந்தையின் கையை உதட்டுக்கு எடுத்துப் போய் முத்தமிட்டாள்.

"நித்யா...வேர் ஆர் யூ...?"

கதவருகில் மிஸஸ் பாஸ்கர்.

"இந்த ஆண்டிக்கு உடம்பு சரியில்லேம்மா...பாவம்... அதுதான் உள்ளே வந்தேன்."

என்ன உடம்பு என்கிற பாவனையில் அவளுடைய புருவங்கள் லேசாக மேலே ஏறின.

"ப்ளீஸ் கம் இன்..."

சங்கர் எழுந்து நின்று வரவேற்றான்.

"பரவாயில்லே...இவளுக்குத் துறுதுறுப்பு அதிகம் ஒண்ணும் தொந்தரவா இல்லியே?"

"ஒ...நோ...நாட் அட்...ஆல்..."



நித்யா தாயிடம் போய் நின்று பிஸ்கெட் பாக்கெட்டை நீட்டினாள்.

"அங்கிள் கொடுத்தார்ம்மா......"

சங்கடத்துடன் சங்கரை ஏறிட்டவள், "தாங்க்ஸ்" என்றாள். பிறகு "வா போகலாம் அங்கிளும், ஆண்ட்டியும் ரெஸ்ட் எடுக்கட்டும்" என்று நித்யாவுடன் தன் பெட்டிக்குப் போனாள்.

இரவு படுக்கப் போவதற்குள் இரண்டு, மூன்றுமுறை நித்யா இவர்கள் கம்பார்ட்மெண்டுக்கு வந்துவிட்டாள்.

சரியான அரட்டை.

தனக்கு ஆறு வயசு ஆவதைச் சொன்னாள். தாங்கள் சென்னையில் வசிப்பதைச் சொன்னாள். தான் குட்ஷெப்பர்டில் படிப்பதைச் சொன்னாள். அம்மாவுடன் காஷ்மீரில் விடுமுறையைக் கழித்துவிட்டு வருவதைச் சொன்னாள்.

"அப்பா வரலியா நித்யா?"

"எனக்கு அப்பா இல்லே அங்கிள். நா இரண்டு வயசு குழந்தையா இருக்கறப்போ அப்பா இறந்துட்டார்னு மம்மி சொல்வாங்க."

மிஸஸ் பாஸ்கர் ஒரு விடோவா? அதான் பொட்டு, தாலி என்று எதுவும் இல்லையா?

பதற்றம் இல்லாமல் யதார்த்தமாக நித்யா பேசியது வேதனையைத்தர சங்கர் அவசரமாக பேச்சை மாற்றினான்

நித்யா பேசப் பேச அவர்கள் வசதியான வாழ்க்கை வாழ்பவர்கள் என்பதை சங்கரால் புரிந்து கொள்ள முடிந்தது.

அம்மா பெண்ணுக்கு நடுவில் இருக்கும் ஆழமான பிணைப்பைத் தெளிவாக உணர முடிந்தது.

"நா பெயிண்டிங் காம்படிஷன்லே ப்ரைஸ் வாங்கிக்கேனே..."

''எங்க ஸ்கூல் ட்ராமாலே நாதான் ஸ்னோ வொயிட்.''

''தினம் எங்கம்மாவும் நானும் பீச்சுக்குப் போவோம்...''

''ராத்திரி எங்கம்மா தினமும் எனக்கு பெட் டைம் ஸ்டோரி சொல்லுவாங்க...''

''எங்கம்மா பாடுவாங்க பியானோ வாசிப்பாங்க பெயிண்ட் பண்ணுவாங்க...''

எங்கம்மா...எங்கம்மா...வாய்க்கு வாய் எங்கம்மா பெருமை...

பெண் இத்தனை பேசுவதற்கு அம்மா நேர் எதிர் மாறாகவே இருந்தாள். இரண்டு வார்த்தை பேசுவதற்குகூட யோசிக்கிறவளாக இருந்தவள், ஒரே ஒரு தடவை மட்டும் கதவருகே நின்றுகொண்டு ''உங்க மிஸஸ்க்கு உடம்பு சரியில்லையா?'' என்று கேட்டாள்.

ஆமாம் என்று சங்கர் தலை அசைத்த பின்பு சிலவினாடிகள் அப்படியே நின்று 'ஐம் ஸாரி' என்கிற பார்வையாய் பார்த்தாளே தவிரவும் ''ஏன்! என்ன உடம்பு?'' என்று எதுவும் துருவவில்லை.

சென்னையை வண்டி நெருங்கியதும் மகளை வாஷ் பண்ணி, உடை மாற்றி, சிங்காரித்தபின் மிஸஸ் பாஸ்கர் தானும் முகம் அலம்பி, புடவை மாற்றித் தயாரானாள்.

ஆயாவின் உதவியுடன் சித்ராவுக்குத் தேவையானவைகளை கவனித்துவிட்டு, சங்கரும் இறங்க ரெடி ஆனான்.

ஸ்டேஷனுக்கு சித்ராவின் பெற்றோரும், அவன் தந்தையும் வந்திருந்தனர். கம்பெனி மானேஜர் கார், ஆட்களுடன் வந்திருந்தார். கூடவே ஒரு ஸ்ட்ரெட்சர்.

ரயில் நின்றதும் சங்கர் பக்கத்து கம்பார்ட்மெண்டில் எட்டிப் பார்த்தான்,

''ஸோ—பை நித்யா'' நு



''பை பை அங்கிள்'' –

சங்கர் பார்வையை நிமிர்த்தினான்.

''வாட் அபௌட் யுவர் ட்ரான்ஸ்போர்ட்?'' —

''எங்க கார் வந்திருக்கும். தாங்க்ஸ்.''

ஆட்களின் உதவியோடு சித்ராவை சங்கர் இறக்கின போது, அப்போதுதான் அவளுடைய நோயின் தீவிரம் புரிந்த மாதிரி மிஸஸ் பாஸ்கர் கொஞ்சம் கலங்கி நின்றாள். அப்புறம் மகளின் கையைப் பிடித்துக்கொண்டு சாமான்களோடு வேகமாக நடந்தாள்.

## 3

அன்று அலுவலகத்தில் அத்தனை வேலை இல்லை. ஐந்தரைக்கெல்லாம் சங்கர் வீட்டுக்குக் கிளம்பி விட்டான்.

மெரினா சாலை வழியாக கார் சென்றபோது அந்த மாலை நேரம் உடம்புக்கு இதமாக இருக்க, ''ட்ரைவர் காரை இன்னர் ரோட்லே திருப்பி நிறுத்து'' என்று சொல்ல, அவனும் காந்தி சிலையை அடுத்து உட்பக்கம் சென்ற சாலையில் வண்டியைச் செலுத்தி நிறுத்தினான்.

சந்தியாகால வானம் ரொம்பவும் வெட்கப்பட்டுக் கொண்டிருந்தது.

இறங்கி நடக்கலாமா?

இல்லை இப்படியே அக்கடா என்று பத்து நிமிஷம் உட்கார்ந்துவிட்டுக் கிளம்பலாமா?

மணற்பரப்பில் அத்தனை நெரிசல் இல்லை.

இரண்டும் நாலுமாய் இங்கும் அங்கும் சில மனிதக் கூட்டம், மாங்காய் பத்தை, ஐஸ்கிரீம் வண்டிகள். ஏரோப்ளான், ஏரோப்ளேனாய் பறக்கும் காகிதப்பட்டங்கள்.

இந்த பீச்சென்றால்தான் சித்ராவுக்கு எத்தனை விருப்பம்?

டெல்லியிலிருந்து லீவுக்கு வரும் போதும், திரும்ப போகும்போதும் கட்டாயம் சென்னையில் நான்குநாட்களாவது தங்கவேண்டும் என்பாள். தலல போகிற காரியம் இருந்தாலும் தினம் மாலையில் மெரினாவுக்கு வந்து மணலில் கால் புதையப் புதைய, கையில் சாக்கோபாருடன் சின்னக் குழந்தை மாதிரி ஓடுவாள். முழங்கால்வரை புடவையை உயர்த்திக் ! கொண்டு அலைகளில் நிற்பாள். தண்ணீரில் இறங்க மறுக்கும் கணவனை வம்புக்கு இழுப்பாள்.

''இங்க வந்துநின்று பாருங்களேன்;காலைஅலை வருடிக் கொடுக்கிற சுகத்தை அனுபவிச்சாதான் புரியும்...வாங்க.''

மேட்டில் உட்கார்ந்து அவளுடையகுழந்தைத்தனமான சிலிர்ப்புகளை ரசித்தபடி சங்கர் சொல்லுவான்:-

''எனக்கு வேண்டாம்மா அந்த அனுபவம்...பாண்ட் ஈரமாகி, அதுலே மணல் ஒட்டிக் கிட்டு, காலை அறுத்துக் கிட்டு...ஹக் ...நீ யே... எனக்கும் சேர்த்து அநுபவி டார்லிங்...''

டெல்லியிலும் கோயமுத்தூரிலும் பீச் இல்லாதது அவளுக்கு பெரிய குறை.

''ச்சே...பீச் இல்லாத ஊர்லே பிறந்து வளர்ந்தது போதாதுன்னு இப்ப கடல் இல்லாத ஊர்லயே குடுத்தனமும் பண்றேன்; வாட் எ லக்! ஒவ்வொரு ஊர்லேயும் கடற்கரை ஏன் இல்லே சங்கர்? இந்த மாதிரி பீச் இருந்திட்டா போதும், அப்புறம் வேற பொழுது போ[illegible]கே வேணாம். காலையில் வாக் போகலாம் சாயங்கால மதியா போய் உட்கார்ந்திட்டு வரலாம். நிலா காலங்கள்ந[illegible]



மூன்லைட் டின்னர் சாப்பிடலாம்...அதுக்கெல்லாம் நமக்குக் கொடுத்து வைக்கலியே...''

இப்போது பீச்சில் தனியாய் அமர்ந்திருக்கும் நிமிஷத்தில் சித்ராவுக்கு எதற்குத்தான் கொடுத்து வைத்திருக்கிறது என்ற வேதனை சங்கரை நெருடியது.

அருவியாய் கொட்டி ஆர்ப்பரித்த பெண்ணை முடக்கிப் படுத்த படுக்கையாக்கி... கடவுளே!...இப்படி அநியாயமாக ஒரு துடிப்புள்ள ஜீவனை அடித்துப் போட்டதில் உனக்கு என்ன இன்பம்? லாபம்?

அந்திவானம் சிகப்பிலிருந்த தன் நிறத்தை சாம்பலாக மாற்றிக்கொண்டதும் சங்கர் கடிகாரத்தைப் பார்த்தான்.

ஆறு ஐந்து.

கிளம்ப வேண்டியதுதான்.

ஜன்னல்வழியாகத் தலையைநீட்டி ட்ரைவரைக் கூப்பிட முனைந்தபோது சற்றுத் தொலைவில் வந்து கொண்டிருந்தவர்களை சங்கர் பார்த்தான். மஞ்சள் சேலை காற்றில் படபடக்க,கேசம் பறந்து முகத்தில் விளையாட மிஸஸ் பாஸ்கர். ஸ்கிப் பண்ணி அவளைச் சுற்றிச் சுற்றி வரும் நித்யா.

தண்ணீரில் நின்றுவிட்டு வருகிறார்களா? அப்படித் தான் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் நித்யாவின் ப்ராக்கில் ஏன் இத்தனை ஈரம்?

விவரிக்கத் தெரியாமல் மனசு பரபரக்க, கதவைத் திறந்துகொண்டு சங்கர் கீழே இறங்கினான்.

அவர்கள் இவனைப் பார்க்கவில்லை.

மிஸஸ் பாஸ்கரின் பார்வை நேர்கோடாக இருந்தது. நித்யாவுக்கு விளையாட்டுக் குஷி. இவன் காருக்குமுன்னால் நின்றிருந்த பியட்டை நெருங்கி, ஹாண்ட் பாகிலிருந்து சாவியை எடுத்துக் கதவை மிஸஸ் பாஸ்கர் திறக்க முனைய' [illegible]ன் நாலு எட்டில் அவர்களை நெருங்கி 'ஹலோ' [illegible]ான்.

நித்தியாவின் ஸ்கிப்பீங் நின்றது. ஒரு கணம் திகைத்த வள் கண்களை அகல விரித்தாள். மறுகணம் 'ஹல்லோ அங்கிள்' என்று உற்சாகமாகக் கூவிக்கொண்டு அவனருகில் ஓடிவந்தாள்.

மிஸஸ் பாஸ்கர் நிமிர்ந்தாள். இவனை அடையாளம் கண்டுகொண்ட தினுசில் மென்மையாய் சிரித்தாள்.

"அங்கிள் யாருனு ஞாபகம் இல்லையா மம்மி? ஹி ட்ராவல்ட் வித் அஸ். அங்கிள்... நீங்கள்கூட தினமும் பீச்சுக்கு வருவீங்களா? அப்ப ஏன் நா உங்களை இத்தனை நாளா பாக்கலை? ஆண்ட்டி வரலியா அங்கிள்? அவங்க உடம்பு சரியா போச்சா?"

ரொம்ப பெரிய மனுஷித்தனத்துடன் அவள் நீள நீள மாய் கேள்விகளைக் கேட்டது சிரிப்பை உண்டாக்க, இரண் டாக மடிந்து "மைகாட், இத்தனை வேகமா, இத்தனை கேள்வி கேட்டா எனக்கு பதில் சொல்லத் தெரியாது — ஒன் பை ஒன் நித்யா. ப்ளீஸ்" என்றதும் நித்யாவும் சிரித்து விட்டாள். மிஸஸ் பாஸ்கர் உதடுகளில் புன்னகை.

சங்கர் நிமிர்ந்து அவளை ஏறிட்டான்.

"ஸோ—ஹெள ஆர் யூ?"

"பைன் தாங்க்யூ...ஹெள ஈஸ் யுவர் வொய்ஃப்? அவங்க வரலியா?"

"இல்லே, சும்மா ஆபீஸ்லேந்து வீட்டுக்குப் போற வழிலே காத்துக்காக அஞ்சு நிமிஷம் நின்னேன்..."

மேற்கொண்டு என்ன பேசுவது என்று புரியாத மாதிரி இரண்டு பேரும் அப்படியே நின்றார்கள்.

கார்க் கதவைத் திறந்து ஹாண்ட் பேக்கை உள்ளே போட்டுவிட்டு மிஸஸ் பாஸ்கர் அவன் பக்கம் திரும்பினாள்.

"இட் ஈஸ் கெட்டிங்லேட்...நாங்க கிளம்பறோம். ப[illegible] மீட்டிங் யூ...நித்தி கெட் இன்..."



அவன் பதிலுக்காகக் காத்திராமல் அவள் குழந்தையை ஏற்றிவிட்டு, தானும் ட்ரைவர் ஆசனத்தில் அமர்ந்தாள்.

"குட் நைட்··· அங்கிள். நாளைக்கு வருவீங்களா? நாங்க தினமும் வருவோம்..."

சங்கர் சிரித்துக்கொண்டே 'குட் நைட்' என்று சொல்ல பியட் கிளம்பி கண்ணிலிருந்து மறைந்தது.

அடுத்து வந்த இரண்டு நாட்களும் பாக்டரிக்குப் போய் விட்டதில் டவுன் ஆபீஸுக்கு சங்கர் வரவில்லை.

மூன்றாம் நாள் ஆறுமணி சுமாருக்கு மெரினா வழியாக வீட்டுக்கு வந்தபோது நித்யாவின் 'நாங்க தினமும் வரு வோம் அங்கிள்' என்ற வார்த்தை ஞாபகத்துக்கு வர, ட்ரைவரை உள் பாதையில் ஓட்டச் சொன்னான்.

அந்த வெள்ளை பியட் அன்று நின்றிருந்த இடத் திலேயே நின்றிருந்தது,

ஷூவையும், சாக்ஸையும் கழட்டி வைத்தபின் காரை விட்டுஇறங்கி கடலை நோக்கி சங்கர் நடந்து போனான்.

மணல் மேட்டில் மிஸஸ் பாஸ்கர்.

அலை அடித்து நுரையாக மாறும் இடத்தில் நித்தியா.

அவனை முதலில் பார்த்தது நித்யாதான்.

"ஹேய், அங்கிள்...அம்மா யார் வந்திருக்காங்க. பாருங்க..."

ஈரத்தோடு ஓடி வந்த நித்யா "வாங்க அங்கிள். அலைல நிக்கலாம்" என்று கையைப் பிடித்து இழுத்தாள்.

"ஐயோ... அலைல நிக்கவா? நா வரலைம்மா..."

"வொய் அங்கிள்? பயமா?"

"ஆமா— ரொம்ப பயம்—"

[illegible]த்யா கையைத் தட்டிக்கொண்டு சிரித்தாள்.

"இத்தனை பெரியவங்களா இருக்கீங்க... அப்புறமும் பயமா அங்கிள்? இங்க பாருங்க. எனக்கு பயமே இல்லே. நா தினமும் தனியாதான் நிப்பேன்..."

நித்யா அலைகளில் இறங்கி இப்படியும், அப்படியும் ஓடினாள்.

அந்த ஓட்டமும், சிரிப்பும் சித்ராவின் நினைப்பை சங்கரின் நெஞ்சில் கீறிவிட்டது.

சித்ரா ஆசைப்பட்ட விதத்தில் அவளுக்கு ஒரு குழந்தை பிறந்திருந்தால் அது இப்படிதான் துறு துறு வென்று, சிரித்துக் கும்மாளமிட்டுக்கொண்டு தண்ணீரில் அலையுமோ?

"அங்கிள், நீங்க வரப்போறதில்லையா?"

"நித்தி...அவரைத் தொந்தரவு பண்ணாதே .."

சங்கர் மிஸஸ் பாஸ்கர் பக்கம் திரும்பினான்.

"மே ஐ ஸிட்?"—

"ப்ளீஸ்..."

உட்கார்ந்தான்.

"இன்னிக்கும் ஆபீஸ்லேந்து நேராதான் வரீங்களா?"

"ம்..."

"இல்லே, இன்னிக்கும் உங்க வொய்ஃப்பை காணோமேனு கேட்டேன்..."

குரலில் அத்தனை ஸ்னேகபாவம் இல்லாத மாதிரி தோன்ற சங்கர் பார்வையை நிமிர்த்தினான்.

ஏண்டா தினமும் தனியாய் வருகிறாய்? மனைவியை பீச்சுக்கு அழைத்து வரக் கூட உனக்கு மனசு இல்லையா என்று நினைத்துக்கொண்டு கேட்கிறாளா?

சங்கர் பார்வையை கடலிடம் ஓடவிட்டான். ஒ[illegible] பெரிய கிளிஞ்சலினால் மணலைத் துளாவிக்[illegible]னாள் சன்னக் குரலில் "நா பீச்சுக்கு கூட்டி வர்ற [illegible]



சித்ரா இல்லே. ஷி ஈஸ் அன் இன்வேலிட்..." என்றதும் மிஸஸ் பாஸ்கர் அவசரமாகப் பேசினாள்.

"ஐம் ஸாரி...நா பர்ஸனலா பேசி இருந்தா, மன்னிச்சுடுங்க...ஐ டிண்ட் மீன் இட்..."

சங்கர் மெல்லியதாய் புன்னகைத்தான்.

"இதுல நீங்க வருத்தப்பட ஒண்ணுமே இல்லே. எங்க கூட ட்ராவல் பண்ணினப்பவே உங்களால இதை கெஸ் பண்ண முடிஞ்சிருக்கும்னு நா நினைச்சேன்..."

"ஸ்டேஷன்ல இறங்கினதும் ஸ்ட்ரெச்சரைப் பார்த்து என்ன இதுனு நா நினைச்சது நிஜம்தான். பட், அவங்க ஒரு இன்வாலிட்னு நா நினைக்கலை. ஐம் ஸாரி மிஸ்டர்—"

"சங்கர்."

"ஐம் மிஸஸ் பாஸ்கர்"—என்றவள் சில வினாடிகள் தாமதித்து விட்டு "அனுராதா" என்று சேர்த்தாள்.

"போகலாமா மம்மி..."

இருவரும் எழுந்தார்கள்.

எதுவும் பேசாமல் காரை அடைந்து 'குட் நைட்' என்று மட்டும் சொல்லிப் பிரிந்தார்கள்.

## 4

காலை வீசிப் போட்டு நடந்து ஸ்னேக் பார்க் திருப்பத்தை சங்கர் கடக்க முயன்றபோது 'அங்கிள்' என்ற [illegible]ருக்கமான குரல் கேட்டது

வெள்ளை பியட்டில் அனுராதா, பக்கத்தில் நித்யா.

சற்றும் எதிர்பார்க்காத விதமாய் அவர்களை அந்தக் காலை நேரத்தில் சந்தித்தது சந்தோஷத்தை உண்டாக்க, அதை மறைக்காமல் சங்கர் ''ஹலோ தேர்; குட்மார்னிங்'' என்றான்.

''குட்மார்னிங்—எங்கே இந்தப் பக்கம் மிஸ்டர் சங்கர்? அதுவும் நடந்து?'

''காலைல வாக் போறப்போ அடையார்லே ஒரு பிரெண்டைப் பார்த்தேன். நேரம் போனது தெரியலை... வாட் அபௌட் யூ?''

''இங்கதான்; ஸ்னேக் பார்க்கைப் பார்க்கலாம்னு வந்தோம்.''

''இத்தனை நாளா மெட்றாஸ்லேதானே இருக்கீங்க? அப்படியுமா இன்னும் இதைப் பார்க்கலை?''

''ஓ! நிறையத் தரம் பார்த்தாச்சு அங்கிள். பட், இன்னிக்கு ஸாடர்டே. விஷம் எடுப்பாங்க. அதைப் பார்க்கத்தான் வந்தோம்...''

''இத்தனை சுருக்கவா? மணி இன்னும் ஒன்பது கூட ஆகலை?''

''எப்ப வெனம் எடுப்பாங்கனு தெரிஞ்கிட்டு வரலாம்னா இல கேட்டாத்தானே? நேத்திலேந்தே ஒரு நச்சரிப்பு...''

பின்னால் ஒரு கார் வந்து ஹாரன் செய்ய அனுராதா முதல் கியரைப் போட்டாள்.

''நீங்க இந்த ஸ்னேக் பார்க்கைப் பார்த்திருக்கீங்களா அங்கிள்?'' அவசரமாக நித்யா கேட்டதற்கு சங்கர் இல்லை என்று தலை ஆட்டினான்.

''அப்ப, கம் வித் அஸ் அங்கிள்...ப்ளீஸ்.''

''இல்லேம்மா. எனக்கு வேலை இருக்கு...''

''ப்ளீஸ் அங்கிள்.''



நித்யா கதவைத் திறந்துவிட, ஏறலாமா வேண்டாமா என்று சங்கர் யோசித்த நிமிஷத்தில் பின்வண்டி ஓட்டி பொறுமையை இழந்து தலையை ஜன்னலுக்கு வெளியில் நீட்டி ''நடு ரோட்டுலே நின்னுட்டுதான் ,பேசணுமா? ஓரத்துக்குப் போகத் தெரியாதா?'' என்று கத்த அனுராதா தலையைத் திருப்பி ''ப்ளீஸ் வாங்க'' என்றதும் சங்கர் வண்டியில் ஏறிக் கொண்டான்.

கார் பார்க்கிங்கை அடைந்து வண்டியை நிறுத்தி பூட்டினார்கள். டிக்கெட் வாங்கிக் கொண்டு உள்ளே போனார்கள்.

காலை நேரமாதலால் கூட்டம் அதிகமில்லை.

திருப்பதியிலிருந்து நேராக ஏர்போர்ட்டையும் என்.டி. ராமாராவையும் பார்த்து முடித்தபின் இங்கு வந்திருந்தது ஒரு கும்பல்.

சில இளவட்டங்கள்.

ஏற்கனவே அடிக்கடி வந்து பழக்கம் ஆகி இருந்ததால் 'அங்கிள் இங்க வாங்க, இந்த பாம்பைப் பாருங்க' என்று சங்கரை சுவாதீனத்துடன் நித்யா இழுத்தடித்தாள்.

பெரிய சிமெண்ட் தொட்டிக்குள் புதர்கள் நடுவில் ஏகமாய் பச்சை, ஓலைப் பாம்புகள். தடித் தடியாய் நல்ல பாம்புகள்.

ஆள் ஒருவன் பயமில்லாமல் இடுக்கியால் அவைகளை அலட்சியமாகத் தூக்கி வந்திருந்தவர்களுக்குக் காட்ட, ''மைகாட்! எப்படித்தான் பயம் இல்லாம இப்படி இருக்காங்களோ?'' என்று முணுமுணுத்தபடி அனுராதா வெளியில் வந்தாள்

அவளைத் தொடர்ந்த சங்கர் அந்த முகச் சுணுக்கலைப் பா[illegible]ருக்குச் சிரித்தான்.

''ஶ்ரீ

'றா

''இதுக்கே இப்படிச் சொன்னா, கல்கத்தா தீபக் மித்ராவைப் பத்திக் கேள்விப்பட்டா என்ன சொல்வீங்களோ?''

''வொய்? அவர் கிட்ட அப்படி என்ன ஸ்பெஷல்?''

''நா முதலை பார்க்கப் போறேன் மம்மி'' நித்யா அவர்களைக் கடந்து முன்னே ஓடினாள்.

''ஏஷியாவிலேயே பெரிய பாம்புப் பண்ணையை அவர் நடத்துறார். கிட்டத்தட்ட இரண்டாயிரத்துக்கும் மேல, முன்னூறுக்கும் மேற்பட்ட பாம்பு வகைகள் அவர் கிட்ட இருக்கு. அவரை இதுவரைக்கும் பத்தொன்பது தடவை கட்டுவிரியனும், நல்ல பாம்பும் கடிச்சிருக்காம். ஒரே ஒரு முறை சாவைத் தொட்டுவிட்டு மனுஷன் தப்பிச்சிருக்கார். செத்தா கட்டு விரியன் கடிச்சு சாகணும், அது ஒரு தனி சுகம்னு தீபக் சொன்னப்போ அதை நம்பறது எனக்கு கஷ்டமாத்தான் இருந்தது...''

நடந்து கொண்டிருந்த அனுராதா நின்றாள்.

''ச்சே...பொய்'' என்றாள்.

''ஓ! நோ...நிஜம்தான்...இன்னும் கேளுங்க. தீபக் மித்ராவோட பெட் ரூம்லே இருநூறு பாம்புகள் இருக்கு. ஒரு கிங் கோப்ராகூட இருக்கு. அதை செல்லமா 'புட்டா'னு கூப்பிடறார். ஒவ்வொரு பாம்புக்கும் அவர் பேர் வைச்சிருக்கறதும், அதுகளை செல்லப்பிராணி போல வளக்கறதும்...''

அனுராதா தலையை ஒரு தரம் உலுக்கி விட்டுக் கொண்டாள்.

''பாம்புகளைப் பத்தி தீபக் என்னெல்லாம் சொ[illegible]லறார் தெரியுமா? அது பால் குடிக்காதாம். அதுகளுக்[illegible]ு கிடையாதாம். பழிக்குப்பழிவாங்கற வஞ்சம் இல்[illegible]



பேசிக் கொண்டு போனவனை அனுராதா இடைமறித்தாள்.

''அப்ப பாம்புச் செவி மாதிரினு ஏன் சொல்கிறோம்? பாம்பு துரத்தி, துரத்தி வஞ்சம் தீர்க்கும்னு ஏன் சொல்றோம்?''

''எல்லாம் கட்டுக்கதைனு தீபக் சொல்றார். இன்னும் கேளுங்க...வாழும் பாம்பு தலைல மாணிக்கம் வைச்சிருக்கும்னும் சில பேர் சொல்லுவாங்க இல்லே...இது கூட ஹம்பக் தானாம்...மீன் கண்களைத் தோண்டி எடுத்து பாம்பு தலைல வைச்சுத் தைச்சி மாணிக்கம்னு ஏமாத்தறவங்க உண்டுனு தீபக் சொன்னப்போ... இட் வாஸ் ரியலி ஹார்ட் டு பிலிவ்...''

உன்னிப்பாய் கேட்ட அனுராதா என்னவோ நினைத்துக்கொண்டவளாய்ச் சிரிக்கத் தொடங்கினாள்.

''என்ன? வாட் ஈஸ் த ஜோக்?''

''ஒண்ணுமில்லே.''

''இல்ல...சொல்லுங்க...''

''பாம்புகளைப்பத்தி இத்தனை புள்ளிவிவரம் தெரிஞ்சு வைச்சிருக்கீங்களே, பேசாம இப்ப நிறையப் பேர் பாம்பு கூட இருக்கேன்னு ஸ்டண்ட் பண்ணற மாதிரி நீங்களும் தைரியமா செய்யலாமேனு நினைச்சேன். அதான்...''

ஒரு கண்ணாடிக்கூண்டில் தன்னையும் பாம்புகளையும் கற்பனை பண்ணிப் பார்த்தவனுக்குச் சிரிப்பு எழ அவனும் வாய் விட்டுச் சிரிக்கத்துவங்கியபோது நித்யா ஓடி வந்தாள்.

''என்ன பண்றீங்க இரண்டு பேரும் இங்க நின்னுக்கிட்டு? அங்க வாங்க...குட்டி முதலை எத்தனை அழகா இருக்கு, வந்து பாருங்க...''

''முதலை கிடக்கட்டும்—விஷம் எப்ப எடுக்கப் போறாங்கனு அட்டெண்டரைக் கேட்டியா?''

"கேட்டேன் மம்மி. இன்னிக்கு என்னமோ முக்கியமான வேலை இருக்காம்...அதனால இன்னும் ஒன் அவர் ஆகும்னு சொல்றார்."

"ஒன் அவரா? அத்தனை நாழி இருக்க முடியாது நித்திம்மா...நாம போயிட்டு இன்னொரு நாள் வரவேண்டியது தான்."

"என்ன மம்மி" நித்யாவின் முகம் ஏமாற்றத்தால் சிறுத்துப் போயிற்று.

"இதுதான் எனக்குப் பிடிக்காது. இன்னிக்குப் போயிட்டு அடுத்த ஸாடர்டே வந்தா பேச்சு..."

"ப்ராமிஸ் மம்மி?..."

"ப்ராமிஸ்"

அம்மா சொன்ன பேச்சைக் காப்பாற்றுவாள் என்ற நம்பிக்கையில் நித்யா உடனே சமாதானமாகி விட்டாள்.

மூவருமாய் கேட்டுக்கு வெளியில் வந்தார்கள்.

கார்க் கதவைத் திறக்கும்போது "எப்போதும் நீங்களே தான் ட்ரைவ் பண்ணுவீங்களா? ட்ரைவர் இல்லை?" என்றான் சங்கர்.

"இருக்கான். காலைல வந்து வண்டி துடைச்சி, மத்த வேலைகள் பார்ப்பான். அவசியம் இருந்தா தான் அவன் ஓட்டுவான். ஸம் ஹௌ ஐ லைக் டு ட்ரைவ் த கார் மைஸெல்ஃப்.

கதவை அவள் திறக்க நித்யா பின் ஸீட்டில் ஏறிக் கொண்டாள்.

"எங்க வீடு பக்கத்துலேதான் இருக்கு வந்து ஒரு கப் காபி சாப்பிட்டுப் போக டைம் இருக்குமா?"

இப்படிச் சங்கர் சடக்கென்று வீட்டுக்கு வா என்று அழைப்பான் என்பதை எதிர்பார்க்காத மாதிரி அனுரா லேசாகப் புருவத்தை உயர்த்தினாள்.



"இப்பவா? எனக்கு வேலை இருக்கே... இன்டு நாள் வரலாமா மிஸ்டர் சங்கர்?"

'உங்கள் இஷ்டம்' என்பது போல சங்கர் கைகளை விரித்து தோளைக் குலுக்கினதும் அனுராதா வண்டியில அமர்ந்தாள்.

"வாங்க வீட்டுலே உங்களை ட்ராப் பண்ணிட்டுப் போறேன்."

"இல்லே, வேண்டாம்...நா நடந்து போயிடுவேன். வீடு கிட்டத்தான்."

அனுராதா அவனை வற்புறுத்தவில்லை.

சாவியைப் போட்டு இக்னிஷனை ஆன் செய்தாள். "தாங்க்யூ ஃபார் யுவர் கம்பெனி...நீங்க கூட வந்தது ரொம்ப கலகலப்பா இருந்தது. அந்த தீபக் மித்ராவை நா மறக்க மாட்டேன்" என்றாள்.

சங்கர் பதில் பேசாமல் நின்றான். பின் "என் வீட்டுக்கு இன்னொரு நாள் வரேன்னு சொன்னீங்க, அட்ரஸ் வாங்கிக் காமப் புறப்பட்டா வர இஷ்டம் இல்லேன்னு நா அர்த்தம் பண்ணிக்கணுமா?" என்று மெதுவாகக் கேட்டதும் அவள் 'ஸாரி' என்றபடி இன்ஜினை ஆஃப் செய்தாள்.

"சொல்லுங்க."

"இங்கதான் ராஜ் பவனுக்கு எதிர்பக்கமாய், ஸ்ரீதர் காலனி, நம்பர்..."

சங்கர் கூறியதை அவள் தன் கைப் பையிலிருந்த டைரியில் குறித்துக் கொண்டாள்.

"ஓ கே. மிஸ்டர் சங்கர்—தாங்ஸ் அகெய்ன்—நித்யா அங்கிள்கிட்ட சொல்லிக்க..."

"பை பை அங்கிள்."

"பை நித்யா!"

...ார் புறப்பட்டு, திருப்பத்தில் நின்று வேகம் எடுத்து ...து.

சே அப்படியே நின்ற சங்கருக்கு தன்னை, தன் செய்கையை நினைத்தால் வேடிக்கையாக இருந்தது.

இதுவரை ஒருவரிடமும் அது ஆணோ, இல்லை பெண்ணோ, வலியத் தானாகவே ஈஷிக் கொள்ளாத தான் இப்போது நித்யா, அனுராதாவின் நட்புக்காக ஏங்குகிற மாதிரி மனசுக்குத் தோன்ற என்ன இது என்று தன்னையே கேட்டுக் கொண்டான்.

அனுராதா என்னுடைய நட்பை விரும்புகிறாளா, இல்லையா?

வீட்டுக்கு வாருங்கள் என்று நான் அழைத்ததற்கு மரியாதைக்காகவாவது, நீங்களும் என் வீட்டுக்கு வாருங்கள்; என் விலாசம் இது' என்று அவள் ஏன் சொல்லவில்லை?

ஒருவேளை 'ஐம் நாட் இன்டரெஸ்டட் இன் ஸீயிங் யூ அகெய்ன்' என்பதைத்தான் இப்படிச்சொல்லாமல் சொல்லி விட்டுப் போகிறாளோ?

அன்று மட்டும் அல்லாமல் தொடர்ந்து வந்த நாட்களிலும் 'இந்த அனுராதாவையும், நித்யாவையும் பார்க்க வேண்டும். அவர்களோடு பழகவேண்டும் என்று என் மனசு பறக்கிறது; இது தவறுதானே? என்று தவித்த பின், இனி எக்காரணத்தைக்கொண்டும் அவர்களைப்பற்றின நினைப்புகள் எழவிடக் கூடாது என்று தனக்குத்தானே சங்கர் கட்டுப்பாடு விதித்துக்கொண்ட தினத்தில் நித்யாவுடன் அனுராதா அவன் வீட்டைத் தேடி வந்தாள்.

## 5

டி.வி.யில் வீடும் வயலும் ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தது. இரண்டு தலையணைகளை ஒன்றின் மேல் ஒன்றாக அண்டக் கொடுத்து சித்ராவை அரைகுறை சாய்மானத்தில் உட்கார்த்திஇருந்ததில் அவள் சுவாரஸ்யத்துடன் டி. வி.யில் ஈடுபட்டிருந்தாள்.

சென்னைக்கு வந்ததில் இது ஒரு சௌகரியம்.

டெல்லி டி. வி. நிகழ்ச்சிகள் பாஷை புரியாததால் சித்ராவுக்கு அவ்வளவாகப் பிடிக்காது. பாதி சமயம் நியூஸ் படம் என்றுமட்டும் பார்த்துவிட்டு மற்றவைகளைக் காணப் பிடிக்காமல், பொழுது போகாமல் அவஸ்தைப் படுவாள்.

இங்கு அப்படி இல்லை.

டி. வி. ஆரம்பித்து முடியும்வரை பிரியமாகப் பார்க்கிறாள். மதியம், காஸட்டில் பாடல்கள் கேட்கிறாள் கூடவேவீடியோ வேறு இருக்கிறது.

பெண் பொழுது போகாமல் ஒரு நிமிஷம் கூட அவஸ்தைப் படக் கூடாது என்ற எண்ணத்துடன் அவள் அப்பா கிட்டத்தட்ட அறுபதாயிரம் ரூபாய் செலவில் கலர் டி. வி. விடியோ மெஷின் டேப்புகளை இவர்கள் வரும் முன்பே வாங்கி வைத்திருந்தது ரொம்பவும்தான் உபயோகமாக இருக்கிறது. தமிழ், ஆங்கிலப் படங்கள் பத்துக்கும் மேலேயே டேப்பில் இருப்பதால் பிற்பகல் அன்றாடம் ஒரு மணி நேரம் பிடித்த படத்தைப் பார்த்து ரசிப்பதில் சித்ராவின் நேரம் ஓடுகிறது.

இதெல்லாம் போதாதென்று நாலு நாட்களுக்கு ஒரு ... வந்து தங்கிப் போகும் உறவினர்கள்.

பரவாயில்லை—சென்னை மாற்றல் சித்ராவுக்கு நன்மையைத்தான் செய்திருக்கிறது.

தென்னம் பிள்ளைகளின் அருமை பெருமை பற்றி நீளமாக ஒருவர் லெக்சர் அடித்துக் கொண்டிருந்த நிமிஷத்தில் வாசல் அழைப்பு மணி ஒலித்தது.

இரண்டு நிமிஷத்தில் சமையல்காரன் எட்டிப்பார்த்தான்

"யாரோ ஒரு அம்மா வந்திருக்காங்க ஐயா?"

யார்? இந்நேரத்தில்?

யோசனையுடன் எழுந்து வாசலுக்குப் போன சங்கர் கூடத்து சோபாவில் அமர்ந்திருந்த அனுராதா, நித்யாவைப் பார்த்து சந்தோஷத்தோடு திடுக்கிட்டான்,

"அடடே...வாட் எ ப்ளெஸண்ட் ஸர்ப்ரைஸ்! வாங்க..."

"இந்தக் காலனிலே இவ ப்ரெண்ட் ஒருத்திக்கு இன்னிக்கு பர்த்டே அதுக்கு வந்தோம். உங்க வீடு இங்கு இருக்கிறதா நீங்க சொன்னது ஞாபகம வந்தது. இப்ப நாங்க வந்தது உங்களுக்குத் தொந்தரவு இல்லியே மிஸ்டர் சங்கர்?"—

"தொந்தரவா? ஓ. நோ...நீங்க வந்ததிலே எனக்கு ரொம்ப சந்தோஷம் மிஸஸ் பாஸ்கர்...வாங்க, உள்ளே போய் சித்ராவைப் பார்க்கலாம்..."

எழுந்து உள்ளே போனார்கள்.

"சித்ரு யாரு வந்திருக்காங்கனு பாரு... நம்மகூட ட்ரெயின்லே ட்ராவல் பண்ண சுட்டிப் பொண்ணைப் பத்தி நீ அடிக்கடி பேசுவியே அவதான்...நாகூட பீச்சுலேயும் ஸ்னேக் பார்க்லேயும் பார்த்தேன்னு சொல்லலை?"

சித்ரா அழகாகப் புன்னகைத்தாள்.

பிறகு தீனமான குரலில் "வா...ங்க" என்றாள்.

அனுராதா அவளருகில் சென்று நின்று கொண்டாள்.



"எப்படி இருக்கீங்க மிஸஸ் சங்கர்? ஸ்னேக் பார்க் வந்த அன்னிக்கே உங்களை வந்து பார்த்திட்டுப் போகணும்னு நினைச்சேன். ஆனா வேலை இருந்தது..."

"உ—உக்காருங்க."

அனுராதா அமர்ந்தாள்.

சித்ரா சைகை காட்ட சங்கர் டி.வியை நிறுத்தினான்.

சித்ரா நித்யாவை தலை அசைத்துக் கூப்பிட்டாள்.

"ஆண்ட்டி இஸ் காலிங் யு நித்யா."

நித்யா சித்ராவின் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டாள்.

"ஹ...ல்...லோ...நி...நித்யா ஹெள...ஹெள ஆர்...யூ...?"

"பைன் தேங்க்யூ ஆண்ட்டி. இன்னிக்கு மத்தியானமே நாங்க உங்களைப் பார்க்கவரப் போறோம்னு மம்மி சொன்னாங்க. அதனால உங்களுக்காக எங்க தோட்டத்து ரோஜாக்களைப் பறிச்சிட்டு வந்திருக்கேன்...கொண்டு வரவா ஆண்ட்டி?"

ஸோ—இங்கு வருவதற்கான ஏற்பாட்டுடன்தான் வந்திருக்கிறார்களா? சட்டென்று சங்கருக்கு சந்தோஷமாக இருந்தது.

"நா கார்லேந்து ரோஸஸை எடுத்திட்டு வரட்டுமா மம்மி?"

அனுராதா சம்மதம் கொடுக்க, நித்யா ஓட்டமாக ஓடி மறுநிமிஷம் நாலு சிகப்பு ரோஜாக்களுடன் வந்துநின்றாள்.

"எடுத்துக்குங்க ஆண்ட்டி..."

பிரயத்தனத்துடன் சித்ரா கையை நீட்டி அவைகளை வாங்கி முகர்ந்து பார்த்தாள். நித்யாவின் அன்பான செய்கையால் கண்களும், உதடுகளும் சிரிப்பால் விரிய "கிட்டவா" என்று அழைத்து குனிந்த அந்தக் கன்னத்தில் மெய்மையாக முத்தமிட்டு "தாங்க்யூ" என்றாள்.

சங்கர் உள்ளே சென்று சமையல்காரனிடம் காபி கொண்டு வரச் சொல்லிவிட்டுத் திரும்பினான்.

ஐந்து நிமிஷத்தில் காபி, பிஸ்கட், கேக் வந்தது.

''இப்பத்தான் பார்ட்டியிலே, காபி, டிபன் சாப்பிட்டோம்.''

''பரவாயில்லே...முத முதல்ல வீட்டுக்கு வந்திருக்கீங்க. ஹாவ் சம்திங்.''

பேசிக் கொண்டே சாப்பிட்டனர்.

ஒரு பக்கமாய் சுவரில் இருந்த பெயிண்ட்டிங்கை உற்றுப் பார்த்த அனுராதா ''இது வேன் காக் படம் தானே?'' என்றதும்—''தேவலியே கரெக்டா கண்டு பிடிச்சிட்டீங்களே!'' என்றான் சங்கர்.

அனுராதா பாராட்டை ஏற்றுக் கொண்டு புன்னகைத்தாள்.

''எனக்கு பெயிண்ட்டிங்கிலே இன்ட்ரஸ்ட் உண்டு மிஸ்டர் சங்கர் இந்தப் படத்துக்கு ஒரு கதை கூட சொல்வாங்க. வேன் காக் தன் காதலிக்காக ஒரு காதை அறுத்துக் கொடுத்திட்டு அந்த வேதனையில் தவிச்சபோது தானே தன்னை வரைஞ்சிகிட்ட செல்ஃப் போர்ட்ரைட் இதுனு சொல்லுவாங்க...இல்லே?''

''நீங்க பெயிண்ட் பண்ணுவீங்களா மிஸஸ் பாஸ்கர்?''

''கொஞ்சம்.''

''இல்லே மம்மி பொய் சொல்றாங்க. எங்க வீட்டுலே அவங்க பண்ண பெயிண்ட்டிங் நிறைய இருக்கு அங்கிள்...''.

சித்ரா சங்கரைக் கிட்டத்தில் அழைத்து ஏதோ கூறினாள்.

''வேண்டாம் சித்ரு ப்ளீஸ்''—சங்கர் வெட்கத்தோடு முனகினான்.

''என்ன மிஸ்டர் சங்கர்?''



''ஒண்ணுமில்லே—நாங்கூடக் கொஞ்சம் பெயிண்ட் பண்ணுவேன். உங்களுக்கு அந்தப் படங்களை சித்ரா காட்டச் சொல்றா...''

''வொய் நாட்? பார்க்கலாமே...''

''நீங்க பெயிண்ட்டிங் பார்த்துட்டு வாங்க. நா ஆண்ட்டி கூட இருக்கேன்.'' நித்யா தங்கிவிட இருவரும் மாடிக்குப் போனார்கள்.

சங்கரின் படங்கள் ஒவ்வொன்றையும் அனுராதா ரசித்துப் பார்த்தாள்.

''மைகாட்...திஸ் ஈஸ் ரியலி குட்'' என்றாள்.

''உங்க படங்களை எக்ஸிபிஷன் வைக்கலாம் போ இருக்கே'' என்றாள்.

''நீங்க அமெச்சூரே இல்லே...புரொஃபெஷனல் மாதிரி பெயிண்ட் பண்ண றீங்க...என் படங்களைப் பார்த்தா நீங்க சிரிக்கப் போறீங்க'' என்றாள்.

ஓவியங்களைப் பார்த்துவிட்டு கீழே இறங்கு முன் அவனுடைய லைப்ரரியில் பத்து நிமிஷங்கள் போல நின்று தான் படிப்பதற்காக நாலு புத்தகங்களை அனுராதா எடுத்துக் கொண்டாள்.

''உங்களுக்குக் குறிப்பிட்ட எந்த ஆத்தராவது பிடிக்குமா மிஸஸ் பாஸ்கர்?''

''பிடிக்கும் பிடிக்காதுனு எதுலேயும் தீவிரமாகக் கிடையாது...என் மன நிலையைப் பொறுத்து புக்ஸ் படிப்பேன். வேதாந்தம் படிக்கத் தோணினா அது;மனசு லைட் மூட்லே இருந்தா வேற டைப்...பாட்டு கூட அப்படித்தான். கர்னாடக சங்கீதமும் கேட்பேன்.டிஸ்கோவும் கேட்பேன்—கா[illegible] பெண்ட்ஸ் ஆன் மை மூட்...''

'நானும் அப்படித்தான், உங்கள் ரஸனைகள் மாதிரியே தான் என்னுடையதும்' என்று சொல்ல துறுதுறுத்த நாவை அடக்கிக் கொண்டு சங்கர் கீழே வந்தான்.

மேற்கொண்டு பதினைந்து நிமிஷங்கள் பேசி கொண்டிருந்துவிட்டுக் கிளம்பின அனுராதா டி.வி. பக்கத்தில் இருந்த மெஷினைப்பார்த்துவிட்டு "அது என்ன வீடியோவா?" எனவும் சங்கர் ஆமாம் என்றான்.

"மிஸஸ் சங்கருக்கு இது ரொம்ப உபயோகமா இருக்குமே...என்னென்ன படங்கள் வைச்சிருக்கீங்க?"

உற்று சங்கர் சொன்னான்.

தானே "எங்க அண்ணாகூட வீடியோ வைச்சிருக்கார், நீங்க சிட்டீசாபரணம்' பார்த்திங்களா?"

"ம்ஹூம் இல்லே."

"யு ஆர் மிஸ்ஸிங் ஸம்திங்...நா முடிஞ்சா அதை வாங்கித் தரேன் அப்புறம் ஸவுண்ட் ஆஃப் ம்யூஸிக், மை ஃபேர் லேடி...ஏதாவது வேணுமா?"

"சவுண்ட் ஆஃப் ம்யூஸிகா? சிரமம் இல்லேன்னா அதை வாங்கித்தாங்க...சித்ராவுக்கு அந்தப்படம் ரொம்பபிடிக்கும் காலேஜ்லே படிக்கிறப்போ நாலு தடவை பார்த்தது சொல்லியிருக்கா..."

மனைவியைப் பற்றிப் பேசும் போது சங்கர் மனசு நெகிழ்ந்து போய்விடுகிற மாதிரி தோன்ற அனுராதா அவனை வெறித்தாள்.

முன்பு பட்டாம்பூச்சியாய் துள்ளித் திரிந்த மனைவியை நெஞ்சுள் நிறுத்திப் பார்க்கிறாரா?

அதுதான் இந்த உருகலா?

அவஸ்தையா?

"அப்ப நாங்க வரோம். மிஸஸ் சங்கர்..." ...



"கம் அகெய்ன்."

"முடிஞ்சப்போ வரேன்."

வாசலுக்கு பெண்ணுடன் போனவளை சங்கர் தொடர்ந்தான்.

"உங்க போன் நம்பர் தரீங்களா மிஸ்டர் சங்கர்? வீடியோ டேப் வாங்கிட்டேன்னா உங்க சௌகரியத்தை தெரிஞ்சிக்கிட்டு வரலாம்..."

தன் நம்பரைக் கூறி அவளுடையதை சங்கர் தெரிந்து கொண்டான்.

"போன் பண்ணிட்டு ஒரு நாள் வீட்டுக்கு வாங்களேன்..."

"நானா? எங்கே மிஸஸ் பாஸ்கர்? நீங்க நித்யாவோட இங்க வந்திங்கன்னா சித்ரா வில் லைக் இட்... அவளால் எங்கேயும் வர முடியாதுன்னு, அதிகமாக நானும் எங்கேயும் போறதில்லே..."

அனுராதா காரில ஏறி ஸ்டார்ட் செய்தாள்.

"குட் நைட் மிஸ்டர் சங்கர்."

"பை பை அங்கிள்."

"குட்நைட்...பை..."

கார் கேட்டை விட்டுத் திரும்பி சில நிமிஷங்கள் ஆகியும் உள்ளே போக மனமில்லாமல் சங்கர் அங்கேயே நின்றான்.

அம்மாவும் பெண்ணுமாக மனசுக்கு எத்தனை நிறைவைத் தருகிறார்கள்.

இதமாக பார்த்து, அன்போடு பேசி, வேஷம் போடாமல் சொல்லி வை[illegible] மாதிரி இரண்டு பேரும் எப்படி ஒரே மா[illegible] ஆ[illegible]து [illegible]ள்?

கா[illegible] [illegible]தான் செப்படிப் பட்டவனாய் இருந்தான்?

இத்தனை பண்பான மனைவியையும், சிட்டுக்குரு போன்ற மகளையும் பிரிய எத்தனை துரதிருஷ்டம் செ திருக்க வேண்டும்?

சந்தோஷமும், வேதனையும் கலந்த உணர்வு நெஞ்ச வியாபிக்க, சங்கர் வீட்டுக்குள் போகத் திரும்பினான்.

## 6

அடுத்த வாரத்தில் இரண்டு தரம் சங்கர் ஆபீஸி பரக்க பரக்க வேலைகளை முடித்துக் கொண்டு மெரின வுக்கு மாலையில் வந்து அவர்களைச் சந்தித்தான்.

முதல் முறை நித்யாவுக்கு சாக்கோ பார் வாங்கி கொடுத்து, குதிரை சவாரி செய்ய வைத்தான்.

இரண்டாம் தடவை பாண்ட் கால்களை மடக் கொண்டு அவளோடு தானும் தண் ரீரில் அளைந்தான்.

வழக்கம் போல அனுராதா மே டில் உட்கார்ந்திருக் இவன் அவளைப் பார்த்துக் கேட்டா .

''நீங்க அலைலே நிக்க மாட்டீங்களா?''

''ம்ஹூம், எனக்கு நிக்கப் பிடிக்கா தே தவிர நிக்க வங்களைப் பார்க்கப் பிடிக்கும்.''

பெரிய அலை தூரத்தில் சீற, 'வ ந்துடுங்க அங்கி ரொம்ப பெரிசா ஒண்ணு வருது' எ று கீச்சுக்குரல் கத்தினவளை அலாக்காகத் தூக்கி பேத் டிற்கு ஓடிவந்த தொப்பென்று மணலில் போட்டுவி த்த சிரித்தா ர்க

''போதும் நித்யா, நிறைய நா கர்...' ஷ்தா ர் எ உட்காரலாம்... என்ன?''



''நீங்க வேணா உட்காருங்க அங்கிள். நான் கிளிஞ்சல் பொறுக்கப் போறேன்...''

414369

அனுராதாவின் அருகில் உட்கார்ந்து சற்று தள்ளி மணலில் சுவாரஸ்யமாக கிளிஞ்சல் தேடும் நித்யாவைப் பார்த்துக் கொண்டே சங்கர் நிதானமாகப் பேசினான்.

''உங்க நித்யாவைப் பார்க்கறப்போ எல்லாம் எனக்கு சித்ரா ஞாபகம் வருதுனு நா சொன்னா நீங்க நம்பு வீங்களா மிஸஸ் பாஸ்கர்? சித்ராவை அஞ்சு வருஷம் முன்னால் நீங்க பார்த்திருக்கணும். அடேயப்பா என்ன குறும்பு, என்ன பேச்சு? அப்படி இருந்தவ இன்னிக்கு கட்டை மாதிரி ஒரே இடத்திலே கிடக்கறாளேன்றதுதான் என்னால தாங்க முடியாத வேதனை. நீங்க சொன்னீங்க இல்லே? தண்ணிலே நிக்கப் பிடிக்காது... ஆனா நிக்கறவங் களைப் பார்க்கப் பிடிக்கும்னு? நா உங்க கட்சி. பட், சித்ரா அசல் நித்யாவேதான்... ஒரு கைலே சாக்கோபார் வைச்சிப்பா, முழங்கால் வரைக்கும் புடவையை தூக்கிப்பா, அலைகளிலே அரைமணி அளைவா... மணி அடிக்கிற மாதிரி சிரிச்சுக்கிட்டே இருப்பா...'' பேசிக் கொண்டு போன சங்கர் சட்டென்று நிறுத்தினான். ''ஐம் ஸாரி... பழசை நினைச்சதுலே என்னமோ பேசிட்டேன்...'' என்றான்.

894.8113
SIV

மணலில் புள்ளிக் கோலம் போட்டு அழித்துக் கொண் டிருந்த அனுராதா லேசாகத் தலையை நிமிர்த்தி அவனைப் பார்த்தாள்.

மனசுக்குள் ஊர்ப்பட்ட வேதனைகளை அடைத்து வைத்துக் கொண்டு சங்கர் தவிப்பதை அவளால் புரிந்து கொள்ள முடிந்தது.

என்னிடம் தன் மனப் பாரத்தை பகிர்ந்து கொள்ள விரும்ப றாரா?

நான் இ பாது தொடர்ந்து பேசத் தூண்டுவதுதான் கா த் நான் செய்யும் உபகார

"சொல்லுங்க... இஃப் யு டோண்ட் மைண்ட் சித்ராவைப் பத்தி விவரமா சொல்லுங்க... ஐ வுட் லைக் டு நோ. எத்தனை வருஷமா இப்படி இருக்காங்க? எதனால் இந்த வியாதி வந்தது? சொல்லுங்க மிஸ்டர் சங்கர்..."

இப்போது தொடர்ந்து பேச...

சந்தியா வேளையும், சிலுசிலுத்த காற்றும், கடலின் ஓங்காரப் பின்னணியும், கண்களில் ஜலத்தைப் பொங்க வைக்க, மனசு மிகவும் நெகிழ்ந்திருந்த அந்த நிமிஷத்தில் சங்கர் சித்ராவைப் பற்றி, அவளும் தானும் வாழ்ந்த அந்த ஒரு வருஷத்தைப் பற்றி, அவளுக்கு வந்த ஜுரத்தைப் பற்றி, பின் அவள் படுத்த படுக்கையானது பற்றி விவரமாகப் பேசினான்.

இது வரைக்கும் எவரிடமும் இப்படி ஒரு அன்யோன்யத்துடன் சொந்த சமாசாரங்களைப் பற்றிப் பேசிப் பழக்கம் இல்லையாதலால் நடுநடுவில் தொண்டை அடைத்துப் போயிற்று. பேச்சு தடைப்பட்டுப் போயிற்று. குரல் தழுதழுத்து பிசிர் அடித்தது.

அனுராதா குறுக்கே ஒரு வார்த்தை பேசாமல் அத்தனையும் கேட்டுக் கொண்டாள்.

"இருட்டிப் போச்சே, புறப்படலியா மம்மி?"— என்று இடையில் ஒருதரம் கேட்ட நித்யாவைக்கூட "போய் கோபுரம் கட்டி விளையாடும்மா... நா அங்கிள் கூட முக்கியமா பேசிட்டு இருக்கேன்," என்று அனுப்பிவிட்டு சங்கரின் பேச்சை அனுதாபத்துடன் கேட்டாள்.

முடிவில் "நா மனசறிஞ்சு யாருக்கும் எந்தக் கெடுதலும் செய்யலே; என் சித்ராவும் அப்படித்தான். அந்தக் குழந்தை மனசு கொண்டவளுக்கு இப்படி ஒரு [illegible] மெண்ட் எதுக்காகங்கிற கேள்விதான் சதா [illegible]



குடையுது வாட் கான் ஐ டு? ஹௌ கேன் ஐ ஹெல்ப் ஹர்... டெல் மீ? நல்லா இருந்தவ நாலு நாள் ஜுரத்துலே திடும்னு இப்படி ஆயிட்டாளே, மிஸஸ் பாஸ்கர்... இது எத்தனை கொடுமை?"

இருட்டு நன்றாக போர்வை போர்த்தி விட்டது.

முழங்கால்களை கட்டிக் கொண்டு அமர்ந்திருந்த ராதா கண்களை இரண்டு தரம் சிமிட்டி, ஓரத்திலிருந்த நீரை விலக்கினாள். சன்னமாக, மிக மிக சன் பெரிய சொன்னாள்.

"நாலு நாள் ஜுரம் அடிச்சு, டாக்டர் வி[illegible]ம வைத்தியம் பார்த்து, அப்புறமா சித்ரா படுத்த படுக்கையானதை ஸடன்னு சொல்ற நீங்க, பாஸ்கர் விஷயத்தைக் கேள்விப்பட்டா என்ன சொல்லுவீங்க, மிஸ்டர் சங்கர்? இன்னி வரைக்கும் யார் கிட்டயும நா பாஸ்கர் பத்தி பேச விரும்பினதில்லை. பிகாஸ் அது எனக்கு மட்டுமே சொந்தமான சமாசாரம். ஸம் திங் டூ பர்ஸனல். பட், இப்ப உங்ககிட்ட அவரைப்பத்தி நா பேச விரும்பறேன். ஏன்னா, சித்ராவைப் பத்தி நீங்க என்கிட்ட வருத்தப்பட்டுகிட்டிருக்கிற இந்த சமயத்துலே துக்கம்ன்றது உங்களுக்கு மட்டும் இல்லே, வாழ்க்கைலே நிறையப் பேருக்கு இருக்குனு நா சொன்னா, அது உங்களுக்கு தற்காலிக ஆறுதலைத் தரலாம்; தவிர, உங்களோட பழகிட்ட இந்த சில நாட்களிலே என் பாஸ்கரோட சில பழக்க வழக்கங்கள், மாரிஸம் உங்களுக்கும் இருக்கற மாதிரி எனக்கு தோணுது அதனால் உங்ககிட்ட அவரைப்பத்தி பேசணும் போல ஆசையா கூட இருக்கு. எஸ் மிஸ்டர் சங்கர்; பாஸ்கர் பல விஷயத்திலே உங்களை மாதிரியே இருந்தார். உயரம், மீசை, தலையைப் பின்னால் தள்ளி சிரிக்கிறது எல்லாம் அதேதான். ஆனா அவர் உங்க அத்தனை நிறம் இல்லே... உங்களை விட இன்னும் அதிகமா, கலகலப்பா பேசுவார். அதான் வித்தியாசம். மத்தபடி...ஓ...எதையோ சொல்ல

ஆரம்பிச்சு எங்கயோ போயிட்டேனே! பாஸ்கர் எப்படி இறந்தார்னு உங்களுக்குத் தெரியாது இல்லையா? பாஸ்கர் ரொம்ப துறுதுறுப்பானவர். ஸ்விம்மிங் போவார், மலைலே ஏறுவார், போட்டிங் செய்வார், டென்னிஸ் ஆடுவார்... ஃபளையிங் க்ளப்லே மெம்பரா சேர்ந்து பிளேன் ஓட்ட ...சைப்பட்டார் சேர்ந்தார். நல்லா ஓட்டக் கூட ஆரம் ...ட்டார். அந்த ஞாயிற்றுக்கிழமை 'ஃப்ளையிங் க்ளப் ...ட்டு வரேன். அனு...தோட்டத்துலே நின்னு என் ...பட்டாம் பூச்சி பறக்கறதைப் பாரு'னு சொல் ...ைட்டு போனார். குளிச்சிட்டு வெளிலே வரேன், போன் வருது உடனே வாங்கனு. அடிச்சி பிடிச்சுகிட்டு ஓடியும் எரிஞ்ச ப்ளேனையும், அடையாளம் தெரியாம கருகின பாஸ்கரையும் தான் என்னால் பார்க்க முடிஞ்சிது... பறக்க ஆரம்பிச்ச உடனே, ப்ளேன் தீ பிடிச்சு கீழே விழுந்திடிச் சாம். சில நொடிகளிலே ஆக்ஸிடன்ட் ஆனதால யாராலும் எதுவம் செய்து காப்பாத்த முடியாம போயிடிச் சாம். ஒரு நிமிஷத்துலே. கண்மூடி திறக்குற நேரத்துலே என் பாஸ்கர்...''

அனுராதா விசும்புவதை சங்கரால் ஊகிக்க முடிந்தது.

பாக்கெட்டிலிருந்து கர்சிப்பை அவசரமாய் எடுத்தான். ''ப்ளீஸ்...ப்ளீஸ்...கேதர் யுவர் செல்ஃப்...ப்ளீஸ் மிஸஸ் பாஸ்கர்'' என்றபடி கைகுட்டையை அவளிடம் கொடுத் தான்.

ஒரு நிமிஷமாகியும் அனுராதாவின் வேதனை நிற்காத போகவே என்ன செய்வது என்று புரியாத பரிதவிப்புடன் முழங்காலில் கட்டி இருந்த கையை எடுத்து தட்டிக் கொடுத்தான். ''ப்ளீஸ்...கமான் அனுராதா...ப்ளீஸ்...'' என்று கிசுகிசுத்த குரலில் விடாமல் பேசி தேற்றினான்.

# 7

அதன் பிறகு அனுராதாவும், சங்கரும் அடிக்கடி சந்தித்துக் கொள்ளத் தொடங்கினார்கள்.

தான் பம்பாயில் பிறந்து வளர்ந்ததை, அப்பா பெரிய சார்ட்டர்ட் அக்கௌண்டன்டாக அங்கே இருப்பதை, கூடப் பிறந்தவர்கள் இரண்டு அண்ணன்கள் என்பதை— அனுராதா அவனுக்குச் சொன்னாள்.

''அப்பா, அண்ணாக்கெல்லாம் நா இப்படி தனியா இருக்கறதுலே ரொம்ப வருத்தம். பெரியண்ணா இங்கயே தான் இருக்கார். ஹி ஈஸ் ஆன் இண்டஸ்ட்ரியலிஸ்ட். 'என் கூட வந்து இரும்மா. தனியா அத்தனை பெரிய வீட்டுலே நீ எதுக்காக இருக்கணும்' னு சொல்கிறார். பட் ஹௌ கான் ஐ டூ இட்?...என் பாஸ்கரோட வீடு, அவர் வாழ்ந்த வீடு; இதுலே இருக்கிறது எனக்கு எத்தனை நிம்மதி...னு உங்களுக்காவது புரியுதில்லே சங்கர்?''— என்றால், சங்கர் நான் புரிந்து கொள்கிறேன் என்று தலை ஆட்டுவான்.

தான் தூத்துக்குடியில் பிறந்தது, அப்பா அங்கே மிராசுதாராய் இருப்பது, பி. ஏ., எம். ஏ, முடித்து யு. எஸ் ஸுக்குப் போனது, எம். பி. ஏ படித்து வேலைபார்த்தது டில்லிக்கு வந்தது, சித்ராவை மணந்தது எல்லாம் சங்கர் கூறுவான்.

''உங்க மாதிரியேதான் என் கேஸும் அனுராதா, சித்ராவை வெச்சுகிட்டு நா தனியா டெல்லிலே அவஸ்தை பட்டேன், இப்ப மெட்றாஸ்லே படறேன்றது எங்க பெரிய வங்க அபிப்ராயம். அவங்ககூட நாங்க போய் தங்காதது அவங்களுக்கு ஏக குறை. ஆனா, இது எப்படி சாத்தியம்?

என் மனைவியை நா வெச்சு காப்பாத்தினா தானே எனக்குப் பெருமை? அப்புறம் எனக்குனு ஒரு ஜாப் ஸாடிஸ்ஃபேக்ஷன் வேணாமா? இதைஎல்லாம் பெரியவங்க கிட்ட எடுத்து எப்படி சொல்லறது? உங்களுக்கு என் நிலைமை புரியுது. இல்லியா அனுராதா?'' என்றால், புரிகிறது என்று கரிசனத்துடன் அனுராதா தலை அசைப்பாள்.

அடுத்து வந்த மாசங்களில் அவர்களிடையே ஒரு நூதனமான அன்யோன்யம் வளர்ந்து நன்றாக வேர் விட்டது என்றுதான் சொல்ல வேண்டும்.

முடிந்தபோது சங்கர் மாலையில் பீச்சுக்குப் போவான். அனுராதா அடிக்கடி பெண்ணுடன் இவன் வீட்டுக்கு வந்து பேசிக் கொண்டிருந்து விட்டு போவாள்.

சித்ராவுக்கென அண்ணாவிடமிருந்தும், தெரிந்தவர்களிடமிருந்தும் வீடியோ டேப்புகளை வாங்கி வருவாள். எல்லாருமாக சேர்ந்து அமர்ந்து சினிமா பார்ப்பார்கள். சங்கராபரணத்தைப் போட்டுவிட்டு 'மானஸ சஞ்சரரே' என்று வாணி ஜெயராம் பாடும் போது 'ப்பா, ஆத்மார்த்தமாக எப்படி பாடுகிறார்' என்று பரவசப் படுவார்கள். நடு நடுவில் போனில் நீளமாய் பேசுவார்கள். அன்று படித்த புத்தகத்தைப் பற்றி, என்றோ, எப்போதோ நடந்து இன்று கதையாகிவிட்ட தங்கள் வாழ்க்கையைப் பற்றி, ஒரே ஸப்ஜெக்டை எடுத்துக் கொண்டு இருவரும் பெயிண்ட் செய்து விட்டு ''உன்னுடையது நன்றாக வந்திருக்கிறது'' என்று ஒருவரை ஒருவர் புகழ்ந்து கொள்வார்கள்.

இன்னும்...இன்னும்...

எதைச் சொல்ல? எதை விட?

ஆனால், எங்கள் ரஸனை, விருப்பு வெறுப்புக்கள் ஒன்றாக இருக்கின்றன. அதுதான் இப்படி ஒரு அருமையான நட்பை வளர்த்துக் கொண்டிருக்கிறோம் என்று இருவரும் நினைத்திருப்பது பொய். இறந்துபோன கணவர் பாஸ்கரின்



சாயலை சங்கரில் அனுராதாவும், பிறக்காத மகளை நித்யாவில், முடங்கிப்போன மனைவியை அனுராதாவில் காண முற்படுவதை இருவருக்கும் பளிச்சென்று நிரூபிக்கும் வகையில் அன்று அந்த சம்பவம் நடந்தது. அவர்களுடைய ஸ்னேகத்தில் ஒரு திருப்பு முனை உண்டானது நிஜம்தான்.

சங்கருக்கு அடிக்கடி அனுராதாவின் வீட்டுக்குப் போகும் பழக்கம் கிடையாது. அவள் இவன் வீடு தேடி வருவாளே தவிரவும், இவன் அவளுடைய நுங்கம்பாக்கம் வீட்டுக்கு இதுவரை மூன்று முறைகள் போயிருந்தால் அதிகம்.

அன்று ஆபீசுக்கு போகும் வழியில் ஹிக்கின் பாதம்ஸில் நுழைந்த சங்கர், அனுராதா ரொம்ப நாட்களாக படிக்க வேண்டும் என்று ஆசைப்பட்ட புஸ்தகத்தை அங்கு பார்த்து வாங்கி அலுவலகத்துக்கு வந்ததும், முதல் காரியமாக அவளுக்கு போன் செய்தான்.

நீண்ட நேரம் ஒலித்த பிறகு சமையல்கார அம்மாள் போனை எடுத்தாள்.

''நா சங்கர் பேசறேன். அம்மா இல்லியா?''

''உங்களுக்கு சேதி தெரியாதாங்க? காலைல நித்யாவ ஸ்கூல்ல கொண்டு விட்டுட்டு வர்றப்போ லாரி ஒண்ணு நம்ப கார்ல மோதி...''

''மோதி?'' சங்கர் உரக்க கத்தினான்.

''அம்மாக்கு நெத்திலே காயம் பட்டிருக்கு. தையல் போட்டுட்டு வந்து இப்பத்தான் படுத்தாங்க.

''என்னது?'' படக்கென்று ரிஸிவரை வைத்த சங்கர் மேஜை ட்ராயரை அறைந்து மூடி கொத்துச் சாவியை எடுத்துக்கொண்டான்.

அறையை விட்டு வெளியில் வந்து காரியதரிசியிடம் "நா அவசரமா வெளிலே போறேன். கான்ஸல் பை அப்பாயின்மெட்ன்ஸ் ஃபார் த மார்னிங்" என்று சொல்லி விட்டுக்கு கூடக் காத்திராமல் மாடிப்படிகளில் வேகமாக இறங்கி வந்து, காரில் ஏறி, "டிரைவர் நுங்கம் பாக்கத்துக்குப் போ, வேகமா போ" என்று உத்திரவிட்டு ஸீட்டில் சாய்ந்து கொண்டான்.

அனுராதாவுக்கு விபத்தா?

தையல் போடுமளவுக்கா?

ரொம்ப ஆழமாக அடிபட்டிருக்குமோ?

அதுதான் தையல் போட்டிருக்கிறார்களோ?

உள்ளங்கையில் வியர்வை ஊறியதை சங்கர் துடைத்துக் கொண்டான். நெஞ்சு ரொம்பவும் எகிறியது.

அனுராதாவின் வீடு வந்து கார் நிற்பதற்குள் பொறுமையின்றி அவசரமாய் இறங்கினவன் நாலே எட்டில் வராந்தாவில் ஏறினான்.

எதிரில் வந்த வேலைக்காரனிடம் 'அம்மா எங்கே' என்று கேட்டு அவன் பதிலுக்கு காத்திராமல் உள்ளே ஓடினான்.

படுக்கை அறை கதவு சாத்தி இருந்தது.

சின்னதாக இரண்டு தரம் தட்டிவிட்டு, சங்கர் கதவை திறந்தான்,

அனுராதா படுத்திருந்தாள்.

தலையைச் சுற்றி பட்டி கட்டின மாதிரி ஒரு கட்டு.

ஒருவித தவிப்புடன் கட்டிலை நெருங்கி குனிந்து பார்- கவும். அரவம் கேட்டு அனுராதா கண்களைத் திறந்தாள்.

"சங்கர்? எப்படி வந்திங்க?" வியப்போடு எழுந்திருக்- முனைந்தவளின் தோளில் கை வைத்து சங்கர் மென்மையா- மீண்டும் படுக்க வைத்தான்.



"என்னாச்சு அனுராதா? வாட ஹாபண்ட்? இத்தனை பெரிசா காயம் பட்டிருக்கறப்போ, எனக்கு சொல்லணும்னு உங்களுக்குத் தோணலியா? தனியாவா டாக்டர் கிட்ட போய் தையல் போட்டுகிட்டு வந்திங்க? வொய் டிண்ட் யு கால் மீ, ம்?" கலவரத்துடன் பேசிய சங்கரின் குரலில் சட்டென்று கோபம் கலந்தது. "டிரைவரை வீட்டுலே உட்கார வைச்சிட்டு எதுக்காக நீங்களே வண்டிய ஓட்டறிங்க? அவனை ஓட்டச் சொல்லி பின்னால் உட்கார்ந்து போனா என்னவாம்? தானே எல்லாத்தையும் தலைலே இழுத்து போட்டுகிட்டு இப்ப ஏன் அவஸ்தைப் படணும்? எத்தனாம் பெரிசா அடிபட்டிருக்கு? இதெல்லாம் வீண் வம்பு தானே?..."

கரிசனமும், கோபமும் கலந்து சின்னப் பையனின் அவஸ்தையுடன் சங்கர் பேசுவது பார்க்க புதுசாக இருக்க அனுராதா அவன் தடுத்தும் கேளாமல் எழுந்து உட்கார்ந்தாள்.

"ஹேய்—சங்கர், உங்களுக்கு என்னாச்சு?...ஏன் இப்படி படபடக்கறீங்க? எனக்கு பிரமாதமா அடி ஒண்ணும் படலை...ரிலாக்ஸ் ஐஸே..."

அழுத்தமாக, ஆனால் மெல்லிய குரலில் அனுராதா பேசியது, சங்கரை கொஞ்சம் நிதானத்துக்கு கொண்டு வர, அனுராதாவை ஏறிட்டுப் பார்த்தவன், "ஸாரி" என்று முணுமுணுத்தான்.

இந்த சங்கர் அனுராதாவுக்கு ரொம்ப புதுசு, நிதானமில்லாமல் முதலில் படபடத்துவிட்டு உடனே உணர்ச்சி வசப்பட்டு ஸாரி என்று சொல்கிற சங்கர் அவளுக்கு ரொம்ப புதுசு.

"உட்காருங்க சங்கர்..."

சங்கர் அவளருகில் உட்கார்ந்து கைகளில் முகத்தை பதித்துக் கொண்டான்.

"எனக்கு ஒண்ணுமில்லே...ப்ளீஸ் ரிலாக்ஸ்...நிறுத்தி இருந்த வண்டிமேல் லாரி மோதினதால் நெத்தி க்ளாஸ்லே

இடிச்சி அடிபட்டது நாலு தையல் போட்டு உடனே டாக்டர் வீட்டுக்கு அனுப்பிச்சிட்டார். நத்திங் டு வொர்ரி... அதான் உங்களுக்கு நா சொல்லலை...சமயல்காரம்மா உங்க கிட்ட சொன்னப்போ கூட நா வீணா அவங்களை ஏன் காப்ரா பண்ணிங்கனு திட்டினேன். அவங்க சொன்னதுக் காகவா இப்படி அலறிகிட்டு ஓடி வந்தீங்க?''

''......''

''சங்கர்—என்னை பாருங்க. நீங்க இவ்வளவு கலங்கிப் போற அளவுக்கு இங்க என்ன நடந்திடிச்சு? லுக் அட் மி சங்கர்.''

பார்வையை நிமிர்த்தாமலேயே சங்கர் கரகரத்த குரலில் பேசினான்.

''உங்களுக்கு என் அவஸ்தை புரியாது அனுராதா...நா யார்மேலயாவது உண்மையான அன்பு செலுத்தினா அவங் களுக்கு ஏதாவது ஆயிடுமோ, அதுதான் என் ராசியோனு நா அடிமனசிலே பயப்படறது உங்களுக்கு புரிஞ்சா இப்படி சாதாரணமா பேச மாட்டீங்க...''

''ச்சே—டோண்ட் பி சைல்டிஷ் சங்கர்...''

''இல்லே...அனுராதா யு டோண்ட் அண்டர்ஸ் டாண்ட்...முதல்லே சித்ரா...இப்ப நீங்க...அரை மணியா நா துடிச்ச துடிப்பு எனக்குதான் புரியும்...''

அனுராதா பக்கம் திரும்பி, கையை நீட்டி அவன் நெற்றி பாண்டேஜை மெதுவாகத் தடவிக் கொடுத்து தாங்க் காட், தாங்க் காட் என்று முணுமுணுத்து ஒரு நிமிஷம் அப்படியே அமர்ந்துவிட்டு ''உனக்கு ஏதாவது ஆயிருந்தா நா கதிகலங்கி போயிருப்பேன்.அனு...சத்தியமா உனக்கு ஏதாவது ஆயிருந்தா அதை என்னால் தாங்கிட் டிருக்க முடியாதும்மா...இது உனக்கு ஏன் புரியலை?'' என்றபோது வார்த்தைகள் கிசுகிசுப்பாய் வெளிப்பட்டன



'நீங்கள்' என்று சொல்லாமல் சங்கர் 'நீ' என்றதும் 'அனு' என்று மிக உரிமையுடன் அழைத்ததும், அந்த பார் வையும், அந்த குரலும், அந்த தீவிரமும் உள்ளுக்குள் சென்று இதயத்தை வருடி விட சங்கரின் கையை எடுத்து தன் கன்னத்தில் அனுராதா வைத்துக் கொண்ட அந்த கணத் தில் இருவருக்குமே தாங்கள் ஒருவரை ஒருவர் எத்தனை ஆழமாக நேசிக்கிறோம் என்பது புரிந்து போயிற்று.

## 8

''ச...ங்கர்''

ஒரு கையில் புத்தகமும், மறுகையில் சிகரெட்டும். இருந்தும் புத்தகத்தையும் படிக்காமல், சிகரெட்டையும் பிடிக்காமல் எங்கோ வெறித்து பார்த்த வண்ணம் உட் கார்ந்திருக்கும் கணவனை உற்று நோக்குகையில் சித்ராவுக்கு வருத்தமாக இருந்தது.

நான் கூப்பிடுவது கூட காதில் விழாமல் அப்படி என்ன யோசனை?

கொஞ்ச நாட்களாகவே சங்கர் கலகலப்பாக இல்லையே, ஏன்?

பாக்டரியில் கவலையா?

எதுவானாலும், என்னிடம் உட்கார்ந்து கொட்டி தீர்த்து விடுவது இவர் வழக்கமாயிற்றே.

நான் பேசுகிறேனோ இல்லையோ, அத்தனையும் என்னிடம் விளக்கமா பேசி விட்டால் நிம்மதியாய் இருக்கிறது என்பாரே!

ஏன் இப்போதெல்லாம் என்னிடம் பேசுவதையே சங்கர் குறைத்துக் கொண்டு விட்டார்?

என்னேரமும் ஏதோ பிரச்சனையைத் தலைக்கு மேல் தூக்கி வைத்துக் கொண்ட விதத்தில் முகம் சிறுத்து காணப் படுகிறதே, ஏன்?

என்ன ஆயிற்று என் சங்கருக்கு?

லேபர் ப்ராப்ளம் அதிகமாக இருக்கிறதா?

என் வைத்தியத்துக்காக அளவுக்கு மீறி செலவாகிறதா? பணம் போதாமல் கஷ்டப்படுகிறாரா?

பணத்துக்குத்தான் இரண்டு பக்கமும் பஞ்சம் இல்லையே.

அப்புறம் என்ன?

முன்புபோல என்னோடு உட்கார்ந்து சாப்பிடுவது, பேசுவது. படம் பார்ப்பது எல்லாம் குறைந்து விட்டதே...

லேட்டாக வருகிறார்; ஆபிஸில் வேலையா என்றால் ஆமாம் என்கிறார்.

எதற்காக இத்தனை கஷ்டப்பட்டு உழைக்க வேண்டும்?

வேலையில் கவனத்தை திருப்புவதன் மூலம் என்னால உண்டான சூன்யத்தை குறைக்கப் பார்க்கிறாரா?

என்ன ஆயிற்று என் சங்கருக்கு?

ஹௌ கான் ஐ ஹெல்ப் ஹிம்?

ஒன்றுக்கும் பிரயோஜனம் இல்லாமல் அவரைத் தவிக்க விட்டு, நானும் தவித்து...

கடவுளே...ப்ளீஸ் ஹெல்ப் மீ...ஹெல்ப் மை சங்கர்...

வாய்விட்டு அழவேண்டும் போல இருந்ததை சித்ரா கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டாள்.

நோ—அழக் கூடாது.

சங்கருக்கு அழுதால் பிடிக்காது.



தன்னை சுதாரித்துக் கொண்ட பிறகு மீண்டும் 'சங்கர்' என்று சித்ரா அழைத்தாள்.

சங்கர் திடுக்கிட்டுத் திரும்பினான்.

"கூப்பிட்டாயா சித்ரா?"

"இ...இங்க வாங்களேன்"

சங்கர் புத்தகத்தை மூடி வைத்துவிட்டு நாற்காலியை படுக்கை அருகில் இழுத்து போட்டுக் கொண்டான்.

"பு...புஸ்தகத்திலே கவனம் போ...போகலியா சங்கர்?"

"......"

"எ...என்னமோ யோசனைலே இருந்திங்களேன்னு கே...கே. கேட்டேன்."

"அதெல்லாம் ஒண்ணுமில்லே"

சித்ரா கணவனின் கையைப் பிடித்துக் கொண்டாள்.

"மனசு ச...சரியில்லியா ச...சங்கர்"

"நோ. நோ. ஐம் ஆல்ரைட் சித்ரு"

"இல்லே...யு...ஆர்...லையிங்...கொஞ்ச நாளா நீங்க எ...எ...எப்படியோ இருக்கீங்க...வா...வாட் ஈஸ் ராங்?... ஆபீஸ்லே ஏதாவது ப்ப்ப்ராப்ளமா?"

திக்கித் திணறிப் பேசி மன உளைச்சலுக்கான காரணத்தை சித்ரா அறிய முற்படுவதைப் பார்க்கும் போது சங்கருக்கு பாவமாக இருந்தது.

பெருமூச்சு ஒன்றை வெளியிட்டு அவள் நெற்றியில் விழுந்த கேசத்தை காதுக்கு பின்னால் ஒதுக்கியபடி "எஸ்—பாக்டரிலே ப்ராப்ளம்மா" என்ற போது பொய் சொல்கிறோமே என்று குறுகுறுககவே செய்தது.

இப்போதெல்லாம் சகஜமாக பொய் சொல்ல வருகிறது என்பதை நினைக்கும்போது சங்கருக்கு தன் மேலேயே கோபம் வந்தது.

"இன்னிக்கு ஆபீஸ்லேந்து வர லேட்டாகும் சித்ரு—லேபர் மீட்டிங்"

"ராத்திரி அபீஷியல் டின்னர் இருக்கு; போயிட்டு வந்திடறேன் ஆயா அம்மாக்கு பொழுதோட சாப்பாடு கொடுத்து படுக்க வை, என்ன?"

'காலைல ஆபிசுக்கு சுருக்க போகனும் சித்ரா, பாம்பேலேந்து க்ளயன்ட்ஸ் வராங்க'

பொய் பொய் பொய்.

இரண்டு மாசமாய் அனுராதாவை தனிமையில் சந்திக்க ஓடும்போதெல்லாம் வாயில் சரளமாக வந்த பொய்கள்.

முதல் நாலு தடவைகள் இப்படி ஒன்றுமே தெரியாத சித்ராவிடம் பொய் சொல்லிவிட்டு போவது வலிக்க வலிக்க பிராண்டவே செய்தது. ஆனால் நாள் ஆக ஆக இந்த பிராண்டல் அத்தனை வலிக்கவில்லை; மரத்து விட்டது.

சித்ராவிடம் மட்டுமா பொய்?

ஊரிலிருந்து அவ்வப்போது வந்து போகும் அப்பா, அம்மா, மாமனார், மாமியார் மற்ற உறவினர் என்று அத்தனை பேரிடமும் பொய்தான்.

'டெல்லி மாதிரி இல்லே இங்கே—பாக்டரிக்கு ஜி. எம். ஊர்பட்ட பிரச்சனைகள் இருக்கு மாமா'

'ப்ரமோஷன் கொடுத்து அனுப்பி இருக்கிறவங்களுக்கு திருப்தி வர்றமாதிரி என்வேலை இருக்க வேணாமாம்மா?

'இப்படி ஓயாம உழைச்சிட்டு, அலுப்பா படுக்கைல வந்த விழுந்தா வேற எந்த இயலாமையும் பெரிசா தெரிய மாட்டேங்குது அதான்...உழைக்கறேன். இது உங்களுக்கு கூடவா புரியலேப்பா?"

தலைக்கு தலை இவன் அதிகமாக வேலை பார்ப்பது பற்றியும், வீட்டில் அக்கடா என்று தங்காமல்வேலை வேலை



என்று ஓடுவது பற்றியும் குறிப்பிட்டபோது சங்கரின் பதில் அத்தனை பேருக்கும் தயாராகவே இருந்தது.

ஆனால், தன்னுடைய இந்த செய்கைக்காக வெகுவாக சங்கர் வருந்துவதும் உண்டு தான்.

பெரியவர்களை ஏமாத்துகிறேனே.

என் சித்ராவிடமிருந்து விலகிப் போகிறேனே.

என்ன இதெல்லாம்? என்ற நினைப்புகள் ராத்திரி தூங்க முடியாமல் ஆளை விரட்டுவதும் உண்டுதான். இந்த குற்ற மனப்பான்மையின் பளு தாங்காமல் ஆரம்பத்தில் சரி இனி அனுராதாவை சந்திக்கக் கூடாது என்ற முடிவுக்கு வந்ததும் உண்டுதான்.

அனுராதா...அனு...

அவள் புத்தியும், அவள் சமர்த்தும், அவள் அழகும், அவள் குணமும்...

ஐ லவ் ஹர்...ஐ நீட் ஹர்...

எப்படி அவளைப் பார்க்காமல் இருப்பது?

பேசாமல், சந்திக்காமல் எப்படி இருப்பது?முடியாது... என்னால் கண்டிப்பாக முடியாது.

செய்த தீர்மானம் காற்றில் பறந்து போக இரண்டாம் நாள் காலைலே 'டெல்லி நண்பன் வந்திருக்கான். பார்த்திட்டு வரேன்' என்று சொல்லி அனுராதாவின் வீட்டை பார்க்க வண்டியை செலுத்தினது தானே நடந்தது?

"ச...சங்கர்" அழுந்த அழைத்து மெதுவாக சித்ரா உலுக்கவும் சங்கர் நினைவுகளை ஒதுக்கிவிட்டு மனைவியை பார்த்தான்.

"ஏன் அனுராதாவும், நி...நித்யாவும் இ...இப்பல்லாம் இ...இங்க அடிக்கடி வர மாட்டேங்கறாங்க?..."

சங்கர் லேசாக அதிர்ந்து போய் விழிக்க, சித்ரா "இ... இல்லே அவங்க வந்தா நீங்க கொ...கொஞ்சம் சந்தோஷமா பேசிட்டிருப்பீங்களேனுதான் கே...கேக்கிறேன்." எனவும், அவளுடைய வெகுளித்தனமான பேச்சு மனசின் குற்ற உணர்வை அதிகரிக்க, சங்கர் பார்வையைத் தழைய விட்டான்.

"தெரியாது சித்ரு...அடிக்கடி வர முடியாதபடி ஏதாவது வேலை இருந்திருக்கும்..."

"போன் ப...பண்ணி வரச் சொல்லுங்களேன்..."

சங்கர் பதில் சொல்லத் தெரியாது எழுந்து நின்றான்.

"தலை வலிக்குது சித்ரு—தோட்டத்திலே உலாத்திட்டு வரேன். ஐ நீட்...ப்ரெஷ் ஏர்" என்றவன், ஆயாவை அழைத்து சித்ராவிடம் இருக்கச் செய்துவிட்டு தோட்டத்துக்குப் போனான்.

மனசு ஏகமாய் கனத்தது.

இனியும் நாடகம் போட என்னால் முடியாது என்று இதயம் கத்தியது.

கோழையாக இருக்காதே, பிள மேன்; உண்மையை எல்லாரிடமும் எடுத்துச் சொல்லிவிடு என்று புத்தி உபதேசம் பண்ணியது.

சிகரெட் பிடித்தபடி இப்படியும், அப்படியும் நடந்து கொண்டு சங்கர் யோசித்தான்.

ஒரு முடிவு எடுக்க வேண்டிய கட்டம் வந்து விட்டதை உணர்ந்து பல விஷயங்களை மனசுக்குள் போட்டு அலசினான்.

சித்ராவா, அனுராதாவா?

ஆயசுக்கும் நோயாளியான சித்ராவோடு வாழ விருப்பமா?

இல்லை, அனுராதாவை மணந்து புது வாழ்க்கை அமைக்க உத்தேசமா?



எது சரி, எது தவறு?

எது நியாயம், எது அநியாயம்?

ம்ஹூம்—இல்லை.

இங்கு தர்மம், அதர்மம், நியாயம், அநியாயம் என்ற வாதத்துக்கெல்லாம் இடமே இல்லை. மனசு, அதன் சந்தோஷம், நிம்மதி இதெல்லாம் தான் முக்கியம்.

நான் அனுராதாவைக் காதலிக்கிறேன்.

உளமார, நெஞ்சார...

எனக்கு அவள் வேண்டும்.

சந்தர்ப்பங்களைத் தைரியத்துடன் எதிர்நோக்கத் தெரிந்தவன் தான் ஆண்மை மிக்கவன்.

எனக்கு ஆண்மை இருக்கிறது.

ஐ மஸ்ட் ப்ரூவ் இட்...

ஒரு முடிவுக்கு வந்து விட்ட வேகத்தோடு சங்கர் தன் அறைக்குப் போய் உடைகளை மாற்றிக் கொண்டான். சித்ராவிடம் வந்தான்.

"லாயரைப் போய் பார்த்திட்டு வந்திடறேன் சித்ரு. முக்கியமான வேலை" என்று சொல்லி குனிந்து அவள் நெற்றியில் மென்மையாக முத்தமிட்டுவிட்டு, கண்களை கீறிக் கொண்டு எழுந்த நீரை சித்ரா பார்க்குமுன் அவசரமாக வெளியேறினான்.

## 9

**அ**னுராதாவின் வீட்டில் சங்கர் நுழைந்த போது மணி ஒன்பது என்றது.

நித்யா சாப்பிட்டு தூங்கப் போய் விட்டாள்,

ட்ரான்ஸிஸ்டரில் நியூஸ் கேட்டபடி அந்த மாசத்து ரீடர்ஸ் டைஜஸ்டில் இருந்த அனுராதா சங்கரை கண்டதும் ஆச்சர்யம் கலந்த சந்தோஷத்தோடு 'ஹலோ' என்றாள்.

சங்கர் அவள் பக்கத்தில் உட்கார்ந்தான்.

"என்ன இப்படி ஸர்ப்ரைஸா? சாப்டாச்சா?"

இல்லை என்று தலை ஆட்டின சங்கர் "அனு, ஐ வாண்ட் டு டாக் டு யு" என்றான்.

"வாங்க சாப்பிட்டு கிட்டே பேசலாம்... ஆம்லெட் போடட்டுமா?"

எழுந்த அனுராதாவின் கையை சங்கர் பிடித்துக் கொண்டான்.

"இப்ப எனக்கு சாப்பாடு வேண்டாம்... வாம்மா, கார்லே ஒரு ட்ரைவ் போயிட்டு வரலாம்."

"இங்கேயே பேசலாமே, சங்கர்"

"நோ, போயிட்டு சுருக்க வந்திடலாம், அனு ப்ளீஸ்..."

மேற்கொண்டு வாதிக்க விரும்பாமல் அனுராதா, சமையல்கார அம்மாளை அழைத்து நித்யாவிடம் படுக்கச் சொன்னாள்.

தலை சீவி, வேறு காட்டன் புடவை மாற்றினவள், வாசல் சாவியுடன் வந்து நின்றாள்.

கிளம்பினார்கள்.

கார் நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலையில் ஓடி, எட்வர்ட் எலியட்ஸ் சாலையில் சென்று காந்தி சிலையிடம் மெரினாவில் திரும்பி, உள் சாலையில் நிற்கும் வரை இருவரும் எதுவும் பேசவில்லை.

காரை நிறுத்தி, இக்னிஷனை அணைத்தபின் அப்படியே ஸ்டேரிங்கில் மேல் சங்கர் சாய்ந்ததும், அனுராதா அவன் தோள் மேல் கை வைத்து "என்ன விஷயம் சங்கர்?" என்றாள்.



சங்கர் அவள் கையை பிடித்து வாயில் வைத்து முத்தமிட்டு 'ஐ லவ் யு, ஐ லவ் யு' என்றான் திரும்பத் திரும்ப.

"என்னமோ பேசணும்னு ஓடி வந்தது இதுக்கு தானா சங்கர்?"

சங்கர் அவளைப் பார்த்து திரும்பி உட்கார்ந்தான்.

"இப்ப நா நேரே வக்கீல் வீட்டுலேந்து உன்னை பார்க்க வரேன் அனு..."

"வக்கீலா? எதுக்கு?"

சங்கர் பார்வையை ஜன்னலுக்கு வெளியில் ஓட்டினான். இருட்டில் தெரிந்த கடலை வெறித்தான். மெதுவாக "ஐ வாண்ட் டு டிவோர்ஸ் சித்ரா. அதுக்காகத் தான்..." என்றான்.

அனுராதாவிடமிருந்து எந்த பதிலும் வராமல் போக திரும்பி இரண்டுகைகளாலும் அவள் தோளைப்பற்றினான்.

"புரியலையா அனு? நீ ஆயசுக்கும் என் பக்கத்துலேயே இருக்கணும்னு நா ஆசைப்படறேன். இப்படி அரைமணி, ஒரு மணின்னு திருட்டுத்தனமா உன்னை சந்திக்கறது எனக்குப் பிடிக்கலை... நீ லீகலா என் மனைவியாகணும், நமக்கு குழந்தைகள் பிறக்கணும், நீயும் நானுமா ஒரு அழகான, நிறைவான வாழ்க்கையை வாழ்ந்து காட்டணும்னு நா ஆசைப்படறேன். அதுக்காக... அதுக்காக... புரியலையா, அனும்மா. நா எதுக்காக லாயரைப் பார்த்தேன்னு இன்னுமா புரியலை?"

அனுராதா கண்களை மூடிக் கொண்டாள்.

இன்பமும், துக்கமும் சேர்ந்து அவளுள் பிரவாகமெடுத்தன.

சங்கர் அவளை மணக்க விரும்புகிறரா?

நிஜமாகவா?

நடக்குமா? இது சாத்தியமா?

சரி—வாட் அபௌட் சித்ரா?

அவள் இதை எப்படி தாங்குவாள்?

அனுராதா கண்களைத் திறந்தாள்.

''அவசரப்பட்டு ஒரு முடிவுக்கு வர்ற விஷயமில்லே சங்கர் இது. நிதானமா, நிறைய யோசிக்கணும்...''

''நா யோசிச்சாச்சு... இரண்டு மாசமா மண்டையே குழம்பிப் போற அளவுக்கு யோசிச்சாச்சு''

''லாயர் என்ன சொன்னார்?''

''நாலு வருஷமா நா இன்வாலிட்டோட குடும்பம் நடத்தினதே பெரிய காரியம்னு சொல்றார். டாக்டர் ஸர்டிபிகேட்டோட, டிவோர்ஸை வாங்கிடலாம். நோ ப்ராப்ளம்னு சொல்லறார்''

''வாட் அபௌட் சித்ரா? உங்க பெரியவங்க?''

பெரியவங்க நிச்சயமா ஒண்ணும் சொல்ல மாட்டாங்க... என் மாமனார் ரொம்ப அண்டர்ஸ்டாண்டிங் டைப்...சித்ரா முதல்லே ரொம்ப அடிபட்டு தான் போவா, ஆனா அவளும் புரிஞ்சிப்பா. எனக்கு நிச்சியமா தெரியும். இந்த மாதிரி படுத்த படுக்கையா ஆன பிறகு அவளே 'என்னை டிவோர்ஸ் பண்ணிட்டு வேற கல்யாணம் பண்ணிக்கங்க'னு என்னை தொல்லைப் படுத்தியிருக்கா... நா தான் சம்மதிக்கலை...''

''ஏன் சம்மதிக்கலை சங்கர்? பிகாஸ் யு லவ் ஹர், அதானே காரணம்?''

''எஸ்—காதல்னு தான் நினைச்சேன். ஆனா இப்ப உன் மேல நா வைச்சிருக்கிற ப்ரியம் தான் காதல்னு புரிஞ்சப்புறம், அவ மேல நா செலுத்தறது வெறும் பச்சாதாபம், அன்புனு எனக்கு புரிஞ்சிட்டது...'' திடு மென்று சங்கர் தன் குரலை உயர்த்திக் கத்தினான்.

''டாமிட்—நானும் மனுஷன்தான் அனு. எனக்கும் பீலிங்ஸ் இருக்கு. முப்பத்தி ஆறு வயசுதான் எனக்கு



இப்போ.எனக்குனு ஒரு சந்தோஷமான லைஃப் சிக்கணும்னு நா கொஞ்சம் சுயநலத்தோட ஒ. தப்பா? பேராசையா? ஆசா பாசங்களை எல்லாம கிட்ட ஞானி மாதிரி தான் சில வருஷங்களா பெற்ற தேன்; ஆனா, ஆனா, இனிமே என்னால அப்படி வெ:ம். முடியாது அனும்மா... ஐ லவ் யு, ஐ வாண்ட் யூ...''

சங்கர் முன்னே சாய்ந்து அனுராதாவை தன் பக்கம் இழுத்து, இறுக அணைத்து ஐ லவ் யூ என்று சொல்லி கன்னத்திலும், கண்களிலும், உதடுகளிலும் அழுந்த முத்த மிட்டான்.

இரண்டு நிமிஷத்தில் கொஞ்சம் வேகம் குறைந்ததும் தன்னை சிரமப்பட்டு அடக்கிக்கொண்டு. ''ஸாரி அனு... ப்ளீஸ் அண்டர்ஸ்டாண்ட்'' என்று சொல்லி, ''என் முடிவை சொல்லிட்டேன் இனி உன் இஷ்டம்'' என்றான்.

அனுராதா பேசாமல் இருக்க சங்கர் திரும்ப ''உன் அபிப்பிராயத்தை சொல்லு அனு'' என்றான்,

''சித்ராவை நினைச்சா கஷ்டமா இருக்கு சங்கர்''

''உனக்கு இஷ்டமா இல்லியானு கேட்டா, என்னமோ சொல்றியே!''

எதிரில் வந்த கார் வெளிச்சத்தில் அனுராதாவின் கண்கள் பளபளவென்று மின்னின.

''யு நோ ஐ லவ் யு...''

''ஆர் யு ரெடி டு மாரி மீ?''

''ம்ம்... ஆனா... சித்ரா சங்கர்?''

''சும்மா சித்ரா, சித்ரானு சொல்லி என்னை வேதனை படுத்தாதே அனு...ப்ளீஸ்...''

அப்புறம் அனு எதுவும் பேசவில்லை.

தோள்பட்டையில் தலையை வைத்தபடி பத்து
சரி—ள போல அமர்ந்திருந்தவள் ''நாழி ஆச்சு...
அவ மா'' என்று கேட்க, சங்கர் வண்டியைக் கிளப்
ன்.

மறுநாள் சங்கர் திரும்ப வக்கீலை சந்தித்து, தேவை யான பேப்பர்களைத் தயாரித்தான்.

டாக்டரிடம் காரணம் என்ன என்று சொல்லாமல் சித்ராவின் உடல் நிலையைப் பற்றின ரிப்போர்ட்டை தயாரித்து தரச் சொன்னான். சித்ராவுடன் நிறைய நாழிகை தங்க நேர்ந்தால் மனசு மாறிவிடக் கூடும் என்ற பயத்தில் அடிக்கடி வெளியில் போய் வந்தான். கூடுமான வரையில் அனுராதாவுடன் பொழுதைக் கழித்தான்.

அன்று மாலை அனுராதாவைப் பார்க்கப் போன போது மறுநாள் ரயிலில் தான் தூத்துக்குடி போகப் போவதாக சங்கர் சொன்னான்.

''முதல்லே ஊருக்குப் போய் அப்பா, அம்மாகிட்டே விவரம் சொல்லிவிட்டு, அப்புறமா கோயமுத்தூர் போய் சித்ரா பேரண்ட்ஸை மீட் பண்ண உத்தேசம்.''

அனுராதா சங்கடத்துடன் அவனை நெருங்கி உட்கார்ந்து கைகளைப் பிடித்துக் கொண்டாள்.

''ரிலாக்ஸ் அனு, கண்டிப்பா எல்லாரும் நம்மை சரியா புரிஞ்சிப்பாங்க. எனக்கு அந்த நம்பிக்கை இருக்கு...''

''......''

''அனும்மா...'' சங்கர் குனிந்து அவள் காதருகில் கிசு கிசுத்தான்.

''ம்?''

''ரொம்பசீக்கிரமே நீஎன் மனைவியா பக்கத்திலேஇருப் பேன்றதை நினைச்சுப் பாக்கறப்போ எப்படி இருக்குத் தெரியுமா?''

''ம்ம்ம்...''

''கல்யாணம் ஆன உடனே கம்பெனிக்கு லீவு போட்டு டணும் உன்னை கூட்டிகிட்டு யூரப் போகணும் அனும்மா.

காளான்



பாரிஸ்லே லுவருக்குப் போய் உலகப் பிரசித்தி பெற்ற பெயிண்டிங்களை உன்னோட பார்த்து மகிழணும். முடிஞ்சா ஸ்டேட்ஸுக்கும் அப்படியே போயிட்டு வரணும். மாசக் கணக்கா, சுதந்திரமா. பறவைகள் மாதிரி உல்லா சமா இருக்கணும்...தென்...''

''வாட் அபௌட் நித்யா சங்கர்?''

''ஓ!''—இது நாழிகை அவளை எப்படி அனு. போனேன் என்ற நினைப்பில் சங்கர் விழித்தான். என்

என்னால

அவளையும் கூட அழைத்துப் போகலாம் னம்மா?'' சொல்லலாமா?

தூரத்தில்

ம்ஹூம்—அது எப்படி? ரையும்

அனுராதாவும் நானும் ஒருவரை ஒருவர் நன்றாகத் தெரிந்து கொள்ள முற்படும் சமத்தில் கூட இருந்தால் சரிப்படுமா?

தவிரவும்—அவள் பேச்சும், சிரிப்பும் சதா எனக்கு சித்ராவை நினைவு படுத்திக் கொண்டே இருப்பதும் ஒரு சங்கடம் ஆயிற்றே!

நோ—

சரி வேண்டாம். ஆனால் அவளை யாரிடம் விட்டுச் செல்வது?

''வந்து அனு, நமக்கு கல்யாணமான சில மாசங்களுக் காவது அவளை பம்பாய்லே உன் பேரன்ட்ஸ்கிட்டே விட்டு வைக்கிறது சாத்தியமாம்மா?''

''இது பத்தி நானும் யோசிச்சிட்டுதான் இருக்கேன். பாம்பாய்லே விட வேணாம், இங்கேயே ஸ்கூல் ஹாஸ்டல்ல சேர்த்திட்டா என்ன சங்கர்? நாம தனியாவும் இருக்க முடியும், என்னால அடிக்கடி அவளைப் பார்த்துக்கவும் முடியும்...''

அனுராதாவின் இந்த முடிவு சங்கருக்கு திருப்தி தந்த
என்பது அவன் முகத்தில் வெளிப்படையாகவே தெரிந்த

அரைமணி போல பேசிக் கொண்டிருந்த பின் அவ
கிளம்பினான்.

சித
தயார் மறுநாள் "அப்பா அர்ஜெண்டா தூத்துக்குடிக்
நாழிகை சொல்லி போன் பண்ணார். போயிட்டு சீக்கிர
பயத்தில் றேன்" என்று சித்ராவிடம் சொல்லி, முன் ஏ
வரையில் அவள் தம்பியை துணைக்கு கோயமுத்தூரிலிருந்
அன்றவளோடு தங்கச் செய்த பின், திட்டமிட்டப
போது ஊருக்கு கிளம்பினான்.
போ

# 10

கோயமுத்தூர் விமானம் ஒரு மணி நேரம் லேட்
அனுராதா பொறுமையுடன் லவுஞ்சில் சங்கரின் வருகை
காக காத்திருந்தாள்.

'நா நாளை ப்ளைட்லே வரேன் அனு, ஏர்போர்ட்டுக்
வர முடியுமா?' போனில் சங்கர் பேசிய விதத்திலிருந்
போன காரியம் நல்லவிதமாய் முடிந்து விட்டது என்ப
அனுராதாவால் ஊகிக்க முடிந்தது.

விமானம் வந்து விட்டது.

அனுரரதா கண்ணாடிக் கதவுகளுக்கருகில் சென்
நின்று கொண்டாள்.

சங்கர் அவளைப் பார்த்து விட்டான்.



கால்களை அகல அகலமாக வைத்து கிட்ட வந்தவன் அவள் கையைப பற்றி "ஹலோ டார்லிங் யு லுக் ப்யூடிபுல் ஐ மிஸ்ட் யூ" என்றான்.

லக்கேஜ் எதுவும் இல்லாமல் ஹாண்ட்பாகேஜுடன் சங்கர் பிரயாணம் செய்திருந்ததால் பெட்டிகளுக்காக காத்திராமல் வெளியில் வந்தார்கள்.

"இப்ப நேரே உன் வீட்டுக்கே போயிடலாம் அனு. நாலு நாளா சித்ராவை பார்க்காம இருந்திட்டு இப்ப என் வீட்டுக்குப் போனா—உடனே அவளை விட்டுட்டு என்னால கிளம்ப முடியாது. ஐ ஃபீல் வெரி கில்டி. என்னம்மா?" என்றபடி கார் பார்கிங்கை நோக்கி நடந்த சங்கர் தூரத்தில் தெரிந்த வண்டியையும் பக்கத்தில் நின்ற டிரைவரையும் பார்த்து லேசாக ஏமாற்றமடைந்தான்.

"நீ தனியா வண்டிய ஓட்டிட்டு வரலியா அனு? டிரைவர் வந்திருக்கானா?"

"எஸ். அது, உங்க ஆர்டர் ஆச்சே!"

சிரித்துக் கொண்டே சங்கர் அனுராதா ஏற ஏதுவாய் பின் கதவை பிடித்த பின் தானும் அவள் பக்கத்தில் அமர்ந் தான்.

வண்டி புறப்பட்டது.

"ஸோ"

பதிலுக்கு அனுராதாவும் "ஸோ" என்றாள்.

"என்ன விஷயம்?"

"நீங்கதான் சொல்லணும்..."

"சொல்லறேன்... அவசரம் என்ன? நாலு நாளா என்ன பண்ணினே?"

"ம்? நத்திங் பர்டிகுலர்..."

டிரைவர் கூட இருந்ததால் இதற்கு மேல் என்ன பேசுவது என்று புரியாமல் போக சப்தமில்லாமல் அவளைப் பார்த்து 'ஐ லவ் யூ' என்றான் சங்கர்.

வீடு வந்தது.

இறங்கி உள்ளே போனார்கள்.

''பெட் ரூம்லே உட்கார்ந்திட்டு பேசலாமா?''

''நீங்க போங்க. நா காபி எடுத்திட்டு வரேன்''

சங்கர் விஸில் பண்ணிக் கொண்டே உள் அறைக்குப் போனான்.

பெட்டியைப் படுக்கைமேல் அலட்சியமாய் எறிந்து விட்டு டையை கழற்றினான்.

ட்ரெஸ்ஸிங் டேபிள் கண்ணாடி முன் நின்று தன்னை அழகு பார்த்துக் கொண்டான். சீப்பை எடுத்து தலையை வாரினான்.

காபியுடன் உள்ளே நுழைந்தவளின் தோளைச் சுற்றி அணைத்து 'ஐ லவ் யு' என்று உச்சந்தலையில் முத்தமிட்டான்.

''முதல்லே காபி சாப்பிடுங்க. ஆறிடும்''

காபியை கையில் வாங்கின போது அனுராதா அன்று வித்தியாசமாக இருக்கிற மாதிரி தோன்ற ''எனிதிங் ராங் அனும்மா?'' என்றான்.

''நோ''

''பின்னே ஏன் எப்படியோ இருக்கே?''

''எப்படி இருக்கேன் சங்கர்?''

''ம்ம்? கொஞ்சம் சீரியஸா—என்னமோ யோசிக்கிற மாதிரி?''



அனுராதா மெல்லியதாய் புன்னகைத்தாள். அப்புறம் ''நீங்க போன விவரம் பத்தி சொல்லுங்க'' என்றாள்.

பழைய உற்சாகம் திரும்ப எட்டிப் பார்க்க சங்கர் காபி கோப்பையைக் கீழே வைத்துவிட்டு அனுராதாவின் கைகளைப் பற்றின வண்ணம் படுக்கையில் அமர்ந்தான்.

''சொல்றத்துக்கு ஒண்ணுமே இல்லை அனு. எவ்ரி ஒன் வாஸ் வெரி அண்டர்ஸ்டாண்டிங். முதல்லே எங்க அப்பா 'சித்ரா இதை சரியா ஏத்துப்பாளா, அவளால் உன் பிரிவை தாங்கமுடியுமா'ன்னார். அப்புறம் கொஞ்சம் யோசிச்சிட்டு உன் இஷ்டம் உனக்குத் தெரியாததானிட்டார்.''

''வாட் அபௌட் சித்ராஸ் பேரண்ட்ஸ்?''

''ஓ! என் மாமா ஒரு ஜெம் ஆஃப் எ மான், ஐ டெல் யு...விஷயத்தை நான் சொன்னதும் ஒரு நிமிஷம் அப்படியே உட்கார்ந்திருந்திட்டு எழுந்து வந்து என் தோள்களை தட்டிக் கொடுத்தார். 'உங்க நிலைமை எனக்கு நல்லா புரியுது சங்கர். ஐ விஷ் யு போத் பெஸ்ட் ஆப் லக். தேவையான ஏற்பாடுகளைக் கவனிக்கத் தொடங்குங்க. சித்ராவைப் பத்தி கவலைப்பட வேணாம். நாங்க இருக்கோம்'ன்னார். யார் சொல்லுவாங்க இந்த மாதிரி—என்ன அனு?''

அனுராதா நெகிழ்ந்து போனாள்.

எந்த மாதிரி உயர்ந்த மனசு ஒரு மனுஷனுக்கு இருந்தால் இப்படி தன் மகளை ஒதுக்கித் தள்ளும் மாப்பிள்ளையின் நல்ல வாழ்க்கைக்கு வாழ்த்து கூற இயலும்?

சட்டென்று விழியோரங்களில் நீர் பூக்க, அனுராதா தலையைக் குனிந்து கொண்டாள்.

''என்ன அனு?''

''ஒண்ணுமில்லே...ஜஸ்ட் லிட்டில் எமோஷனல்...''

சங்கர் அவள் கையைப் பற்றி ஒவ்வொரு விரலாக முத்தமிட்டான்.

இரண்டு நிமிஷங்கள் அவனுடைய தாபம் அடங்குவதற்காகக் காத்திருந்து விட்டு அனுராதா பேசினாள்.

''சங்கர்''

''எஸ் டார்லிங்''

''நா...நா உங்க கிட்ட கொஞ்சம் பேசணும்''

வலது கையிலிருந்து இடது கைக்கு தாவின சங்கர் 'பேசேன்' என்றான்.

அவன் பிடியிலிருந்து தன் கையை விடுவித்துக் கொண்ட அனுராதா,

''நா பேசப் போறது ரொம்ப சீரியஸ் ஆன விஷயம் சங்கர்'' என்றாள்.

அந்த குரல் புதுசாய் ஒலிக்க சங்கர் தலை நிமிர்ந்தான்.

''என்னம்மா?''

அனுராதா எழுந்து ஜன்னலிடம் சென்று நின்றாள்.

மரக்கிளையில் அமர்ந்திருந்த குஞ்சு காக்கைக்கு தாய் காகம் எங்கிருந்தோ இரை கொண்டு வந்து அவசரமாக ஊட்டியது.

''அனு...வாட் ஈஸ் த மேட்டர்?''

அனுராதா திரும்பினாள்.

''நா பேசறதைக் கேட்டு நீங்க கோபப் படக்கூடாது சங்கர். யோசிக்காம பேசறேன்னு ஆத்திரப் படவும் கூடாது ப்ளீஸ் லிஸன் டு மீ பேஷன்ட்லி...என்ன சங்கர்?''



எதற்காக இத்தனை பெரிய பீடிகை என்ற வியப்பில் சங்கரின் புருவங்கள் முடிச்சுபோட்டுக் கொண்டன. ஐந்தடி தள்ளி நிற்கும் அனுராதாவை பார்க்கும் போது, கடந்த சில மாசங்களாகப் பார்த்து, பேசி, பழகும் அனுராதா இவள் இல்லை என்ற உணர்வு மனசை ஆக்கிரமிக்க என்ன இது என்று சங்கர் அதிர்ந்து போனான்.

''சங்கர் ஆர் யு லிஸனிங்?''

''ம்''

''வந்து...சங்கர்...நீங்க ஊர்ல இல்லாத நாலு நாள்லே நா நிறைய யோசிச்சேன். பல விஷயங்களைப்பத்தி ஆழமா சிந்திச்சேன்.''

''ம்...''

''உங்களோட நெருங்கிப் பழக ஆரம்பிச்ச இந்த நாலு மாசமா நா என்ன சிந்திச்சாலும், எதைப் பத்தி யோசிச்சாலும் அதன் பின்னணிலே நீங்க இருந்திருக்கீங்கன்றது நீங்க இல்லாம இருந்த இந்த நாலு நாள்லே தான் என்னால உணர முடிஞ்சிது. அதாவது, உங்க இன்ஃப்ளுயென்ஸ் இல்லாம, உங்க பிஸிகல் அட்ராக்ஷன், நெருக்கம் இல்லாம முதல் முறையா இந்த நாலு மாசத்துலே ஒரு தனிமை கிடைச்சு என்னை நானே ஆராய்ந்து பார்த்தப்போ சில உண்மைகளை அப்பட்டமா என்னால உணரமுடிஞ்சிது...''

தான் நினைப்பதை சங்கருக்கு தெளிவாக புரிய வைக்க வேண்டுமே என்ற பயத்துடன் அனுராதா வார்த்தைகளை யோசித்து தேர்ந்தெடுத்தாள்.

''நாம இப்ப கல்யாணம் பண்ணிக்க விரும்பறோம்.சரி இதுக்காக நீங்க சித்ராவை டிவோர்ஸ் பண்ணப் போறீங்க. நா? நா என் நித்யாவை ஹாஸ்டல்லே விடப் போறேன்... நாம இரண்டு பேரும் சந்தோஷமா இருக்கணும்னு நம்மை

சார்ந்து நிக்கிற, இத்தனை வருஷங்களா நம்ப அன்புலே வளர்ந்திட்ட இரண்டு ஜீவன்களை நம்மை விட்டு விலக்க நாம தயார் ஆயிட்டோம். என்ன சங்கர் நா சொல்றது சரி தானே?''

அனுராதா குறுக்கும் நெடுக்கும் நடந்தாள். நின்றாள். சங்கரை உற்று நோக்கின வண்ணம் பேசினாள்.

''நாம ஒருத்தரை ஒருத்தர் சந்திக்கிற வரைக்கும் நமக்கு இந்தஇரண்டு பேரோட அன்பும் வேண்டி இருந்தது இப்ப வேண்டாம்னு தோணிடிச்சி, ஸோ, சட்டுனு உறவை கத்திரிக்க நாம முன் வந்திட்டோம்...''

அனுராதா சங்கரின் பக்கத்தில் உட்கார்ந்தாள்.

''ஏர் போர்ட்ல என்ன சொன்னீங்கனு ஞாபகம் இருக்கா சங்கர்? 'வீட்டுக்குப் போனா உடனே கிளம்ப முடியாது. ஐ வில் ஃபீல் கில்டி'னு தானே? சித்ராவை தனியா விட்டுட்டு கிளம்பினா ஒருகுத்த உணர்வுமனசை நெருடும்ன்றது உங்களுக்குத் தெரிஞ்ச விஷயம்தான். அதனால, இப்ப அதை அவாய்ட் பண்ணிட்டீங்க...சரி. ஆனா, சங்கர், கொஞ்சம் கூட சித்ரா எதிர் பார்க்காத தினுசுலே நீங்க அவங்களை டிவோர்ஸ் பண்ணி உங்க வாழ்க்கைலேந்து விலக்கிட்டா, அப்புறம் ஆயுசுக்கும் அந்த நடவடிக்கை உங்களை உறுத்திட்டே இருக்குமே, அதை எப்படி தடுக்க போறீங்க? ம்? உங்க நிலைமை தான் எனக்கும். நித்யாவை ஹாஸ்டல்லே சேர்க்கறது இப்ப எனக்கு சுலபம். ஏன்னா அட் தி மோமென்ட் நா உணர்ச்சி வசப்பட்டிருக்கேன். ஐம் இன் லவ் வித் யூ. எனக்கு இப்ப உங்க நெருக்கம் வேணும். ஆனா நாளைக்கு இந்த தாபம், உடம்போட வேகம் குறையறப்போ, உடம்பு சுகத்துக்காக ஆறு வயசு குழந்தையை பிரியசம்மதிச்சேனேன்ற கில்ட் என்னை வாட்டி எடுக்கறதை நா எப்படி தாங்கிக்கப் போறேன்...சங்கர்?''



அனுராதா நிறுத்தாமல் பேசிக் கொண்டே போனாள். சங்கர் தன் பேச்சை எப்படி எடுத்துக் கொள்கிறான்; அது அவனை எப்படி பாதிக்கிறது என்று நிறுத்தி கவனிக்கக் கூடப் பொறுமை இல்லாதவள் போல அவசரமாய் பேசினாள்.

''இந்த குத்த உணர்ச்சிகளை ஒரு பக்கமா வையுங்க... நா முக்கியமான விஷயத்துக்கு வரேன். முதல்லே சொன்ன மாதிரி இத்தனை வருஷமா நான் நித்யாவே உலகம்னு, நீங்க சித்ராவே சர்வமும்னு வாழ்ந்திட்டோம், அந்த இரண்டு பேரும் கூட நாம இரண்டு பேரும் தான் அவங்க உலகம், உயிர் எல்லாம்னு வாழ பழகிகிட்டாங்கன்றதை நாம எப்படி மறந்து போனோம் சங்கர்? நாம இரண்டு பேரும் இந்த இழப்பில் அதிகம் தவிக்க மாட்டோம். பிகாஸ், உங்ககளுக்கு நா, எனக்கு நீங்க. ரொம்ப சரி. ஆனா அந்த இரண்டு பேருக்கும் யாரு? இத்தனை வருஷமா அன்பை கொட்டி கொடுத்திட்டு திடும்னு ஒண்ணுமே இல்லாத சூன்யத்துக்கு அவங்களை விரட்ட நாம் துணிஞ்சது நியாயமா சங்கர்? சொல்லுங்க... பல வருஷங்களா நம்மை சந்தோஷப்படுத்தின அதே அன்பை அவங்க இன்னிக்கும் கொடுக்கத் தயாரா இருந்தும், திடீர்னு அவங்க நமக்கு வேண்டாதவங்களாயிட்டது தானே நிஜம்; இனி அவங்களுக்கு விமோசனம் என்ன சங்கர்?''

ரொம்பவும் உணர்ச்சி வசப்பட்டு விட்ட மாதிரி அனுராதாவின் குரல் பிசிரத் தொடங்கியது.

''நாலு நாளா எனக்கு இதே சிந்தனை தான்... இப்படி திடும்னு வேண்டப் படாதவங்களா ஆகப் போறவங்க பிறந்தே இருக்க வேணாமே சங்கர்... ஏன பிறந்தாங்க? இவங்க பண்ண தப்பு என்ன ஒண்ணுமேயில்லே... சத்தியமா இவங்க மேல எந்த தப்பும் இல்லையே! இவங்க பிறக்காம இருந்தா சரி, ஆனா, பிறந்திட்டாங்களே... இனி இவங்களுக்கு விமோசனம் சாவு மூலமா தானா சங்கர்? என் நித்யாவும் உங்க சித்ராவும் கணப்பொழுதுலே

வேண்டப்படாத ஜீவன்களா ஆயிட்டாங்களே சங்கர்... இனி இவங்களுக்கு விமோசனம் என்ன? இவங்களோட இந்த நிலைமைக்கு நாம தானே காரணம்? இவங்க கிட்ட நாம வைச்சிருந்த அன்பு மேல பூஞ்ச காளானா படர்ந் திட்டது நம்ம கல்யாண ஆசை தானே? வேணாம் சங்கர்... உண்மையான அன்பை காளான் மறைக்க விட்டுட்டு வாழ் நாள் பூரா குத்த மனப்பான்மையோட துடிக்க வேணாம்... நா சொல்றது உங்களுக்கு விளங்குதா? வில் யூ ஹெல்ப் மீ? ப்ளீஸ்... ப்ளீஸ்...''

இரண்டாக மடிந்து உட்கார்ந்து அனுராதா அழத் தொடங்கின பிறகும் சங்கர் இருந்த இடத்திலிருந்து எழுந் திருக்கவில்லை.

இருட்டறையில் சட்டென்று விளக்கை ஏற்றி வைத்த மாதிரி மனசு பிரகாசமாக இருந்தது.

புழுக்கமான அறையின் கதவுகளைத் திறந்து வைத்து விட்டது போல நெஞ்சம் காற்றோட்டமாக இருந்தது,

என்னமாய் பேசி விட்டாள்?

அழுக்கடைந்து கிடந்த வாசலைப் பெருக்கி, துடைத்து, பளிச்சென்று கோலம் போட இவளால் எப்படிமுடிந்தது!

இருதயத்தில் படர்ந்திருந்த காளானைப் பிடுங்கி தூர எறிவது இவளுக்கு எப்படி சாத்தியமாயிற்று!

வாழ்க்கையில் எல்லாவற்றையும் விட மனுஷனாக இருப்பதும், மனுஷத் தன்மையுடன் இருப்பதும் தான் ரொம்ப உயர்ந்த விஷயங்கள் என்பதை எத்தனை அழகாக தெளிவாக்கி விட்டாள்.

நெஞ்சில் பொங்கிய ரத்தம் கண்களிலிருந்து நீராக இறங்க சங்கர் எழுந்தான்.

இனி நான் என்ன செய்ய வேண்டும்?



வீட்டுக்குப் போய் கோயமுத்தூருக்கு ட்ரங்கால் போட்டு 'சீக்கிரமே சித்ராவோடு அங்கு வந்துவிட நினைக் கிறேன்! பாக்டரி சுமையை உங்களோடு சேர்ந்து சுமக்க வாய்ப்பு தருகிறீர்களா?' என்று சித்ராவின் அப்பாவிடம் கேட்க வேண்டும். அப்புறம் லாயருக்கு போன் செய்து விவாகரத்து நோட்டீஸ் தயாரிக்க வேண்டாம், அதற்கு இனி அவசியமில்லை என்று சொல்ல வேண்டும்.

கவிழ்ந்து மடிந்து வாய்விட்டு அழும் அனுராதாவை நெருங்கி 'அழாதே அனும்மா; காளான் அழிந்து விட்டது. இனி எதற்காகவும் கலங்காதே, பரிதவிக்காதே'— என்று சொல்வதற்காகக் குனிந்து அவள் தலையை சங்கர் நிமிர்த்திய போது அவன் கண்களிலிருந்து பிரவாக மெடுத்த நீர் சொட்டு சொட்டாக அவள் கன்னங்களில் விழுந்து தெறித்தது.

—X—

# கடைசியில்

## 1

"கூக் கக் கக் கக்" என்று எங்கே அமானுசிய்யமா ஒரு பல்லி குரல் கொடுக்க உமா சட்டென்று விழித்துக் கொண்டாள்.

மணி என்ன?

மூன்றுதானா?

டீ போட நாழி ஆகவில்லை என்ற நினைப்புடன் மீண்டும் கண்களை மூடித் தூங்க முயற்சித்தாள்.

கழுத்தில் கசகசவென்று ஊறிய வியர்வை, கோடாய் வழிந்து தலையணையை நனைக்க, சேலைத் தலைப்பால் கழுத்தை துடைத்தபடி புரண்டு படுத்தாள்.

ம்ஹூம்—தூக்கம் வரவில்லை.

இரண்டு நிமிடம் போல அப்படியே படுத்தவள், இனி தூங்க முடியாது என்று ஆனதும் எழுந்து உட்கார்ந்தாள்.

பார்வை சன்னலைத் தாண்டி வெளியே ஓடியது.

கண்ணுக்கு எட்டியவரை தரிசாகக் கிடந்த நிலம்,மழையின்மை காரணமாகப் பொட்டல் காடாகப் பரந்திருந்த பழுப்பு மண். தொலைவில் நீலமாய் வானம். இரண்டு வெள்ளை மேகங்கள் பந்தாய் திரண்டு, கொஞ்சம் கொஞ்சமாய் கொம்பு முளைத்த ராட்சதனாகவும், யானையின் தும்பிக்கையாகவும் மாறி உருவிழந்து கொண்டிருந்தன.

ாமல் பரிதவித்த காகம் ஒன்று அலை
படி, தண்ணீர் எங்காவது இருக்கிறதா
ன் முதுகில் உட்கார்ந்து தலையைச்சாய்த்து
தடியது.

ற்று இல்லை. வீட்டை ஒட்டி நின்ற வேப்ப மரத்தி
லைகூட அசையவில்லை.

உமாவுக்கு எரிச்சலாக இருந்தது.

என்ன ஊர் இது; சரியான பட்டிக்காட்டு கிராமம்.

பழகுவதற்கு ஒரு படித்த குடும்பம் உண்டா, சாய
காலம் ஆனால் பொழுதைப் போக்க ஒரு மன்றம் உண்டா
நல்ல சினிமா தியேட்டர் உண்டா—ஊகூம்—என்ன இரு
கிறது. இந்தப் பட்டிக்காட்டில்...

அட, பொழுதுபோக்கு சாதனம் வேண்டாமய்யா
இருபத்தி நாலு மணி நேரமும் மின்சாரமாவது இருக்க
கூடாதா?

காலை இல்லை, பகல் இல்லை, இரவு இல்லை என்று எப்
போது போகும் என்று குறிப்பிட்டுச் சொல்ல முடியாதபடி
திடுப் திடுப் என்று விளக்கும், விசிறியும் நின்று போவதா
தான் எத்தனை அவதி!

இந்த வாரப் பத்திரிகைகளைப் படித்து முடித்தா
விட்டது. பூவேலை செய்து கண் எரிகிறது அக்கடா என்
ஒரு மணி நேரம் படுத்துத் தூங்குவோம் என்று தலயனை
யைத் தட்டி படுத்தால் மின்சாரம் நின்று போய்விடும். நா
பூராவும் கிராமம் கிராமமாய் விவசாயத்துக்கும், கறவை
மாட்டுக்கும் கடன் தருகிறேன் என்று லோ லோ என்
வெயில் வீணாகாமல் சுற்றிவிட்டு வரும் கணவன் குளித்து
சாப்பிட உட்கார்ந்தால், கழுகுக்கு மூக்கில் வேர்க்கிற மாதி
"டக்" என்று மின்சாரம் நின்றுவிடும்.

கசகசவென்று வியர்வை வழிய, இருட்டில் முட்டி
கொண்டு மோதிக்கொண்டு என்ன சாப்பாடு, என்ன
தூக்கம்? ச்சே—



மூன்று மாதமாய், இந்த ஊருக்கு வந்த நாள்
நித்தமும் இதே வேதனைதான்.

போன பத்துநாள் வரை நிலைமை இத்தனை மோச
மாக இல்லை. விடுமுறை முடிந்து படிப்பைத் தொடர
செல்வி சென்னைக்குப் போய்விட்ட இந்தப் பத்து நாளாய்
தான் "போர்" என்றால் செமை "போர்."

சென்னையை விட்டுவிட்டு கிராமத்துக்கு மாற்றல் ஆகி
வரும் பொழுதே உமா முகத்தை ஒண்ணரை முழத்துக்கு
தூக்கி வைத்துக் கொண்டுதான் வந்தாள்.

இந்த மாற்றல் வேண்டாம் என்று அவள் தலை கீழாக
நின்றும், கணவன் சரவணன் அதற்கு இடம் கொடாததால்
முணுமுணுத்தபடி உமா மூட்டைகளைக் கட்டினாள்.

"மெட்றாஸை விட்டுட்டு, அந்தத் தண்ணி இல்லா
காட்டுக்குப் போகணும்னு உங்கள் பாங்க் சொல்லிச்சுன்னா
சரினு நீங்களும் வந்துட்டீங்களே...... பட்டிக்காட்டு
கிராமத்திலே குடித்தனம் பண்றதுன்னா லேசாங்க?"

"ஒரு வருடம் இருந்தா போதும்னு யேலிடத்துலே
சொல்லி இருக்காங்க உமா—பல்லை கடிச்சிகிட்டு இருந்திட
முடியாதா?"

"ஐயோ...ஐயோ...பல்லைக் கடிச்சிகிட்டாலது ஒரு
வருடம் அவதிப்படணும்னு தலை எழுத்தாங்க?

"என்ன பண்றது சொல்லு? ப்ரமோஷன் வேணும்னா
இதெல்லாம் பார்க்கக்கூடாது. இங்க நான் ஆயிரத்துல
ஒருத்தனா இருக்கேன்..இந்த டிரான்ஸ்பரை ஒத்துக்கிட்டா
மானேஜர் என்கிற பதவி உயர்வோடு போகலாம். இப்படி
அப்படி ஒரு வருடத்தை ஓட்டினப்புறம், திரும்ப பெரிய
நகரம் எதுக்காவது மாத்தறேன்னு சொல்லியிருக்காங்க...
அந்தஸ்து, பணம் வருதுன்னா நாலையும் அனுசரிச்சுத்
தானே போகணும்?"

'அந்தப்பட்டிக்காட்டுலே பள்ளிக்கூடம் இருக்கா? நம் ...ல்வியை படிக்க வைக்கிற மாதிரி ஸ்கூல் இருக்கா?''

சரவணன் ஒரு நிமிடம் மவுனம் சாதித்தான்.

''பேசாம இருந்தா என்னங்க அர்த்தம்?''

''ம்?பேசாம இல்லே—இதப்பத்தியும் நான் யோசிச்சிட்டேன். நல்ல கான்வெண்ட்லே படிக்கிற பெண்ணை இப் அனாவசியமா நம்மகூட இழுத்தடிக்க வேணாமனு எனக்குத் தோணுது. அவள் பாட்டுக்கு தாத்தா பாட்டியோட இருந்து படிக்கட்டும். நாம அப்பப்ப சனி ஞாயிறிலே வந்து கவனிச்சுப்பம். ஒரு வருஷம் கழிச்சு வே பெரிய டவுனுக்கு மாத்தினப்புறம் அவளை நம்மகிட்ட கூட்டிக்கிடலாம். என்ன?''

களுக்கென்று கண்களில் நீர் கட்டிக்கொள்ள, உம பரிதவிப்புடன் பேசினாள்.

''அது எப்படிங்க? செல்வியைப் பிரிஞ்சு நான் இருக் மாட்டேன். தவம் இருந்து பெத்த பிள்ளை, அத விட்டுட் எப்படிங்க இருக்கிறது?''

''அப்ப சரி...நீ இங்கேயே இருந்துடு நான் மட்டும் போறேன். முடிஞ்சப்ப நான் வரேன். செல்விக்கு லீவுன்ன நீங்கள் அங்கே வரலாம்.''

இந்த யோசனை சரி என்று உமாவுக்குத் தோன் வில்லை.

அந்தப் பட்டிக்காட்டு ஊரில் கணவன் தனியாக குடி தனம் பண்ணுவது சாத்தியமா?

பாங்க்கை ஒட்டியே வீடு இருக்கிறதாம். அதனால் வீ பார்க்கும் பிரச்சினை இல்லை. என்றாலும், வீட்டை நி வகித்து, சமையல் சாப்பாட்டை கவனித்து—ஏ அப்பா- இத்தனையும் இவரால் ஒண்டியாக எப்படி சமாளிக் முடியும்?

கிராமம் என்பதால் நல்ல ஓட்டல் இருப்பதுகூட ச தேகம்தானாம்—



தூங்கி எழுந்து காபி தயாரிப்பதில் இருந்து. இரவு சாப்பாடு வரை தானே சமைத்துக் கொண்டு, பாங்க் வேலையையும் பார்த்துக்கொண்டு...இதெல்லாம் சரிபட்டு வருமா?

மேலும் கணவன் அங்கு திண்டாடித் தவிக்கும்போது இங்கு தான் மட்டும் குஷாலாக இருக்க மனம்தான் வருமா?

ம்ஹூம், வராது.

மாமியாரும், மாமனாரும் வேறு தீர்மானமாகச் சொல்லி விட்டார்கள்.

''அசட்டு பிசட்டுனு எதையாவது நினைசுச்கிட்டு அவனோட போக மாட்டேன்னு சொல்லாதே; ஏற்கனவே குடல் புண்ணு உள்ள பிள்ளை அவன். நல்ல சாப்பாடு, கவனிப்பு இல்லாட்டி உடம்பு சீரழிஞ்சி போயிடும். செல்வியை நீ என்ன ஆஸ்டல்லியா விட்டுவிட்டுப் போகப் போறே? நாங்கள் இல்லியா? எங்கள் பேத்திய எப்படிப் பார்த்துக்கறதுன்னு எங்களுக்குத் தெரியாதா? வீணா, தர்க்கம் பண்ணிகிட்டு நிக்காமல், ஆக வேண்டிய காரியங் களைக் கவனி ..''

அவ்வளவுதான். அதோடு மாற்றம் பற்றின பேச்சுக்கு முற்றுப் புள்ளி விழ, உமா கணவனுடன் கிளம்பி இந்த ஊரைப் பார்க்க வந்து சேர்ந்தாள்.

சின்ன ஊர். அக்கிரகாரத் தெருவும், ரெட்டிமார் தெருவும் சிவன் கோவிலுமாய் அமைதியாய் இருந்தது.

ஊரின் மையத்தில் இல்லாமல் கொஞ்சம் தள்ளி தனியாய் இருந்த சேரியின் எதிரில் பாங்க்கும்,வீடும் அமைந் திருந்தது உமாவுக்குக் கோப மூட்டிய இன்னொரு விஷயம்.

''பாங்க்கைத்தான் திறந்தாங்களே, அதை இப்படியா ஊருக்கு வெளியிலே திறக்கணும்? கொஞ்சம் ஆள் நட மாட்டம் இருக்கிற இடமா ஊர் தெரு ஒண்ணுலே இவங் களுக்கு வீடு கிடைக்காமலா போயிடிச்சி?''

''அதில்லை உமா. ரெட்டியார் ஒருத்தர் தனக்கு பண்ணை போடவும், வசதியா தங்கிக்கவும் இந்த இடத்தை வாங்கி வீட்டைக் கட்டினாராம். வீட்டை கட்னப்புறம் திடும்னு மனசு மாறினதுலே பண்ணையும் வேணாம், ஒண்ணும் வேணாம்னு அவர் தீர்மானம் பண்றதுக்கும், இந்த ஊரிலே பாங்கி கிளை ஒண்ணு திறக்கலாம்னு எங்கள் மேலிடம் தீர்மானம் செய்யறதுக்கும் சரியா இருக்கவே, இதைவிட புது கட்டிடம், முக்கியமா வசதியான கட்டிடம், ஊர்ல இல்லைங்கிறதால இதையே தேர்ந்தெடுத்திடுச்சு. இது ஒண்ணும் அப்படி ஊர்லேந்து தள்ளி இல்லையே உமா! மெயின் ரோட்டுலே அரை கிலோ மீட்டர் வந்தா நம்ப பாங்கி! ஊருக்கும், நமக்கும் நடுவுல ஓர் அரிசி அரைக்கிற மெஷன், ஓர் உரத் தொழிற்சாலை எல்லாம் இருக்கே! அப்படி என்ன ஆள் இல்லா காட்டுலேயா நாம இருக்கோம்?''

சரவணன் சொன்னது சரிதான்.

கட்டிடத்தைப் பொறுத்தவரை குறை எதுவும் இல்லை. முன் பக்கம் பாங்கி. பின் பக்கம் வீடு. கழிவறை வசதி யுடன் கூடிய காற்றோட்டமான வீடு. வீட்டைச் சுற்றி கனமாய் வேலி. சரவணன் வெளியூர் போனாலும் கவலை இல்லாதபடி எந்நேரமும் பாதுகாப்பாய் வாசலில் நிற்கும் காவலாளி. இங்கே அங்கே போய் வர ஜீப். அப்புறம் என்ன?

ஏனோ இத்தனை வசதிகள் இருந்தும், பேசிப் பழக படித்த மனிதர்கள் இல்லாததும், பொழுது போக நல்ல சினிமா கொட்டகைகள் இல்லாததும் உமாவை வெகுவாக பாதித்தது மெய்.

இவருக்கு என்ன, தூங்கி எழுந்து சாப்பிட்டு, பாங்கிக்குப் போய்விட்டால் அங்கு ஆட்களைப் பார்க்க, பேச வெளி யிடங்களுக்குப் போக என்று பொழுது ஓடிப் போய் விடுகிறது. அப்புறம் என் சலிப்பும், என் தனிமையும் இவருக்கு எப்படிப் புரியும்?



''போர் அடிக்கிறது'' என்றால், ''புத்தகம் படி—கைவேலை பண்ணு, தோட்டம்போடு'' என்று எதை யாவது சொல்லிவிட்டு அதோடு பிரச்சினை விட்டது. என்று நகர்ந்து விடுகிறார். எத்தனை நாழிகைதான் பத்திரிகை படிப்பது இல்லை. எத்தனை கைவேலைகளைத்தான் செய்து குவிப்பது?

ஒரு டேபிள் கிளாத், இரண்டு தலையணை உறைகளில் பூ போட்டாகி விட்டது. செல்விக்கு ஒரு பாவாடையும் தயார். அப்புறம்? குனிந்து பூ வேலை செய்து, படித்துப் படித்து கண்கள் எரிச்சல் கண்டு போகின்றனவே தவிர, பொழுது எங்கே போகிறது?

ஆயாசம் மாறாமலே உமா எழுந்து சன்னலிடம் சென்றாள்.

கம்பிகளில் முகத்தைப் பதித்து வெளியே வெறித்த போது, ''தோட்டம் போட்டுப் பாரேன், உமா—மனதுக்கு தெம்பா இருக்கும்; பொழுதும் போகும்'' என்று அவள் கணவன் அடிக்கடி கூறுவது நினைவுக்கு வந்தது.

வீட்டைச் சுற்றிப் பொட்டல் காடாக இருக்கும் இடத்தை பூ சிரிக்கும் தோட்டமாக மாற்றினால் எப்படி இருக்கும்?

பச்சென்று அன்றாடம் தோட்டத்துக் காய்களை, கீரையைப் பறித்து சமைத்தால் எப்படி சுவைக்கும்?

முயற்சி செய்து பார்க்கலாமா?

என்ன பிரமாத யத்தனம் தேவைப்பட்டுவிடப் போகிறது! தெரிந்தவர்களிடம் சொல்லி உரமும், விதை களையும் வாங்கித் தருவதாக இவர் சொல்லியிருக்கிறார். கிணறு ''ஆ'' வென்று வாயைப் பரத்திக்கொண்டு இருப் பதால் தண்ணீருக்குக் கவலையில்லை. தோட்டக்காரன் ஒருவனை நியமித்துவிட்டால் போதும்.

ரோஜாவும், கனகாம்பரமுமாய் தோட்டத்தில் பூத்து குலுங்குவதாகவும், உயர உயரமாய் வெண்டையும் கொத்த வரையும் வளர்ந்து காய்ப்பதாகவும் கற்பனை பண்ணிய போது புதுவித மகிழ்ச்சி மனதில் விரிய மாலையே, வீட்டு

வேலைக்கு வந்த அஞ்சலையிடம் தோட்ட வேலைக்கு ஒரு ஆள் பார்த்து வரும்படி உமா கூறினாள்.

## 2

பாவாடை, குடிசைக்கு முன்னால் வந்து நின்றான்.

அழுக்கு நாலு முழம் வேட்டி. அதைவிட அழுக்கான தோளில் தொங்கிய துண்டு. எண்ணெய் காணாமல் செம்பட்டையாய் காற்றில் பறந்த முடி. வெற்றிலைக் காவி ஏறின பற்கள். வலப் புயத்தில் சிவந்த நாடாவால் கட்டப்பட்ட தாயத்து.

தோளில் தொங்கிய துண்டால் மண் திண்ணையை இரண்டு தரம் தட்டிவிட்டு உட்கார்ந்தான்.

காதுக்குள் அரித்தது.

கர் கர் என்று தொண்டையில் ஓசை எழுப்பி, சுண்டு விரலை காதுக்குள் விட்டு மேலும் கீழுமாய் வேகமாய் ஆட்டினான்.

அரிப்பு குறையாமல் இருக்கவே கையை நீட்டி சற்று தள்ளிக் கிடந்த தென்னங்குச்சி ஒன்றை எடுத்து, இரண்டாக மடித்து காதுள் விட்டுக் குடைந்தான். அரிப்புக்கு இதமாக இருந்தது. குச்சியை வெளியே எடுத்து, அதில் ஒட்டிக் கொண்டிருந்த அழுக்கை வேட்டியில் துடைத்து, மீண்டும் அதைக் காதுள் நுழைத்தபோது, குடிசை உள் பாத்திரம் எடுத்து வைக்கும் ஒலி கேட்டது.

தேவகி சமைக்கிறாளா?



உள்ளே போய் எட்டிப் பார்க்க பாவாடைக்குத் தயக்கமாக இருந்தது.

காலையில் போன கணவன், ஏதாவது வேலை செய்து ஒன்று இரண்டாவது கொண்டு வருவான் என்ற எதிர்பார்ப்புடன் இருக்கும் மனைவியை ஏமாற்ற வேண்டுமே என்ற நினைப்பு வருத்தத்தைத் தந்தது

உரத் தொழிற்சாலையில் தொடங்கி, கடைசி வீடு வரை ஏறி இறங்கியாகி விட்டது. உருப்படியாய் ஏதாவது வேலை கிடைத்தால்தானே?

கோவில் ஐயர் வீட்டு சம்சாரம் விறகைப் பிளந்து போடச் சொல்லி, மதியம் காய்ந்த 'வயிறக்கு மோர்விட்ட சோற்றைக் கொடுத்தாள். புண்ணியவதி—ஏதோ அந்த மட்டுக்கு கால் வயிறோ அரை வயிறோ, ஒரு வேளைப் பாடு போயிற்று. உண்ட களைப்பு ஆளை அசத்த ஏரிக்கரை மேட்டில், புளிய மரத்தடியில் ஒரு குட்டித் தூக்கம் போட்டு விழிப்பதற்குள் பொழுது சாய்ந்து விட்டதால் வெறும் கையுடன் வீடடுக்குள் எப்படிப் போவது என்ற பயத்துடன் வாசலிலேயே குந்தியிருக்கிறான்.

பக்கத்து, எதிர் வீடுகளில் உலைகள் கொதிக்கத் தொடங்கி விட்டதற்குச் சாட்சியாய் புகை அந்த இடத்தை லேசாகச் சூழ்ந்து கொள்ளத் தொடங்கியது. அப்புறம் சோறும், கேப்பங் கூழும் வேகும் மணம்

''என்ன பாவாடை, இப்படி ஒரு பக்கமா குந்திகினே?''

ஏகாலி, குப்பன்.

சேரியின் சலவைத் தொழிலாளி.

நாலு நாளைக்கு ஒரு தரம் சேரி வாழ் மக்களின் துணிகளை எடுத்துப்போய் தோய்த்துக்கொண்டுவருவதற்கு பர்த்தியாக ஒவ்வொரு குடிசைக்காரனும் அவனுக்கு சோறோ, நெல்லோ கொடுக்க வேண்டும். சிலர் ஆண்டுக்கு அரை [illegible]டை, கால் மூட்டை நெல் என்று தருவார்கள்

சிலர் அன்றாடம் வடிக்கும் சோறில் ஒரு கையத்தனை ஏகாலிக்கென்று எடுத்து வைத்து விடுவார்கள்.

பாவாடை இரண்டாவது ரகம். கையில் பாத்திரத்துடன் நின்றவனை நிமிர்ந்து பார்த்தான்.

''இன்னிக்கும் வசதிப் படாதுபோல இருக்குது...''

''ஒரு வாரமா இத்தையே சொல்லிகிட்டு இருந்தா எப்படி?''

''நான் என்ன பண்ணுவேன்ணே? வானம் காயுது. தண்ணி இல்லே. அறுப்பு, நாத்துனு வயக்காட்டுலே எந்த வேலையும் இல்லே...கையில ஒரு காசு இல்லியே. உள்ளாரப் போயி தேவகியண்ட என்னாத்தை சொல்றதுன்னு நானே இப்படி குந்திகிட்டு இருக்கேன். காசு இருந்து பொங்கித் தின்னா உனக்குக் கொடுக்காமவா போயிடுவம்?''

''ஒருத்தன் பாக்கி இல்லாம அல்லாரும் இதே பாட்டைப் பாடுங்கய்யா...கஷ்டம் எனக்கு மட்டும் இல்லியா? ரெட்டியார் பம்பு கொட்டாயிலே தண்ணி ஒரு மணி நேரத்துக்கு மூணு ரூவா வாங்கறாங்க...ஒரு மணிலே எம்மாந்துணி தோச்சிட முடியும். சொல்லு? ஊர் சனங்க துணி நம்ம சேரி சனங்க துணினு மூட்டையா விளுது... ரெண்டு நாள் லேட் பண்ணிட்டா, அவனவன் வாய்க்கு வந்ததை சொல்லி கத்தறீங்க...எம் பொளைப்பைச்சொல்லு பொளைக்கிற பொளைப்பு...''

உரக்க குப்பன் பேசவும், பாவாடை எழுந்து கிட்டப் போய் அவன் கையைப் பற்றிக்கொண்டான்.

''தே...என்னண்ணே...எதுக்காவ இப்படியெல்லாம் பேசறே? உங்கஷ்டம் எனக்குத் தெரியாதாங்காட்டியம்...... வுடுவியா...கையிலே ரெண்டு நாள் கூலி சேரட்டும். ஒரு வார சோத்தையும் உனக்கு நான் சேத்து தந்திடறேன். 'வேணாம்டா, நெல்லா குடு'னு சொன்னின்னா, ஆறு மாசம் பொறுத்துக்க. கால் மூட்டை நெல்லு கொடுத்திடறேன் ''



என்னமோ முணுமுணுத்தபடி குப்பன் அடுத்த வீட்டைப்பார்க்க நகர, பாவாடை திரும்ப திண்ணைக்கு வந்து அமர்ந்தான்.

ஏகாலியும், நானும் பேசிய பேச்சுக்கள் கண்டிப்பாய் தேவகிக்கு கேட்டிருக்குமே, ஏன் அவள் வெளியே வரவில்லை? கோபமா?இரண்டு காசுக்கு வழியில்லாத கணவன் என்ற ஆத்திரமா? உள்ளே போய் பார்க்கலாமா;இருட்டிக் கொண்டு வருகிறதே......

காலடியில் கறுப்பாய் கொழுத்த கட்டெறும்பு ஒன்று ஊற கோபத்தில் உள்ளங்கையால் அதை அறைந்து கொன்று திண்ணைக்கு வெளியே தள்ளிவிட்டான்.

தேவகியை நினைக்கும்போது கொஞ்சம் பாவமாகவே இருந்தது.

சின்னப் பெண், பாவம், என்ன தெரியும் அதற்கு? என்னைக் கட்டிக் கொண்டதில் என்ன சுகம் அதற்கு?

இரண்டு மாதம் முழுகாமல் வேறு இருக்கிறது. வாய்க்கு ருசியாய் இதை அதை வாங்கித் தின்ன தூண்டும் காலம் இது. இப்போது போய் ஒத்தை ரூபாய் கையில் இல்லாமல் அவதிப்பட வேண்டி இருக்கிறதே!

இந்த ஆண்டு ஆனாலும் எம வெயில். ஒரு கோடை மழை இல்லை. வைகாசி பாதி ஓடிவிட்டது. இன்னும் ஒரு மழையைக் காணோம்! ஆடிக்குள்ளாவது மழை வருமா! ஆடிப்பட்டம் தேடி விதை என்பார்கள்...எங்கேயிருந்து விதைக்கிறது! ஈரம் காணாமல் பூமி பாளம் பாளமாய் வெடித்து ஊர் மக்கள் குடிக்கக்கூட தண்ணீர் இல்லாமல் அவதிப்படும்போது உழுவதாவது விதைப்பதாவது...

பணம் காசு இருப்பவர்கள் பாடு தேவலை பம்பு செட் மூலம் தண்ணீர் இறைக்கிறார்கள். எப்படியோ நிலத்தை பச்சையாக்கி வருகிறார்கள். வானம் பார்த்த பூமி வைத்திருப்பவர்கள் கதிதான் அதோ கதி. மழை வருமா! இந்த வறட்சியும், பஞ்சப்பாட்டும் ஒழியுமா?

"பாவாடைண்ணேன், கரும்பு வண்டி போவுது...கழி எடுக்கலாம் வாறியா?"

புழுதி பறக்க சந்தில் ஓடின மதுரை. உரக்கக் குரல் கொடுக்க பாவாடை ஒரு துள்ளலுடன் எழுந்து அவன் பின்னால் ஓடினான்.

நெடுஞ்சாலையில் ட்ரெய்லரை இழுத்தபடி டிராக்டர் ஒன்று மெதுவாகப் போய்க் கொண்டிருந்தது. ட்ரெய்லர் மேல் அம்பாரமாய் கட்டுக் கட்டாய் வெட்டிய கரும்புக் கழிகள். பின்னால் தோகையாய் கருவேலம் முள் கிளைகள்.

கரும்பு வெட்டுக் காலம் முடியப் போகிறது. இன்னும் சில நாளில் அடியோடு நின்று விடும். அப்புறம் ஆறு மாதம் கழித்துத்தான்;

நீ எடுக்குறியா இல்லை நான் எடுக்கவா?

வண்டி பின்னால் ஓடிக்கொண்டே பாவாடை யோசித்

தான்.

முள்ளையும், வண்டியின் வேகத்தையும் பொருட்படுத் தாமல் ஏறி கழிகளை உருவிப்போடுபவனுக்கு எப்போதுமே பங்கு அதிகம்.

தேவகிக்கு கரும்பு என்றால் கொள்ளை ஆசை. நறுக் நறுக் என்று கடித்து முழுக்கழியையும் தின்று துப்புவாளே?

"நான் எடுக்கறேண்டா நீ கூடவே ஓடியா. யாரும் எடுக்காம பாத்துக்க."

பாவாடை குத்தும் முள்ளை இலட்சியம் பண்ணாமல் ட்ரெய்லர் மேல் பாய்ந்து ஏறினான். ஓரத்து கட்டை அசைத்து, பிடியைத் தளர்த்தி ஒவ்வொரு கழியாக இழுத்து கீழே போட்டான் பொறுக்கியபடி மதுரை கூடவே ஓடி வந்தான்.

"ஏய்...ஆர்ரா அது? எறங்குடா, எறங்கு...இப்ப எறங் குரியா, இல்ல வண்டிய நிறுத்திட்டு நான் வரவா?"



டிரைவர் தலையை ஓடித்து அதட்டவும், பாவாடை கீழே குதித்தான்.

மொத்தம் எட்டுக் கழிகள் அதில் இரண்டை மதுரை யிடம் நீட்டினான்.

"இன்னும் ஒண்ணு குடுண்ணே நான்தானே வண்டி வர்றதைப் பார்த்திட்டுச் சொன்னேன்... குடுண்ணே"

கூடவே வந்த மதுரை தொண தொணத்தது சகியாமல் சின்னதாய் இன்னொரு கரும்புத் துண்டை அவனிடம நீட்டி விட்டு பாவாடை வேகமாக நடந்தான்.

"அட! நீ இங்க இருக்குறியா? ஒன்ன எங்கெல்லாம் தேடறது!"

எதிரில் வந்த அஞ்சலை முன்னால் நின்று பேசவும் பாவாடை நின்றான்.

"வூட்டுலே போயி பாத்தேன். தேவகியண்ட கேட்டா, 'அது எங்கயோ எனக்குத் தெரியாதுக்கா'ன்னிடுச்சு... பொட்டிக் கடைல இருக்கியாங் காட்டியும்னு பாத்தேன். இல்ல... எங்க போயிட்டு வர்றே? ம்?"

"எங்கயும் இல்ல... சும்மா இப்படி."

"கரும்பா? ஒரு துண்டு குடேன்."

"ஆங், அந்தப் பேச்சே நம்ம கிட்ட வாணாம். விழுந்து எழுந்து நான் எடுத்தாந்தா, ஒனக்கு வேணுமா...? நவரு... நான் போவணும்."

"அட நிப்பியா... இம்மாந் நேரம் கால் கடுக்க ஒன்னைத் தேடிட்டு வந்திருக்கேன், ஓடறியே..."

"என்னா விசயம்... சொல்லு... நாளியாச்சு."

"பெரிய்ய... கவர்னரு இவரு... அவசரத்தைப் பாரேன்... போவணும்னா போ... நான் வைரத்தை இட்டுக் கிட்டு போறேன்.

"அட, என்னக்கா கோவிச்சிக்கிட்டு... விசயத்தைச் சொல்லுவியா?"

"நான் வேலை பண்ற பாங்க் வீட்டம்மா 'தோட்டம் போடணும், நல்லா தோட்ட வேலை தெரிஞ்ச ஆளா இருந்தா இட்டுகினு வாடி'னு சொன்னாங்க... வேலை வெட்டி இல்லாம, வயித்துப் புள்ள தாச்சியோட நீ லோல் படறது ஞாபகத்துக்கு வந்துச்சு... அதான் வந்தேன்..."

"தோட்டக்காரன் வேலையா? எனக்கா கொடுப் பாங்க..."

"அம்பது ரூபாவரை தருவாங்கன்னுதான் தோணுது... இது பெரிசு ஒத்தை ரூபா கிடைக்காத இந்த நாள்லே. தானே?"

அடேயப்பா, அம்பது ரூபாயா?

நிலைமை இருக்கும் இருப்பில் இது வெள்ளமாயிற்றே!

"நான் வர்றேங்க... எப்ப போவலாம்?"

"காலைல நான் வேலைக்குப் போறப்போ கூட வா. இட்டுகினு போய் பேசறேன். அப்ப நான் வரவா?"

நாலடி நகர்ந்தவளை "அக்கோவ்" என்று பாவாடை அழைத்தான்.

இரண்டு கரும்புக் கழிகளை முன்னால் நீட்டி "பசங் களுக்கு குடுக்கா" என்று சொல்லிக் கொடுத்துவிட்டு, தன் குடிசையைப் பார்க்க வேகமாய் நடந்தான்.

அம்பது ரூபாய்! அடேயப்பா எவ்வளவு பணம் அது!—

பத்து கிலோ கேழ்வரகு வாங்கலாம், பத்து கிலோ அரிசி வாங்கலாம். ஒரு நாள் கருவாட்டுக் குழம்பு வைக்க லாம். காய் போட்டு பருப்பு சாம்பார் ஒரு நாள் வைக் கலாம்.

மனதில் குதூகலம் கொப்பளமாக வெடிக்க "தேவகி... ஏ, புள்ளே" என்று அழைத்தபடி குடிசையினுள் பாவாடை நுழைந்தான்.





தேவகிக்கு கோபம்தான்.

கரும்பை முன்னால் நீட்டினபோதுகூட உதடுகளில் சிரிப்பு தவழவில்லை.

"அஞ்சலைக்கா வந்துச்சா?"

"ம்..."

"எதுக்கு வந்துச்சு தெரியுமா?"

"......"

"பாங்க் ஊட்டுலே தோட்ட வேலை பண்ண ஆள் தேவையாம். என்னெப் பேசி முடிக்கறேன்னு சொல்லி யிருக்கு..."

"......"

"சம்பளமா அம்பது ரூபா தருவாங்களாம், புள்ளே."

இப்போது தேவகி பட்டென்று பார்வையை நிமிர்த் தினாள். கண்கள் உண்மையாகவா என்ற கேள்வியில் அகல விரிந்தன.

"மெய்யாலும்தான் புள்ளே..."

ஒரு நிமிடம் எதுவும் பேசாமல் தலையைத்திருப்பி அடுப்பில் கொதித்துக் கொண்டிருந்த கஞ்சியை கிளறி னாள். பின் மெல்லிய குரலில் "கை கால் கழுவிக் கிட்டு வர்றியா, கஞ்சி குடிக்கலாம்" என்றாள்.

பாவாடை அவள் பக்கத்தில் குந்தி "என்னா கஞ்சி?" என்றான்.

"நொய்க் கஞ்சி"

"ஏது?"

"சாணி பொறுக்கப் போனப்போ, அரிசி மில்காரரு வாசல்லே நின்னுகிட்டு இருந்தாரு. மாமுலா பொடைக்க வர்ற பொம்பளைல ஒருத்தி இன்னிக்கு வரலியாம். "வந்து தவுட்ட பொடைக்கிறியா?" ன்னாரு. சரினுட்டு போய் பொடைச்சிட்டு. அரை கிலோ நொய்யும், ஒரு ரூபா காசும் வாங்கிக்கிட்டு வந்தேன்...எந்திரி, குளிக்கிறியா? சுடுதண்ணி வெச்சுத் தரவா?"

"வேணாம். உடம்பு எரியுது. சுடு தண்ணி என்னாத் துக்கு?"

பாவாடை எழுந்து வெளியில் வந்து வேட்டியை அவிழ்த்து விட்டு கோவணத்தோடு நின்று பானையில் இருந்த நீரை மொண்டு ஊற்றிக் குளித்தான். திரும்ப அதே வேட்டியை உதறிச் சுற்றிக் கொண்டு உள்ளே வந்து மனைவியின் அருகில் அமர்ந்தான்.

தேவகி அலுமினியத் தட்டில் கொதிக்கும் கஞ்சியை சாய்த்துக் கொடுத்தாள்.

"வெங்காயம் வேணுமா? இருக்குது வாங்கியாந்தேன்"

"ம்."

கொதிக்கும் கஞ்சியும், வெங்காயமும் அமிருதமாய் சுவைத்தன. பாதி குடிக்கையில் என்னமோ நினைப்பு வந்து, "ஒனக்கு?" என்றான்.

"இருக்குது…நீ மொதல்ல குடி…"

"சூடு ஆறாம தட்டைக் கீழே வைத்த பாவாடை நீயும் குடிச்சிரு புள்ளே. கரும்ப துண்டம் போட்டு வைக் கறேன், வாசலுக்கு வா" என்றபடி வெளியே போய் கை கழுவி, கரும்பு அரிவாளுடன் திண்ணையில் உட்கார்ந் தான்.

திடீரென்று ரொம்ப உற்சாகமாக இருந்தது.

"தானே தந்தனான்னே" என்று பாட வேண்டும் போல் தோன்றியது.

கஞ்சி குடித்துவிட்டு வந்த பெண்டாட்டிக்கு கரும்பு வெட்டிக் கொடுத்து, வெற்றிலை பாக்கு, புகையிலை போட்டு முடித்த பின் இருவருமாய் படுக்க உள்ளே போனார்கள்.

பாயை விரித்து, கந்தல் துணி மூட்டையை தலைக்கு வைத்து தேவகியை அணைத்துக் கொண்டு படுத்தபோது ஐம்பது ரூபாய் மனதில் மின்னிற்று.

'அம்பது ரூபாய்!'



அடேயப்பா!

முதல் மாதம் சம்பளம் வாங்கியதும் தேவகியை வெள்ளியோட வெள்ளி முழுக்காடச் சொல்ல வேண்டும். நாலணாவுக்கு வாசனை மல்லி வாங்கித் தரவேண்டும். எழுபது பைசா டிக்கெட்டு எடுத்து சிவாஜி படத்துக்கு இட்டுச் செல்லவேண்டும். அப்புறம் கண்ணாடி கூண்டுக் குள் பொற பொறவென்று வெள்ளையாய் ஒரு மிட்டாயை வைத்து வண்டியைத் தள்ளிக்கொண்டு வருகிறானே, அந்த மிட்டாய் பேர் என்ன? - ம்ம்…என்ன பப்படி?…ஏதோ, ஒன்று…அதை ஒரு ரூபாய்க்கு வாங்கிக் கொடுத்து 'தின்னுடி புள்ளே' என்று சொல்ல வேண்டும்…

என்னென்னமோ கற்பனைகளுடன் பாவாடை கண் அயர்ந்த போது, உரத் தொழிற்சாலையில் பத்துத் தரம் மணி அடித்து, இரவு மணி பத்து என்பதைக் காவலாளி புரிய வைத்தான்.

## 3

இரண்டு மாசங்களா?

உம்…எண்ணி இரண்டே மாதம். அதற்குள் உமாவிட மும், அவள் தோட்டத்திலும் ஏக மாற்றங்கள்.

கட்டாந்தரையாகக் கிடந்த இடம், பத்து வாழை, நாலு செம்பருத்தி, நாலு ரோஜா, இரண்டு அரளி, இரண்டு நித்திய மல்லிகையுடனும், பாத்தியாய் அரைக் கீரை முளைக் கீரைகள் நாலு விரல்கடை அளவுக்குத்

தலைதூக்கி நின்று, வெண்டை, முள்ளங்கி, கொத்தவரை
களுடன் கண்ணுக்கு இதத்தைத் தரத் தொடங்கிவிட்டது.

முதல் நாள் அஞ்சலையுடன் பாவாடை வந்து நின்ற
துமே, அந்த அப்பாவி முகத்தையும் வறட்சியான தோற்றத்
தையும் பார்த்த உமாவுக்கு இவன் மேல் ஒரு பிடிப்பு
உண்டாகிவிட்டது.

விடி காலையில் வந்தால், வெயில் உச்சிக்கு ஏறி
தாக்கும் முன்னரே, அதாவது பத்து மணிக்குள், வீட்டுக்குப்
போய் விடலாம். பின்னர் மாலை நாலு மணிக்கு வந்து
ஆறு வரை வேலை பண்ணவேண்டும். கிணற்றிலிருந்து
தான் தண்ணீர் இழுத்துப் பாய்ச்ச வேண்டும். நாலு
நாள் இழுத்துவிட்டு, "கை வலிக்குது, மார் விட்டுப்
போறது. ஹோஸ் பைப் வாங்கிக் கொடுங்க, பைப்பில்
கட்டி விடறேன்" என்றெல்லாம் சொல்லக்கூடாது. ஞாயிறு
அன்று கூட வேலைக்கு வரவேண்டும். தோட்ட வேலைக்கு
என்றும் மட்டும் இல்லை, சமயத்தில் கடைகண்ணிக்குப்
போய்வர, மெஷினுக்குப் போக, டிரைவர் வராத நாளில்
ஜீப்பைத் துடைக்க என்று அத்தனையிலும் கூடமாட
ஒத்தாசை பண்ண வேண்டும்.

உமா போட்ட நிபந்தனைகளுக்கு எல்லாம் "பூம் பூம்"
மாடு மாதிரி பாவாடை தலையை ஆட்ட, முதல் மாதம்
நாற்பத்தைந்து ரூபாய் தருவதாகவும், வேலை தி[illegible]தியாக
இருந்தால் மறு மாதத்தில் இருந்து ஐம்பதாக உ[illegible]ர்த்து
தாகவும் அவள் சொன்னதை ஏற்றுக்கொண்டு, [illegible]
பாவாடை வேலைக்குச் சேர்ந்தான்.

வீட்டிலிருந்து அரிவாளும், மண்வெட்டியும் கொ[illegible]
வந்து இரண்டு நாட்களுக்கு வீட்டைச் சுற்றி ம[illegible]
கிடந்த வேல், எருக்கு புதர்களை வெட்டித்[illegible]
அடியோடு வேர்களைத் தோண்டி எடுத்துவிட்டு இ[illegible]
இடுக்கு விடாமல் பெருக்கித் தள்ளினான். மறு[illegible]
கிணற்றிலிருந்து அலுக்காமல் சளைக்காமல் நீரைச்



கட்டாந்தரையில் ஊற்றி ஊற வைத்தான். அதற்கும்
மறுநாள் மாடு மாதிரி லொங்கு லொங்கென்று ஊறின
தரையை ஆழமாகக் கொத்திப் போட்டான். மண்ணில்
கிடந்த சின்னக் கற்கள், காரைக் கட்டிகளை பிராய்ந்து
எடுத்துவிட்டு, நாலு நாட்களுக்கு தொடர்ந்து மண்ணைப்
புரட்டிப் புரட்டி கொத்திவிட்டான்.

பூமி தயாராக எடுத்துக்கொண்ட இந்த ஒரு வாரத்தில்,
துவக்கத்திலேயே தனக்குத் தேவையானவைகளை
உமாவிடம் அவன் சொல்ல, அவள் கணவனிடம் கூற,
உள்ளூர்க் கடையிலிருந்து மண்வெட்டி, களை கொத்தி,
சின்ன கைக் கடப்பாறையும், ரெட்டியார் வீட்டிலிருந்து
இரண்டு வண்டி மாட்டுச் சாண மக்கின எருவும், விதைப்
பண்ணையிலிருந்து பொட்டலம், பொட்டலமாய் விதை
களும் ரொம்ப சீக்கிரமே வந்து சேர்ந்தன.

பாங்க்ஏஜண்டு வீட்டில் தோட்டம் போடுகிறார் என்ற
சேதி காற்றில் பரவ, ஏஜண்டை தாஜா பண்ண விரும்பிய
நபர்கள் செம்பருத்தி, அரளிக் கட்டைகள், கனகாம்பரம்,
ரோஜா, மல்லிச் செடிகள், மொந்தன், ரஸ்தாளி கன்றுகள்
என்று அவரவர் வீட்டில் இருப்பதைக் கொண்டு வரத்
தொடங்கவே தோட்ட வேலை ஆரம்பித்த பத்து நாளைக்
கெல்லாம் பாவாடைக்கு வேலை நெட்டி முறிக்கத் துவங்கி
விட்டது.

வீட்டின் வலப் பக்கமாய் ஓர் இடம் தயார் பண்ணி
செம்பருத்தி, அரளிக் குச்சிகளை நட்டு நுனியில் சாணி
உருண்டையை வைத்தான்.

கொஞ்சம் வெயில் கம்மியாக இருக்கும் இடத்தில்
இரண்டடிக்கு இரண்டடி குழி போட்டு, குழி சூடு ஆறின
பிறகு, செம்மண் உரத்தைக் கலந்து இட்டு ரோஜாக்களை
பக்குவமாய் நட்டான்.

கனகாம்பரமும், மல்லியும் அதற்குப் பக்கத்திலேயே...

அடுத்து வாழைக் கன்றுகள்.

ஐந்தடி இடைவெளியில் குழிகள் போட்டு, அவற்றின் பூமிச் சூடு ஆறினபின், உரம் இட்டு, கன்றுகளை நட்டு, இரண்டு நாட்கள் காயப்போட்டு உலக்கை எடுத்து வந்து அடியில், நாலு பக்க மண்ணையும் நன்றாக இடித்துவிட்டு, தொய்யத் தொய்ய ஜலம் விட்டான்.

"இப்படி காயப்போட்டு, உலக்கையால் இடிச்சி, தண்ணி விட்டாதான் வாழைக்கு நல்லதும்மா, பாத்துட்டே இருங்க, இரண்டே மாசத்துலே கன்னுங்க எப்படி தளதளனு கிளம்புதுன்னு. பத்தாம் மாசம் கொலை தள்ளிடும். நீங்க வேணா பாருங்க..."

தன்பாட்டுக்கு ஏதாவது பேசிக்கொண்டே தன் செய்கைக்கு விளக்கம் கொடுத்துக்கொண்டே பாவாடை வேலை செய்வான்.

"காய்கறி போடணுமேடா"

"போடுவம், போடுவம். இப்ப காலம் சரியில்லை. ஆடி பொறக்கட்டும். இந்தச் செடிகளை நடறதுக்கே, இப்ப வெயில் சாஸ்தி...என்னமோ மண் நல்லா இருந்து, தண்ணி தாராளமா இருக்கவும் எல்லாம் பிளைச்சிக்கிடுச்சி...ஒ மாசம் பொறுத்துக்குங்க...அப்பால சமாய்ச்சுப்பிடுவம்."

சொன்னபடி ஆடி பிறந்ததும், மண்ணைச் சீர் பண்ணி பாத்தி கட்டினான். மஞ்சி இழுத்தான். அவற்றில் தேவை யான விதைகளைப் போட்டு, திட்டமாய் தண்ணி பாய்ச்சினான்.

விதைகள் முளைத்து இரண்டு இலை விட்டது வீட்டிலிருந்து சாம்பல் கொண்டு வந்து அத்தனைக்கு தூவினான். கொத்தி விட்டான். களை எடுத்தா தோட்டத்தைக் கவனமாய் கண்காணித்தான்.

ஆக, இரண்டு மாசங்கள் முழுசாய் தாண்டுவதற் தோட்டத்தில் ஏக மாற்றம்.



உமாவிடம் அதைவிட.

ஆறு அடித்தாலும் எழுந்திருக்க சோம்பல் பட்டு படுக்கையிலே புரள்பவள், ஐந்தரைக்கு பாவாடை வந்து "அம்மா" என்று குரல் கொடுத்ததும் எழ ஆரம்பித்தாள்.

காபி கடையை முடித்துக்கொண்டு, தோட்டத்துக்குப் போனால் திரும்ப எட்டுக்கு உள்ளே நுழைந்து டிபன் செய் வாள். கணவன் பாங்கிக்குப் போன பின் திரும்ப தோட்டத் தில் வந்து நின்றுகொண்டால், வேலை முடிந்து பத்து பத்தரை வாக்கில் பாவாடை வீட்டுக்குப் புறப்பட்டதும் தானும் உள்ளே வந்து குளித்து, சமையலைக் கவனிப்பாள்.

மாலையிலும் இதே கதைதான்.

தூக்கம், புஸ்தகம் என்று சோம்பின நாட்கள் இப் போது இல்லை.

மூன்று மணி வெயிலை பொருட்படுத்தாமல் கொல்லை படிக்கட்டில் அமர்ந்து பாவாடை வேலை செய்யும் பாங்கை கவனிப்பாள். இன்னது என்று இல்லாமல் அவன் பேசுவதை யெல்லாம் கவலையுடன் கேட்பாள்.

ஊரில், உரத் தொழிற்சாலையில், பாவாடையை அவ்வப்போது வேலைக்குக் கூப்பிடுவார்கள். அப்போதெல் லாம் எட்டுக்குப் போய் ஐந்துக்குத்தான் திரும்புவான் என்பதால், மாலையில் ஏழுஎட்டு வரைக்கும்கூட விளக்கைப் போட்டுக் கொண்டு அவன் தோட்டத்தைக் கவனிப்பான். நாற்காலி ஒன்றை தோட்டத்தில் எடுத்துப் போடச்சொல்லி உமாவும் கூடவே அமர்ந்து கொள்வாள்.

பாவாடை நித்தமும் புதுசு புதுசாய் ஏதாவது சொல் வது உமாவுக்கு நிரம்ப வேடிக்கை தரும் சமாசாரம்.

பச்சைப் பாம்பு ஒன்று எதேச்சையாய் தோட்டத்தில் ஒருநாள் வந்துவிட, அதை அடித்துக் கொன்ற பின் நுனி வாலை மட்டும் துண்டித்து பாவாடை எடுத்துக் கொண்ட தும் உமா ஆச்சரியப்பட்டுப் போனாள்.

"எதுக்குடா, அது?"

"இந்த நுனி வாலை, கவுத்துலே முடிஞ்சு. சின்ன பசங்களுக்கு கட்டினா காத்து, கறுப்பு அண்டாதுங்க. எங்க அண்ணார் பையன் ஒருத்தன் உடம்பு தேறாம சோனியா இருக்கிறான், என்னத்தைப் பாத்து பயந்துகிட்டானோ தெரியலை; அவனுக்கு கட்டறதுக்காவத்தான்..."

இதே மாதிரி இன்னொரு நாள்...

கீரைப் பாத்தி இழுப்பதற்காக மண்ணைக் கொத்திக் கொண்டிருந்தவன்,காரணம் இல்லாமல் மண்வெட்டியைப் போட்டுவிட்டு நிழலில் உட்கார "என்னடா" என்றாள், உமா.

நெற்றியில் வழிந்த வியர்வையைத் துடைத்து பைப்பில் இர்ண்டு வாய் தண்ணீர் குடித்த பாவாடை "ஸ்ஸ்" என்று பெருமூச்சு விட்டான். அப்புறம் "நான் ஒருநிமிசம் பயந்தே போயிட்டேங்க" என்றான்.

என்ன பயமாம்?

மண்ணைக் கொத்தும்போது பழுப்பாய் ஏதோ கையில் பட்டதாம், ஒரு வினாடி மண்ணுளி பாம்பு என்று பயத்து விட்டானாம் கடைசியில் நல்ல வேளையாய் பாம்பு இல்லையாம், ஏதோ பழைய பழுப்புத் துணியாம்.

மண்ணுளிப் பாம்புக்கு ஏன் பயம்? அது விஷம் இல்லாதது ஆயிற்றே!

உமா ஜுவாலஜி பாடம் படித்தவள். விலங்கியலில் ஈடுபாடு அதிகம். கிண்டி பாம்புப் பண்ணைக்கு அடிக்கடி போய் பாம்புகளைப்பற்றி ஓரளவு விஷயம் தெரியுமாதலால் அத்தனை பயம் இல்லாதவள்.

"ஆங்! அதென்னமா மண்ணுளி பாம்புக்கு என்னா பயம்னு சுளுவா கேட்டுட்டீங்க? அதுக்கு ரெண்டு தலை உண்டும்மா... இப்படியும் நவரும், அப்படியும் நவரும். அது கையிலே பட்டா, உடம்பு பூரா குஷ்டம் வந்திரும்மா... தெரியுமா?"



உமாவுக்கு சிரிப்பு வந்தது.

"மண்ணுளிப் பாம்புக்கு ரெண்டு தலையா? அட, பைத்தியமே—ஒரு தலைதாண்டா. வால் மொத்தமா இருக்கிறதால நீங்க அப்படி நினைக்கிறீங்க. நுனியும் அதுக்கு விஷமே கிடையாது பாவாடை..."

"போங்கம்மா. நீங்க பட்டணத்துக்காரங்க, உங்களுக்கு என்னா தெரியும்?"

'நிஜமாத்தாண்டா. மெட்றாஸ்லே பாம்புப் பண்ணைலே பாம்புகளை அலட்சியமா கையில தூக்கிக் காட்டுவாங்க."

"இங்க கூடத்தான் நல்ல பாம்பையே கையிலே தூக்கிப் பிடிக்குற ஆளுங்க இருக்காங்க... தை மாசத்துலே எங்க ஆயாவுக்கு இன்னானு புரியாம காதுலே சீயான சீய் வடிஞ்சிது. பச்சிலை சாறு விட்டு பாத்தம், எண்ணெய் விட்டு பாத்தம் —ஒண்ணும் பலிக்கல. அப்பால, நல்ல பாமபு வாலை காதுக்குள்ளார விட்டு இரண்டு தபா குடைஞ்சா சரியா பூடும்னாங்க. சரினுட்டு ஒரு ஆளை இட்டுகிட்டு வந்தோம் அவரு சொம்பு தண்ணி கொண்டா,மொறத்துலே அரிசி கொண்டானு கூத்தடிச்சிட்டு. கையாலியே பாம்பை பிடிக்குறாறேன்னு பாத்தா,அப்பாலதான் தெரிஞ்சிது, அது பல்லு பிடுங்கின பாம்புனு...இதுக்கு என்னா சொல்றீங்க? உங்க பட்டணத்திலேயும் இப்படித்தான் ஏமாத்து வேலை செஞ்சிருப்பாங்க—அ ஆங்......"

பெரிசாய் எதையோ விளக்கிவிட்ட சந்தோஷத்தோடு பாவாடை நகரவும், உள்ளே வந்து உமா ஆசை தீரச் சிரித்தாள்.

பாவாடையின் அக்ஞானம் கலந்த வெகுளித்தனம் நிறைந்த பேச்சை அன்றாடம் இரவு சாப்பாட்டின் போது கணவனிடம் அவள் சொல்ல, இரண்டு பேருமாய் சிரிப்பார்கள்,

"நாம் பூனை குறுக்க வந்தா அபசகுனம்னுசொல்றோம் இல்லே? – ஆனா, இவங்களுக்கு அது நேர்மாறு ஒரு காரியத்

துக்குப் புறப்படறப்ப, பூனை வலமிருந்து இடம் போனா ரொம்ப நல்லதாம். கருடன், நாய் குறுக்கே வந்தா தான் ஆகாதாம்...'' என்றாள் ஒருநாள்.

"பூஷணி விதை மட்டும் போட மாட்டானாம். ஏன்னா அதை தின்னா ஜலதோஷம் பிடிக்குமாம், அப்புறம் கல்யாண பூஷணி, கோழிமுட்டை இதெல்லாத்தையும் யார் திருடறாங் களோ, அவங்களுக்கு கண்டிப்பா கை கொறஞ்சி போற வியாதி வந்திடுமாம், சொல்றான். ஆமா. கை கொறயற வியாதினா என்னங்க? குஷ்டமா?'' என்றாள் இன்னொரு நாள்.

''சொல்ல மறந்துட்டேனே...அன்னிக்கு நீல மாம் பழம் வாங்கி வந்திங்க, இல்ல...அதை பின் வராந்தாலே உட்கார்ந்திட்டு துண்டம் போட்டுக் கிட்டு இருக்கிறப்ப இவன் வந்தான். திடும்னு ஐயோ அம்மா... வேணாம் போட்டுருங்க போட்டுருங்கனு கத்தினான். எனக்கு ஒண்ணும் புரியலை. நா நறுக்கிட்டிருந்த மாம்பழத்துலே வண்டு இருந்திச்சாம். அதான் அந்தக் கத்தல் கத்தியிருக் கான். 'வண்டு இருந்தா என்னடா, வண்டு இருக்கிற பழம் இனிக்கும்னு தானே சொல்வாங்கன்னேன். பெரிசா சண்டைக்கு வந்திட்டான். இவனோட அப்பா மாம் பழத்தைத் தின்னுட்டு இருக்குறப்ப. அப்படியே மயங்கி விழுந்து இறந்துட்டாராம். மாம்பழத்திலே வண்டு இருந்து, தெரியாம அதை சாப்டுட்டா, அது உள்ளார போய் குடையற குடையிலே ஆளு உடனே இறந்திடு வாங்கனு, என்னன்னமோ சொல்லி என் கையிலே இருந்த மாம்பழத்தைத் தூர எறிஞ்சிட்டுத் தான் மறுவேலை பார்த்தான்'' என்றாள் இன்னும் ஒரு நாள்.

தோட்டம் பச்சுபச்சென்று மாறத் தொடங்கின பின் பானை ஒன்றில் கண் மூக்கு வரைந்து வந்து, வேலியில் மாட்டி வைத்தான்.

''அது எதுக்குடா?'' என்றால், ''திருஸ்டிம்மா...எம்மாங் கண்ணு தோட்டத்தைக் கண்டு பொருமுது தெரியுமா?'' என்றான்.



ஒரு சமயம் வேப்பமரத்தில் விளையாடிக்கொண்டிருந்த அணிலை உண்டி வில்வைத்து, குறி தப்பாமல் அடித்து வீழ்த்தி வேட்டியைத் தூக்கி, நிஜார் பையில் போட்டுக் கொண்டான்.

சமையல் கட்டு ஜன்னல் வழியாக அவனுடைய செய் கையைப் பார்த்து பதைத்து உமா ஓடி வந்தாள்.

''அணில் உன்னை என்னடா பண்ணிச்சு? எதுக்காக அதை அடிச்சுக் கொல்றே?''

பாவாடை வெட்கத்துடன் நெளிந்தான்.

''சொம்மா தாம்மா...''

''சும்மாகூட யாராவது அணிலைக் கொன்று ஜோபியில் போட்டுக் கொள்வார்களா?''

விடாமல் துருவ விஷயம் வெளியில் வந்தது.

''சுட்டுத் தின்னா அணில் கறி ருசியா இருக்கும்... அதுக்கு ரொம்ப பிடிக்கும்...அதாம்மா...''

அடுத்த பத்து நாளில் ஒரு நாள் பாவாடை காலையில் வேலைக்கு வரவில்லை. ஏழு மணி வரை பார்த்த பின், அஞ்சலையை அனுப்பி என்னவென்று பார்த்து வரச் சொன்னாள் உமா.

போனவள் பத்து நிமிடத்தில் திரும்பினாள்.

''ஊடு பூட்டியிருக்குதும்மா. அக்கம்பக்கத்தில் கேட்டா ஆளுக்கு ஒண்ணு சொல்றாங்க...அண்ணாரு வீட்டுக்குப் போயிருக்கலாம்றாங்க... அங்க போய் பார்க்கவா? கொஞ்சம் தொலைவு போவணும்.''

''வேணாம். நீ உன் வேலையைப் பாரு. சாயங்காலமும் வரலைன்னா பாத்துக்கலாம்.''

பதினோரு மணி சுமாருக்கு சமையலை முடித்து கூடை. பின்னும் ஒயர்களோடு உமா உட்கார்ந்திருக்கையில் பின் கட்டு கதவிடம் வந்து நின்று பாவாடை ''அம்மா'' என்று குரல் கொடுத்தான்.

கை வேலையை அப்படியே வைத்துவிட்டு உமா எழுந்து போனாள்.

களைத்து, ஓய்ந்து போய் பாவாடை நின்றிருந்தான். கண்கள் சிவந்திருந்தன.

"என்னடா? ஏன் காலைலே வரலை?"

"......"

"உடம்பு சொகமில்லியா?"

"......"

"சொல்லேண்டா."

பாவாடை பச்சென்று சூள் கொட்டினான். "என்னத் தம்மா சொல்றது. நீங்க பட்டணத்துக்காரங்க. நான் எத்தயாவது சொல்லப்போனா, நீங்க "போடா ஒனக்கு வேற வேலையில்லே"னு நையாண்டி பண்ணுவீங்க."

அழுதுவிடுவான் போல பாவாடை இருக்கவும், மெய்யான பரிவுடன் உமா "கேலி பண்ணலை. விவரத்தைச் சொல்லு" என்றாள்.

"எங்கண்ணாருக்கு யாரோ மருந்து வெச்சிட்டாங்கம்மா..."

"மருந்தா, அப்படின்னா?"

"மருந்து தெரியாதாம்மா? அட, என்னம்மா நீங்க? வேண்டாதபட்டவங்களை மருந்து வைச்சி அலக்களிக்கிறது உங்களுக்குத் தெரியாது?"

"ம்ஹூம்"

"அய்யோ! அது மகா பேஜாரு புடிச்ச வெவகாரங்க. எங்க அண்ணனைக் கண்டா ஆவாத எந்த ப[illegible]வியோ அவரைக் கெடுக்கணும்னு மருந்து வைச்சிட்டாம்மா. ஒரு மாசமா வவுத்து வலின்னு அண்ணாரு துடிக்குறாரு. நாட்டு வைத்தியம் பாத்தம், முடிகவுறு போட்டம், மந்திரிச்சோம்.



ஒண்ணுத்துக்கும் கேக்காமப் போன பொறவு இன்னிக்கு இருட்டோட ஸோஸியர் கிட்ட போனோம். அவரு 'அடேய் உங்கண்ணனுக்கு யாரோ மருந்து வைச்சிட்டாங்கடா'னு டக்குனு சொல்லிட்டாரு..."

"மருந்து வைக்கறதுன்னா என்னடா, விலரமா சொல்லேன்."

"கருப்பா குளிகை மாதிரி இருக்கும்மா, அதை வடைக் குள்ளாரவோ, இடியாப்பம், கறி குழம்புலியோ வைச்சி கொடுத்திட்டா, தின்ன ஆளு வவுத்துலே போய் அது கம்முனு குந்திக்கும். அஞ்சு வருசமானாலும் கரையாது. தின்ன ஆளு வவுத்த நோவுதும்பான், உடம்பு ஒச்சலா இருக்குதும்பான். கவனிக்காம வுட்டா ஆளே பூடுவான்..."

"உங்கண்ணனுக்கு மருந்து வைச்சிருக்கிறது ஜோசியருக்கு எப்படித் தெரிஞ்சிது?"

"அதாம்மா அவுரு சக்தி. வவுத்தை தடவிப் பாத்தே அவரு புரிஞ்சிகிடுவாரு 'டேய்...கல்லு மாதிரி வடை இருக்குதுடா அதுலே மருந்து கருப்பா இருக்குடா'னிட்டாரே! அவர் கண்ணுக்கு வவுத்துக்குள்ளார இருக்குறது அப்படியே தெரியுமாம்."

பாவாடையின் பேச்சை நம்புவது உமாவுக்குகஷ்டமாக இருந்தது. ஆனாலும் எதையாவது சொல்லி அவன் மனதை புண்படுத்தக் கூடாது என்ற கவனத்துடன் "சரி. இதுக்கு வழி என்ன?" என்றாள்.

"மருந்தை எடுக்கறதுதான் வளி. பூசை போட்டு, மந்திரம் சொல்லி பக்குவமா ஜோசியர் எடுத்துடுவாரு. நாளைக்கு நாள் பாத்திருக்காரு. காலியே அண்ணாரை இட்டுகிட்டு அவர் வூட்டுக்குப் போவணும். கேட்ட சாமான்களை வாங்கித் தரணும். அந்தப் பேச்செல்லாம் பேசிட்டு வர்றதுக்குத்தான் இம்மா நாளி ஆயிடுச்சி..."

பேச்சை நிறுத்தின பாவாடை, தயக்கத்தோடு "அம்பது ரூபா போல செலவாகும்னு தோணுதும்மா. அய்யா கிட்ட

சொல்லி பெரிய மனசு பண்ணி அந்தப் பணத்தைக் கொடுத் தீங்கன்னா, உபகாரமா இருக்கும்; மாசம் பத்து ரூபாயா பிடிச்சிக்கிங்க அம்மா'' என்றான்

உமா பதில் ஏதும் பேசாமல் யோசனையில் ஆழ்ந்தாள்.

என்ன வயித்து வலி இது?

மருந்து கிருந்து என்று என்னென்னமோ சொல் கிறானே! நிஜம்தானா?

கவர்மென்ட் ஆஸ்பத்திரி டாக்டரிடம் காட்டினால் என்ன? அப்பெண்டிசைடிஸ், அல்சர் என்று ஏதாவது இருக்கலாமோ?

'டாக்டரை முதலில் பார், அப்புறம் உன் ஜோசியர் வைத்தியம் பார்க்கலாம்' என்று சொல்லலாமா?

நினைத்ததை உமா வெளியில் கூறவும், பாவாடை எகிறிக் குதித்தான்.

''டாக்டரும் வேணாம், ஒத்தரும் வேணாம், இது மருந்து வைச்ச கோளாறுதான்...பட்டணத்துக்காரங்க, உங்களுக்கு இதுலெ நம்பிக்கை இல்லேன்னாலும் நான் சொல்றதைக் கேளுங்க...''

''நா சொல்றதை நீ கேளுடா. மருந்து, மாயம்னு ஒண்ணும் இல்லே பாவாடை...காலம் மாறிப் போச்சு...''

''ஆங்...அப்படிச் சொல்லிட்டா எப்படிம்மா? எங்கண் ணாருக்காவது வெறும் குளிகை மருந்துதான்...அதால வவுத்த வலியோட போச்சி. போன மாசம் எங்க மூணாவது வூட்டுலே என்ன ஆச்சு தெரியுமா?''

''என்ன ஆச்சு.''

முறை மாமனுக்குக் கட்டி வைக்காம இந்த சேரி பையன் ஒருத்தனுக்கு, அவன் உரத் தொழிற் சாலைலே முன்னூறு ரூபா சம்பளம் வாங்கும் ஆசைலே கட்டி வைச் சிட்டாங்க...முறைப் பையனுக்கு பொறுக்கலை. மருந்து வைக்குற ஆளுகிட்ட போயி நூறு ரூபா கொடுத்து நீ



வைக்கிற மருந்துலே, குண்டி துணிய அவுத்து போட் டுட்டு தெருத் தெருவா ஓடணும்னு சொல்லியிருக்கான். சரினுட்டு. அந்த ஆளும், கோளி, இடிச்ச மாவு, புது சட்டி, மஞ்ச குங்குமத்தோடு கொள்ள கரைக்குப் போயி...''

''கொள்ள கரைன்னா?''

''ம்ம்...மசானம்மா''

''ஓ—சுடுகாடா...சரி சொல்லு''

''ஆங்—சுடுகாடு. அங்க நடு சாமத்துலே போயி, சக்கரம் வரைஞ்சி அதுலே குந்திகினு முனிஸ்பரனுக்கு எலு மிச்சை, கோளியை காவு கொடுத்து, பூசை பண்ணியிருக் காரு. அப்பால எந்திர தகடு ஒன்னை எடுத்தாந்து, இந்த பொம்பளை வூட்டு வாசல்ல தோண்டிப் புதைச்சிட்டுப் போயிட்டாரு.''

''இதெல்லாம் உனக்கு எப்படிடா தெரியும்?''

''இருங்கம்மா, அவசரப்பட்டா எப்படி? காலைல வூட்டு வாசல்லே கரி கோடால கட்டம் போட்டிருக்குறதை எதேச் சையா பக்கத்து வூட்டுப் பாட்டி பாத்துப்பிட்டா...கிளவி நாலும் தெரிஞ்சவ, ஓ, இங்க தகடு, புதைச்சிருக்காங் கறதை ஒரே பார்வைலே கண்டு கிட்டு, பக்கத்து வூட்டு பெரியவங்களை கூட்டி வெவரத்தை சொல்ல, அல்லாரும் வாச வழி போவாம வேற பக்கம் ஒலைய பிரிச்சிகிட்டு வெளிலவந்து உடனே ஜோஸியரைப் போய் பார்த்தாங்க. அவுரு வந்து பார்த்துட்டு 'ஆமா இது ஏவல் வேலை தான்னு சொல்லி, அண்ணிக்கே தடுப்பு பூசை பண்ணி, அந்த எடத்தைத் தோண்டி, தகட்டை எடுத்துப்போட்டாரு. எவண்டா இந்த வேலை பண்ணவன்னு பொண்ணை பெத்தவங்க விசாரிச்சா, மாமன்காரன் அகப்பட் கிட்டான். இப்ப என்ன சொல்றீங்க?''

உமா ஒண்ணும் சொல்லவில்லை. ஆனால், பாவாடைத் தன் தீர்மானத்தில் உறுதியாய் இருப்பது புரிய, காலை உணவுக்காக சரவணன் வந்த போது நிலை

எடுத்துச் சொல்லி ஐம்பது ரூபாயை வாங்கி பாவாடை யிடம் கொடுத்தாள்.

''இப்ப தண்ணி பாச்சிட்டுபோய்ட்றேம்மா, நாளைக்கு காலைல நா வர மாட்டேன். பர்த்திக்கு தேவகிய வரச் சொல்றேன். தொட்டிச் செடிங்களுக்கு தண்ணி ஊத்தி தோட்டத்தை பெருக்கிட்டு அது போவட்டும். நா பொழு துக்கு வந்து பாக்கி வேலய பாத்துக்கிறேன் ''

பாவாடை போய் விட்டான்.

அவன் சொன்ன மருந்து வைப்பதும், ஏவல் ஏவுவதும் மனசைவிட்டு நீங்காமல் தங்கியிருக்க, படுக்க முடியாமல் எழுந்து உட்கார்ந்து உமா ஒயர்களைப் பின்னத் தொடங் கினாள்.

## 4

மறுநாள் காலையில் தேவகி வேலைக்கு வந்தாள்.

நாலு மாச கர்ப்பத்தில் லேசாய் துருத்தின வயிறு. துவைத்துக் கட்டப்பட்ட வாயில் சேலை. எண்ணை தடவி படிய வாரிய தலைப் பின்னல். லஜ்ஜை பரவின முகம்.

ஒரே ஒரு நாள் மாலை சேரி குழாயில் தண்ணீர் வர வில்லை என்று ஒரு குடம் ஜலம் எடுக்க வீட்டுக்கு வந்த போதுதான் உமா அவளைப் பார்த்திருக்கிறாள். மற்றபடி வேலை செய்யும் புருஷனுக்கு டீ கொடுக்க, கஞ்சி கொடுக்க பைன்று சில பெண்கள் வயல் வரப்புகளுக்கு போகிற தினுசில் முன் ேவகி புருஷனைத் தேடிக்கொண்டு வந்தது கிடையாது. சிட்டா வக்கத்தில் முள் செடிகளை வெட்டிப் போட்டு வைக்குற ய சமயங்களில், 'அஞ்சலையை ஒரு கை பிடிக்க



வரச் சொல்லுங்கம்மா' எ
''என்னால நிக்க முடியாதும்ம பது, அறுபதுனு தேறும்,
சோறாக்கணும்'' என்று ப யதுதான்...''
ஓடிவிட்ட சமயங்களில், 'உம் ரு ஞ்சலை? தலைலே ஒரு முடி
சொல்லேண்டா, உதவிக்கு'' என்ற உ விக்கை போடறதை
தான். ஆனால் ஒருவித வெட்க சிரிப்பு டிச்சா, உனக்கு?''
மறுத்து விடுவான். றத்தோடு கீழே

''அ—அது எதுக்கும்மா இங்க? அதுக்கு இ சு... நா எல்லாம் தெரியாது...''

''பொண்டாட்டிய பொத்திப் பொத்தி வைச் துக்க? யாக்கும்''— த

''அடப் போங்கம்மா—நீங்க ஒண்ணு. நானா வர வாணாம்னு சொல்றேன்? அதுதான் லேசுல எங்கியும் கிளம் பாது. உண்டாயிருக்கம்னு அதுக்கு வெக்கம். வாந்தி அடிக்கடி எடுக்குதா, அதான் வெக்கம்.''

'அதன் பிறகு தேவகியை கூட்டி வா' என்று எதற்கும் உமா சொன்னவளில்லை.

இன்று அதிசயமாய் பாவாடையே வரச் சொல்லி தேவகி வந்திருக்கிறாள்.

உமா கொடுத்த காபியை குடித்த தேவகி, ''என்னடீ, நல்லாயிருக்குறியா?'' என்ற அஞ்சலையிடம் ''இருக் கேன்க்கா'' என்று சொல்லிவிட்டு கொசுவத்தையும் முந்தாணியையும் தூக்கி செருகிக்கொண்டு தோட்டத்தைப் பெருக்கி குப்பையை வாரிக் கொட்டினாள். பத்துக் குடம் ஜலம் சேந்தி தொட்டிச் செடிகளுக்கும், ரோஜாவுக்கும் ஊற்றினாள். எட்டுக்கெல்லாம் ''நா வரேம்மா. பொழு துக்கு மாமா வரும்'' என்று சொல்லிவிட்டு புறப்பட்டுப் போனாள்.

சரவணன் காலையிலேயே இன்ஸ்பெக்ஷன் என்று பக்கத்து கிராமங்களுக்குப் போய்விட சமையல் வேலை என்று எதுவும் இல்லாததால், துணிகளை அடித்துத் தோய்த்து தப்பிக் கொண்டிருந்த அஞ்சலைக்கருகில், கொல் லைப் படிக்கட்டில் உமா வந்து அமர்ந்தாள்.

...ர் கிடையாது வயல்காட்டில் ...ஷம் அஞ்சாகிறதாம்.

...சொல்ல முடியாதபடி ஒரு ...ற்றம்.

... முருங்கக்காயாக தோள்வரை தொங்கும் ... உயரே செருகியிருந்தாள். சாயம் போய் ...நதிருந்த எட்டு கஜம் நூல் புடவையை பின் ...ம, மடி வைத்துக் கட்டியிருந்தாள்.

...கறுத்து, பளபளத்த ரவிக்கையில்லாத மார்புகள். ...ழுத்தில் வெள்ளியில் கோர்க்கப்பட்ட மண் பவழங்கள். வாய் நிறைய வெத்திலை. இதான் அலங்காரம். மற்றபடி கை, காது என்று எதிலும் குந்துமணி நகை கிடையாது. ரப்பர் வளைகூட கிடையாது.

அஞ்சலைக்கு நாலு குழந்தைகள். மூத்தது பெண். அடுத்த இரண்டும் ஆண்கள். கடைசி பெண் ஒரு சப்பாணி. சப்பையை இழுத்து இழுத்து தேய்த்துக் கொண்டு அம்மா பின்னால் சில நாட்களுக்கு வரும். உமா கொடுக்கும் காபியை குடித்துவிட்டு, வேப்ப மரத்தடி நிழலில் தன் பாட்டுக்கு விளையாடிக் கொண்டிருக்கும்.

இங்கு வேலை பண்ணி அஞ்சலை கொண்டு போகும் இருபது ரூபாய் பணம், பழைய சோறோடு பையன்கள் இரண்டும் ஊர் ஆடு, மாடுகளை மேய்த்து கொண்டுவரும் ஐந்து, பத்தில் அவள் குடும்பப் பாட்டை ஒப்பேற்றியாக வேண்டும்.

''இந்த இருபதும், அந்தபத்தும் போதுமாடி அஞ்சலை? வயிறு ரொம்ப இது போதுமாடி? என்றால் விரக்தியுடன் சிரித்தாள்.

''என்னாம்மா பண்ணறது? போதுமோ, போதாதோ ...ருக்கிறது அம்மாந்தானே! கடவுள் புண்ணியத்துலே நாலு ஆடுங்க இருக்குது, ஒண்ணுமாத்தி ஒண்ணு குட்டி போட்டுக் கிட்டே இருக்கும் குட்டிங்க வளர வளா பெரிசை





வித்துடுவம். அதுலே மாசம் அம்பது, அறுபதுனு தேறும். அதையும் வைச்சிக்கிட வேண்டியதுதான்...''

''உனக்கு வயசு என்ன அஞ்சலை? தலைலே ஒரு முடி கூட நரைக்கலை, ஆனா, ரவிக்கை போடறதை விட்டுட்டியே— ஏன்? அத்தனை வயசாயிடிச்சா, உனக்கு?''

புடைத்துக் கொண்டிருந்த அரிசியை முறத்தோடு கீழே வைத்துவிட்டு அஞ்சலை முறைத்தாள்.

''அது ஆவுதும்மா, எனக்கு நாலு கழுதை வயிசு... நா என்னகொமரியா சாக்கெட்டு போட்டு,தலை சீவி மினுக்க? மூத்தவ பொறந்தப்பொவே நா சட்டை போடறதை வுட்டுட்டேன். எங்க வழக்கம் அதான்...''

''குழந்தை பிறக்கறத்துக்கும் ஜாக்கெட் போடறதை விடறத்துக்கும் என்ன சம்பந்தம்?''

''ஏம்மா இல்லாம? பொம்பளைக் குட்டி பொறந்துட்டா, எனக்கு பொறுப்புதானே? நாலு காசு சேத்து வைப்பமா, நாளைக்கு ஒரு நகை நட்டு பண்ணி அதுக்குப் போடுவமானு இல்லாம, நாமளே சாக்கெட்டும், நகையுமா நின்னா எப்படி? அதுவும் எம் புருஷன் போனவுட்டு, தலை சிவறதைக் கூட நா வுட்டுட்டேன். நா தலைசீவிச் சிங்காரிச்சுக்க, எவனாவது பாவிப் பய என்னைப் பார்த்துச் சிரிக்க, நானும் புத்திகெட்டு பதிலுக்கு சிரிக்க...யம்மாடி வாணாம் தாயி...இருக்குற நாலு புள்ளைங்களை ஒழுங்கா நா கரை ஏத்தி விட்டா போதும்... இன்னொரு புருஷனும் வேணாம், பசங்களும் வேணாம்.''

அன்றொரு நாள் அஞ்சலை சொன்ன வார்த்தைகளில் பொதிந்து கிடந்த நியாயத்தை எண்ணி வியந்தபடி உமா படிக்கட்டில் அமர்ந்திருக்க ''என்னம்மா அப்படிப் பாக்கறீங்க? அட, தே, அம்மோவ்'' என்று துணிகளை பக்கெட் தண்ணீரில் அலசிய அஞ்சலை கேட்டாள்.

உமா மெதுவாய் சிரித்தாள்.

''ஒண்ணுமில்ல அஞ்சலை... சும்மா எதையோ நினைச்சுக்கிட்டு இருந்தேன். ஆமா, இந்த தேவகிக்கு சொந்த ஊர்

எது? அவளுக்கு இது எத்தனாம் மாசம்? அதிசயமா இன்னிக்கு இங்க வந்திட்டா... நாலு வார்த்தை பேசினா பதிலுக்கு ஒரு வார்த்தை பேசறாளே, பிள்ளை உண்டாகி இருக்கோம்னு அவளுக்கு அத்தனை வெக்கமா என்ன?''

''உண்டாயிருக்கிறதுலே என்ன வெக்கம், சந்தோஷம் தான். கலகலனு பேசிக்கிட்டு, அடிக்கடி வெளிலே வாசல்லே வந்து புருஷனோட குலாவிக்கிட்டு நின்னா, மூத்தா கண் பட்டுடுமோனு பயம்தான்.''

''என்னது? மூத்தா கண்ணா? என்ன சொல்றே அஞ்சலை, நீ?''

துணியை உதறி உலர்த்தின அஞ்சலை உடம்பைத் திருப்பாமல் தலையை உயர்த்திப் பார்த்தாள்.

''அடி ஆத்தா பாவாடைக்கு இவ ரெண்டாவது சம்சாரம்னு ஒங்களுக்குத் தெரியாதாங்காட்டியும்?''

''தெரியாதே.''

''சும்மானாச்சும் ஊர்க் கதையெல்லாம் உங்க கிட்டப் பேசுவானே, தன் கதையச் சொல்லலியா? அது பெரிய்ய கதையாச்சேம்மா!''

இப்போது உமாவுக்கு நிஜமாகவே ஆர்வத்தைக் கட்டுப் படுத்திக் கொள்ள இயலவில்லை.

''என்ன கதை? சொல்லேண்டி, அஞ்சலை—''

அஞ்சலை துணிகளை காயப் போட்டுவிட்டு கீழ்ப்படி யில் வந்து உட்கார்ந்து கொண்டாள்.

''பழனிம்மா இவனுக்கு மாமன் பொண்ணு. நாலு வருசம் முந்தி கண்ணாலம் நடந்தது. இங்கதான், இந்த சேரிலதான் பொட்டி போட்டு அமக்களமா பண்ணாங்க. பழனிம்மா அவ அப்பனுக்கு ஒத்தப் பெண்ணு. போக்கியத் துக்கு நிலம் எடுக்கறதோட, இரண்டு கறவ மாடு வேற வச்சிருக்காரு— நல்ல துட்டுக்காரரு... கண்ணாலம் ஆன



மறுமாசமே பழனிம்மா உண்டாயிட்டா. வவுத்துலே புள்ளைக்கு ஏளு மாசம் இருக்கறப்போ, புதுச்சேல எடுத்து மோளம் வைச்சு வளகாப்புகூட நடத்தினாங்க. இந்தப் பாவாடை அன்னாடம் ஆடு மேய்க்கப் போயிட்டு பொளு துக்குத் தான் திரும்புவானா? அப்பத்தான் அந்த தப்புத் தண்டா நடந்து போச்சு...''

அஞ்சலை நிறுத்தினாள். சுருக்குப் பையை எடுத்து உடைத்த பாக்கில் இரண்டை வாயில் போட்டுக் கொண் டாள். காய்ந்த வெற்றிலையில் பட்டையாய் சுண்ணாம்பை தடவி, சுருட்டித் திணித்துக் கொண்டாள். துண்டுப் புகை யிலை. ஒன்றைப் பொறுக்கி எடுத்து, சின்ன உருண்டையாய் சுண்ணாம்பை உருட்டி அதோடு சேர்த்து வாயில் போட்டுக் கொண்டாள். நாலு தரம் கலவையை மென்று ஒரு பக்கமாக அடக்கிக் கொண்டாள்.

''சொல்லுடி... வெத்தலை போட்டுக்க எத்தனை நாழி?''

''எங்க வுட்டேன்? ஆங்... இந்தப் பாவாடை ஆடு மேய்க்கப் போயிட்டா, இந்தக் குட்டி வூட்டோட கெடக்க வேண்டியது தானே? அதான் இல்ல. ஆத்தா வூட்டுக்குப் போறேன்னு நாலு தெரு தள்ளி இருக்குற வூட்டுக்குப் போவும். சின்னாத்தா வூட்டுக்குப் போறேன்று போவும். இப்டீ அலையும். வாணாண்டீ வாயும் வவுறுமா இருக்கிற, காத்து கறுப்பு படும்டீனு சொன்னா சிரிக்கும்... நல்ல புள்ளைதாம்மா அது. என்னமோ போறாத காலம் போ...''

''என்ன நடந்துச்சுனு ஒழுங்கா சொல்லாம, என்னடி கத்தி வளைக்கிறே?''

''வர்றேன்... வர்றேன்...'' இதற்குள் வாயில் எச்சில் ஊறி விட எழுந்து போய் சாக்கடையில் உமிழ்நீரை அவள் துப்பிவிட்டு வந்தாள்.

''மூணாவது தெருவுலே கட்டையன்னு ஒத்தன் இருக் கானம்மா... சரியான ரௌடி...சாராயம் காச்சுவான், கூத்தியாளோட ஆட்டம் போடுவான். இவன் கண்ணுலே

உண்டாயிருக்கிற பொண்ணு பளபளனு இருக்குற அளகு விளுந்திடிச்சாங்காட்டியும்... என்ன சொன்னானோ, ஏது சொன்னானோ, என்ன கொடுத்தானோ, ஏது கொடுத்தானோ தெரியலை: அப்பப்ப இந்தக் குட்டி அவனோட இங்க அங்க நின்னு பேசத் துவங்கிடிச்சி.''

"அப்புறம்?''

"அப்பால என்ன? ஊர் சனம் பேசறத்துக்கு கேக்கணுமாக்கும்? அப்படி இப்படி பேச்சு வளந்து, விபரம் பாவாடை வூடு வரைக்கும் வந்திடிச்சி. ஒரு நா பாருங்க; வளகாப்பு ஆயி நாலு நா ஆயிருக்கும், மேச்சலுக்குப் போன பாவாடை ஒடம்பு என்னமோ ஓச்சலா இருக்குதுனு வூட்டுக்கு சுருக்க வந்திட்டான். அன்னிக்குப் பாத்து இந்தக் கட்டையன் நல்லா தண்ணி போட்டுட்டு பழனிம்மாவத் தேடிக்கிட்டு அவ வூட்டுக்கே வந்திருக்கான். பட்டப் பகல், வூடு திறந்திருக்கு. பாவாடை உள்ள நுளையறான், உள்ள பொண்டாட்டியும், அந்தக் குடிகாரனும்.''

"சேர்ந்து பாத்திட்டானா?''

"சேர்ந்திருந்தாங்களோ, இல்லியோ, ஆரு கண்டது? பாவாடை கூடவே வந்த மதுரை, இன்னும் அவன் இவன் போட்ட கூச்சல்லே ஊர் கூடிப் போச்சு...''

"அப்புறம்?''

"தத்...அப்பால என்ன? சனங்க பூரா 'நீ ஆம்பிளனா இவளை அடிச்சே கொல்லுடா'னு சத்தம்போட பாவாடை அவளையும் அவனையும் புரட்டிப் புரட்டி...யப்பா ரத்தக் காடாயிப் போச்சும்மா... பெரியவங்க வந்து தடுத்தாங்களோ, பொளைச்சாங்களோ... 'பிடிக்கலைன்னா பஞ்சாயத்து கூட்டி ஆவறதை பாக்கறதை வுட்டுட்டு, இது என்னடா அக்குரும்புத்தனம்'னு திட்டினாங்க... மறுநாளே பஞ்சாயத்து கூடிச்சி... பழனியம்மாவ கூட்டிட்டு வரச் சொல்லி, என்னா'தின்னாங்க... அது எதுவும் பேசாம அளுதுகிட்டு நின்னுது. கட்டையனைக் கேட்டா, 'ஆமா, எங்களுக்குள்ள அப்படித்தா'னு சொல்லி



அபராதம் கட்ட ரெடின்னான். 'அப்படின்னா சரி, கண்ணாலத்துக்கு ஆன செலவு எட்டு நூறை கையிலே கொடுத்திட்டு இவளை கூட்டிக்க'னு தீர்ப்பு சொல்லிட்டாங்க. அன்னிக்கே கட்டையன் பணத்தை கட்டிட்டான்; அவனுக்கு என்ன பண முடை? பாவாடை பணத்தை வாங்கிக்கிட்டான். வருஷம் மூணாச்சு...இது நடந்து போன வருஷம் இவளைக் கட்டிக்கிட்டான்...இதாங் கதை...''

உமா பிரமித்து அமர்ந்திருந்தாள்.

பஞ்சாயத்துகூடி, கல்யாணச்செலவை கொடுத்துவிட்டு பிரிந்து விடுங்கள் என்றால் விஷயம் முடிந்துவிடுமா?

அத்தனை எளிதா?

கோர்ட்டு, விவாகரத்து அது, இது என்ற அலைச்சல் நீதி இவர்களுக்கு இல்லையா?

ஆயிரம் காலத்துப் பயிர் எனப்படும் தாம்பத்தியத்தை பிரிப்பது இத்தனை சுலபமா?

"பஞ்சாயத்து சொன்னா ஆச்சாடி அஞ்சலை? கோர்ட்டுக்கும் போனாத்தானே செல்லும்?''

"ஆங்? இது என்ன கொலைக் கேஸா, இல்ல திருட்டுக் கேஸா கோர்ட்டுக்குப் போவ? புருஷன் பொஞ்சாதி தகறாருக்கு பஞ்சாயத்துதான் சரி...''

கட்டையன் கொடுத்த பணத்தை வாங்கிக்க பாவாடைக்கு கூச்சமாயில்லே?''

"என்னா கூச்சம்? பொஞ்சாதிய தூக்கி லட்டு கணக்கா கொடுக்கலை''

"வயத்திலே இருந்தது, யார் பிள்ளை?''

"அத்த ஆறு கண்டது? நாங்க அப்படித்தான்னு கட்டையன் சொன்ன பொறவு, எவன் புள்ளையா இருந்தா என்ன?''

"பிள்ளையா, பொண்ணா? அது எங்க இப்ப?''

"பொண்ணும்மா...பழனிம்மா, கட்டையனோடத் தான் அதுவும் இருக்குது"

"பழனிம்மாவ பெத்தவங்க இதுக்கு ஒண்ணும் சொல்லலியா?"

"என்னா சொல்லுவாங்க? வயசு வந்த பிள்ளை, அவனும் துட்டுக்காரன். ஒருமாசம் போல பேச்சு வார்த்தை இல்லாமத்தான் இருந்தாங்க. அப்பால மக பொறந்ததும், வேட்டி, துண்டு புடவை வாங்கி கட்டையன் கொடுத்ததும், அல்லாரும் ராசியாகி ஒண்ணாயிட்டாங்க..."

"இப்ப ஒரே சேரிலேதான் பாவாடையும், அவளும் இருக்காங்களா?"

"ஆமா—இவன் கிழக்கால இருக்கான். அவ வேடக்கால..."

அஞ்சலை இது நாழிகை சொன்ன விவரங்களை ஜீரணிக்கப் பார்ப்பது போல உமா மௌனமாய் இருக்க மேல் தலைப்பை உதறிக்கொண்டு அஞ்சலை எழுந்தாள்.

"யம்மாடி... போது போயிடிச்சே... எப்ப நா வூட்டுக்குப் போயி, எப்ப சோறாக்கறது? அந்த சப்பாணிப் புள்ளெக்கி ஏற்கனவே பசிதாங்காது, ரெண்டுநாளா காய்ச்சல் வேற...லவ லவனு பறக்கும்... நொய் இருந்தா கொஞ்சம் தர்றியாம்மா... கஞ்சி வைச்சி ஊத்திக்கறேன். ரெண்டு நாளா கேப்ப கூழ்தான்..."

உமா உள்ளே போய் ஆழாக்கு நொய்யைக் கொண்டு வந்து அஞ்சலையின் முந்தானையில் கொட்டி 'நா வர்றேன்' என்று அவள் போனபிறகு, கதவைத் தாள் போட்டுக் கொண்டு சமையல்கட்டுக்கு வந்தாள்.

என்னமோ வேதனையாய் இருந்தது.

பழனியம்மா நிஜமாகவே தப்புப் பண்ணினாளா இல்லையா?



இப்படி சட்டென்று ஒரு தம்பதியைப் பிரிக்க பஞ்சாயத்துக்கு யார் அதிகாரம் கொடுத்தார்கள்.

மனசு இருந்த நிலையில் எதையும் சமைக்கப் பிடிக்கவில்லையாதலால், இரண்டு தோசை வார்த்து தின்று மோர் குடித்து அன்றையப் பகல் சாப்பாட்டை முடித்தவள், பேசாமல் போய் படுத்துவிட்டாள்.

## 5

அன்று வேலைக்கு வரும்போதே பாவாடை கன குஷியுடன் வந்தான். உமா கிட்டத்தில் இல்லாத போது சீட்டி அடித்தவாறே செடிகளைக் கொத்திவிட்டான். ராகமே இல்லாமல், 'ஏம் மாமன் ஒரு நா மல்லியப்பூ கொடுத்தா... ஆ...ன்...' என்று இழுத்தான்.

குஷிக்கு காரணம் இரண்டாம்.

ஒன்று அண்ணன் உடம்புநேராகிவிட்டதாம். இத்தனை நாட்களாய் வயித்து வலி என்று வாயில் எதையும் போடாமல் அழுது புலம்பியவன், நேற்று இரவு வயிறு முட்ட சோறு தின்னானாம். தெம்பு வந்துவிட்டது. வேலைக்குப் போகிறேன் என்கிறானாம்.

இரண்டு—தேவகி வீட்டிலிருந்து வெள்ளிக்கிழமை அன்று சீர் சௌனத்திகளோடு வருகிறேன் என்று ஆள் மூலம் சொல்லி அனுப்பி இருக்கிறார்களாம்.

"வெள்ளிக்கிழமை ஒரு நா எனக்கு லீவு வேணும்மா... பொண் வூட்டுலேந்து வர்றவங்களுக்கு நம்ம வூட்டுலே விருந்து வைக்கணும். வேலை சரியா இருக்கும்..."

"அப்ப, விருந்து தடபுடலா இருக்கும்னு சொல்லு. நா கூட சாப்பிட வரலாம்..."

"வாங்கம்மா...என் வூட்டுக்கு நீங்க வர்றதுன்னா, நாற்காலி, மேசை வாங்கிட்டு வந்து விருந்து வைக்கிறேம்மா..."

பாவாடைக்கு வாயெல்லாம் பல்.

"சரி, சரி, அத அப்புறமா பாத்துக்கலாம். இது தேலகிக்கு எத்தனாம் மாசம்? வளை அடுக்கவா வர்றாங்க?"

"வளைகாப்பு இல்லேம்மா...இது அஞ்சாம் மாசம் மினிட்டு அஞ்சு சோறாக்கி எடுத்திட்டு வருவாங்க..."

"அது என்னடா அஞ்சு சோறு?"—

"புளிச்சோறு, எலுமிச்ச சோறு, நார்த்தங்கா சோறு, தயிர் சோறு,சாம்பார் சோறு னு அஞ்சு வகை செய்வாங்க. அத்தோட அஞ்சு வகை ஊறுகா, வெத்தல பாக்கு, பூவு, பளம், முடிஞ்சா புது சேல, இல்லாட்டி சாக்கெட் துணினு, அவங்க அவங்சளுக்கு முடிஞ்ச அளவு சீர் எடுத்திட்டு வந்து பொண்ணுக்குக் கொடுப்பாங்க... பொண்ணை மணைல உக்கார வைச்சி சோறு போட்டப் பொறவு, அவுங்க கொணாந்ததை ஊர் சனங்க முச்சூட்டுக்கும் பிரிச்சுக் கொடுப்பம். அப்பால நாங்க அவுங்களுக்கு விருந்து வைப்பம்—"

"ஏண்டா, அவங்க கொண்டு வந்ததயே போடக் கூடாதா?"

"ஆங்... நம்ம மருவாதி என்னாவறது? நம்ம காசை செலவளிச்சி நம்ம வீட்டுசோறை அவங்களுக்குப் போட்டா தான் நமக்கு பெருமை..."

"எத்தனை பேர் வருவாங்க?"

"அஞ்சுபேரும் வருவாங்க, அம்பது பேரும் வருவாங்க.



அது அவுங்க இஸ்டம்...வந்தியா வா...வரலியா போ... இதுலே நாம சொல்றத்துக்கு என்ன இருக்குது? அவுங்க பொண்ணைப் பாக்க, அவுங்க வர்றாங்க...என்ன நா சொல்றது?"—

"அது சரி, அவுங்க பாட்டுக்கு அம்பது பேர் வந்து நின்னா, பொங்கிப் போட உனக்கு வசதி இருக்க வேணாமா? கையிலே காசு வைச்சிக்கிட்டு இருந்தா தானே காரியம் நடக்கும்?"

"இரண்டு பித்தலை தவலை இருக்குதுமா...அடகு வைச்சா அறுவது எளுவது வரும். அத்த வைச்சி சமாளிச்சிக் கலாம்னு இருக்கேன். இப்பத்தான் அண்ணார் வைத்தியத் துக்காக உங்ககிட்ட துட்டு வாங்கிருக்கேன், சும்மனாச்சும் ஒங்களையே தொந்தரவு செய்யறது நாயமா,சொல்லுங்க?"

"வர்றவங்க உடனே போயிடுவாங்களா, இல்லே, இருப்பாங்களாடா?"

"இங்க என்ன வேலை அவுங்களுக்கு? பொண்ணையும் இட்டுகிட்டு ஒடனே கிளம்பிடுவாங்க. ஒரு ராத்திரி பொண்ணை தங்களோடு வைச்சிக்கிட்டு. நாளை மக்கா நாளு அனுப்புவாங்க. அப்பால வளைகாப்பு ஆனாவுட்டு, பிரசவத்துக்காவ இட்டுகினு போயிடுவாங்க..."

பேசிக்கொண்டே பாவாடை கத்திரி மஞ்சியை கொத்திக் கலைத்து விட்டான். பெரிசாய் இருந்த மண் கட்டிகளை மண் வெட்டியால் அடித்து உடைத்து "ஒரு நா காயவிட்டு ஜலம் விட்டா கப்புனு பூ எறங்கும்" என்றான்.

ஒரு நிமிஷம் போல மெளனித்து, நாலு நாளாக அவனிடம் கேட்க நினைத்து, வேண்டாம் என்று தவிர்த்து வந்த விஷயத்தை இப்போது கேட்கலாமா என்று உமா நினைத்தாள்.

கேட்டால் என்ன தப்பு?

ஊர் முழுவதும் ஏற்கனவே தெரிந்த சமாசாரம் தானே? யாருக்கும் தெரியாத ரகஸியத்தையா கேட்கப் போகிறேன்?

"ஏண்டா..."

பாவாடை குனிந்தபடியே பார்வையை நிமிர்த்தினான்.

"வந்து...வந்து உனக்கு தேவகி இரண்டாவது சம்சார மாமே...நீ சொல்லவே யில்லியே...ம்?"...

கண்களைச் சிமிட்டாமல் பாவாடை வெறித்தான்.

"ஆரும்மா சொன்னது?"

"யாரோ—நீ ஏன் சொல்லலை?"

"அஞ்சலைக்கா சொல்லிச்சா?"

"யார் சொன்னா என்னடா? என்னண்டை இந்தப் பேச்சுப் பேசற, உன் விஷயம்னா மட்டும் மறைக்க கத்து கிட்ட பத்தியா?"—

மண்வெட்டியைத் தரையில் போட்டுவிட்டு பாவாடை அங்கேயே குந்தி உட்கார்ந்தான்.

"நா மறைக்கணும்னு மறைக்கலைம்மா...இத்த போயி பெரிய விசயமா ஒங்க கிட்ட பேசணுமாங்காட்டியும்னு தான்..."

வாடி இருந்த கத்தரி இலையைக் கிள்ளிப் போட்டபடி உமா கேட்டாள்.

"மூத்தவளும் இதே சேரில தான் இருக்காளா? பார்த்தா கொண்டா என்ன பண்ணுவீங்க? அந்தக் குழந்தைக்கு இப்ப என்ன வயசாகுது?"

பாவாடை தலையைத் குனிந்து கொண்டான். அரை நிமிஷம் அப்படியே இருந்துவிட்டு மெதுவாக எழுந்தான்.

"வாணாம்மா...அவ பேச்சை என்னண்டை பேசாதிங்க. அந்தக் கூறுகெட்ட நாயி பத்தி நா பேச விரும்பலை...அது அசிங்கம், அவ புள்ள அசிங்கத்துலே உருவானது. அவங்



களைப் பத்தி நாம பேசறதே மகா பாவம். சின்னக் குரலில் பேசினவன், மண்வெட்டியைக் கையில் எடுத்துக் கொண்டான். வாழை மரங்களைப் பார்க்கப் போய் விட்டான்.

அந்த வெள்ளிக்கிழமை பாவாடை வேலைக்கு வர வில்லை. சனிக்கிழமை வந்தவன், முதல் நாள் சம்பந்திகளை செம்மையாகக் கவனித்து, மரியாதை பண்ணி அனுப்பி விட்டோம் என்ற திருப்தியோடு இருந்தது வெளிப்படை யாகவே தெரிந்தது.

தேவகி ஊரில் இல்லாததால் தானே சமைத்துக் கொண்டு அவதிப்பட வேண்டாம் என்ற கரிசனத்தோடு, இரண்டு வேளையும் அவனுக்கு உமாவே சாப்பாடுபோட்டு விட்டதால் அந்த இரண்டு நாட்களும் வீட்டிலேயே பழி கிடந்தான்.

மூன்றாம் நாள் காலை சொன்னபடி தேவகியை அவள் வீட்டார் கொண்டு வந்து விட்டனர்.

மதியம் வேலைக்கு வந்த பாவாடையின் முகம் ஜிவு ஜிவுத் திருந்தது.

உமா என்ன வென்று கேட்கும் முன்னரே அவன் கொட்டித் தீர்த்தான்.

"அவுங்க ஆயிரம் சொல்லுவாங்க. இந்த முண்டத் துக்கு புத்தி எங்கம்மா போச்சி? கேப்பார் பேச்சக் கேட்டு, இப்ப புத்திகெட்டு வந்து நிக்கிறாளே, இவளை என்ன பண்ணா தாவலை?"—

"ஷ் ஷ்...இருடா...கொஞ்சம் மெதுவா பேசு... என்னாச்சு? எதுக்காக இப்படிக் குதிக்கிறே...ம்?"

"பின்னே என்னம்மா? அப்பன் வூட்டுக்குப் போனியா, அங்க ஒரு நா தங்கினியா, திரும்ப அடக்கமா வந்தியானு இல்லாம, ஏடாகூடமா நடந்துக்கிடுவானேன், இப்ப வவுத் துலே நெருப்ப கட்டிக்கிட்டு அளுவானேன்?"

"டே...என்ன நடந்துச்சினு விவரமா சொன்னாத் தானேடா, புரியும்?"—

"ஆத்தா ஊட்டுக்குப் போனா இல்லே."

"ஆமா, போனா"

"அங்க போன பெறவு பக்கத்துவூட்டு பசங்க எல்லாம் சினிமா பாக்கப் போறோம், ஜிவாஜி படம்னு கௌம்பி யிருக்காங்க... இதுவும் கூடப் போயிருக்குது..."

"அவ்வளவுதானேடா ...ஒரு சினிமா பார்த்ததுக்கா, இந்தக் குதி குதிக்கிறே?"

"அட அதுக்கில்லேம்மா... சினிமா கொட்டகை அவ ஊர்ல கெடையாது. ஆறு தாண்டி பக்கத்து ஊருக்குப் போனாதான்."

"சரி போகட்டுமே...தனியா போகாம, துணையோட தானே போயிருக்கா?"

"என்னம்மா, உங்களுக்கு ஒண்ணும் புரியலை...ஆறு தாண்டிப் போயிருக்காம்மான்னா..."

"ஆறு தாண்டினா என்னடா?"

'வ...வ...வ...வ'—பாவாடை உள்ளங்கையால் வாயில் அடித்துக் கொண்டான்.

"என்னவா? கர்ப்பமாயிருக்குற பொண்ணு, அதுவும் தலைச்சன் புள்ளையாயிருந்தா, ஆறு தாண்டிப் போவக் கூடாதும்மா...போனா கரு கலைஞ்சிடும்... ஆமா ..."

உமாவால் சிரிப்பை அடக்க முடியவில்லை. பக்கென்று சிரித்துவிட்டாள்.

"சரியான பைத்தியம்டா, இதுக்கா இப்படிக் கவலைப் படுறே...பட்டணத்துலே நாங்களெல்லாம் இந்த மாதிரி கவலைப் படாம, பெரிய பெரிய ஆறு ஏன் சமுத்திரம் எல்லாம் தாண்டிக்கிட்டுத்தான் ரயில், விமானத்துலே



பயணம் செய்யறோம்—என்ன ஆயிடிச்சி, எங்க தலைச்சன் களுக்கெல்லாம்?"

"உங்களோட பேச என்னால ஆவாதும்மா...ஏதாவது சொன்னா போடா பைத்தியம்னு எதையாவது சொல்றீங்க காலைலேந்து தேவகிக்கு லேசா உதிரம் படுதே, இதுக்கு என்ன சொல்றீங்க? இடுப்பை நோவுதுனு சுருண்டு படுக்குதே இதுக்கு என்ன அர்த்தம்?"

உரக்கப் பேசிவிட்டுமனைவிக்குக் குறைப்பிரசவம் ஆகி விடுமோ என்ற திகிலில் கண்கள் கலங்கிப்போக பாவாடை நின்றதும், உமா திடுக்கிட்டாள்.

உதிரப் போக்கா?

இடுப்பு வலியா?

அபார்ஷன் ஆகப் போகிறதா?

என்ன, கஷ்டம் இது!

நடந்தும், மாட்டு வண்டியிலும் பிரயாணம் செய்த அதிர்ச்சி இதற்குக் காரணமோ?

உடனடியாக கவர்மெண்ட் ஆஸ்பத்திரிக்கு அழைத்துப் போய் சிகிச்சை செய்து அவளை பெட்ரெஸ்டில் வைக்காமல் 'ஆறு தாண்டின குற்றம், அது, இது' என்று சொல்லிக் கொண்டு இவன் ஏன் இப்படிப்பொழுதைக் கடத்துகிறான்?

பரபரப்புடன் எழுந்த உமா, உள்ளே போய் பத்து ரூபாய் பணத்துடன் வந்தாள்.

'உதிரம் போவுதுன்னா, அப்படியே வைச்சிக்கிறது நல்லதுக்கு இல்லே. இந்தா இந்தா; இந்தப் பணத்தை பிடி. உடனே பஸ்ஸிலே ஏத்தி டவுனுக்கு கூட்டிப்போய் ஆஸ்பத் திரிலே காட்டு...ம்...எந்திரிடா..."

பாவாடை நன்றியோடு பணத்தை வாங்கிக் கொண்டு வேகமாய் புறப்பட்டுப் போனான்.

என்ன போய் என்ன?

அலைச்சல் காரணமோ, இல்லை பாவாடை நம்பிய மாதிரி ஆறு தாண்டியதுதான் காரணமோ, இல்லை வேறு ஏதாவ்தோ, அவன் வீட்டுக்குப் போவதற்குள் அங்கு தேவகிக்கு குறைப்பிரசவம் ஆகிவிட்டிருந்ததை யாரால் தடுக்க முடிந்தது?

## 6

விடியப் போகிறது.இருள் இன்னும் கரையவில்லை.

பாவாடைக்கு சீசீ என்று இருந்தது.

குத்திட்டு அமர்ந்து, சாணி மெழுகின தரையில் குச்சியினால் கோடு வரைந்துகொண்டிருந்தவனின் மனசு கொதியாய் கொதித்தது.

பின்னே என்ன?

பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும் என்பதற்கு வகையாய் மேலே மேலே மண்டையில் அடிகள் விழுந்துகொண்டிருந்தால் எப்படித்தான் ஒருவன் தாங்குவது.

ஒரு மாசத்தில் வரிசையாய், நீ, நான் என்று எத்தனை எதிர்பாராத செலவுகள்?

முதலில் அண்ணார் வைத்தியம்.

இரண்டாவது தேவகி வீட்டார் வந்த விருந்துச்செலவு.

அடுத்து அவளுக்கு கோணா மாணா என்று ஆகி, அம்பட்டச்சி வீட்டுக்கு வந்து 'ஆய், ஊய்' என்று அமர்க்களம் பண்ணியதில் அம்மா கொடுத்த பத்து போதாமல், பெட்டிக்கடை ஐயாயிரத்திடம் மேற்கொண்டு பத்து ரூபாய் கடன் வாங்க வேண்டியிருந்தது.



இப்போது மாரியின் இழவுச் செலவு.

போதும்டா சாமி போதும்.

காசு, பணம் கொல்லையில் காய்த்துத் தொங்குகிறதா என்ன, இப்படி அடுத்தடுத்துச் செலவு வந்தால் சமாளிப்பதற்கு?

ரொம்ப நேரமாகக் குந்தியிருந்ததில் ஆடு சதை மரத்துப் போக சுவரில் சரிந்து உட்கார்ந்தான்.

நாசமாய் போகிற மாரி.

கண்டதைக் குடிப்பானேன். இப்படி நினைத்த நினைப்பில்லாமல் வாந்தி பேதியாகி அரை நாழிகையில் பிணமாவானேன்?

மாரி, பாவாடைக்கு பங்காளி ஆகவேண்டும். இரண்டு தெரு தள்ளி இருக்கும் அவனும், இவனும் சித்தப்பன் பெரியப்பன் பிள்ளைகள்.

இவன் மாதிரிதான் அவனும். இவன் வயசுதான். ஒரு வித்தியாசம் இவனுக்கு ஐந்துவருஷம் முன்னால கல்யாணம் அவனுக்கு இப்போதுதான், ஆறு மாசம் முன்புதான்.

பாவி, பாவி...இப்படி அகாலமாய் இறப்பதற்கு கல்யாணம் என்ன, காட்சி என்ன?

பாவாடைக்கு எரிச்சல் மண்டியது,

எல்லாம் இத்தச் சித்தப்பன் கிழவனால் வந்த வினை. 'எனக்கு வயசாயீட்டுப் போறதுடா, ஒரு பேரப் புள்ளைய பாத்திட்டு என்ன நிம்மதியா போக வுடுடா...ஒங்க ஆத்தா கிளவி இருந்தா, இப்படி ஒன்னைத் தனிஆளா இருக்கவுட்டிருக்குமா...ராசா ஏம் பேச்சை கேளுடா...' நித்தமும் இதே புலம்பல்தான்.

"நா குடிகாரப் பய...என்னக் கட்டிக்கிட்டு ஒருத்தி வீணா அவஸ்தை படவேணாம்" என்று எத்தனையோ முறைகள் சொல்லி அலுத்துப் போன மாரி, ஒரு வழியாய்

அப்பன் பேச்சுக்கு செவி சாய்க்க, ஆறு மாசம் முன்னால் கன்னியம்மா அவனுக்குக் கழுத்தை நீட்டினாள்.

கன்னியம்மா பார்க்க லட்சணமாய் இருப்பாள். சிறு வாடாய்உடம்பு. காரியங்களை வாய்திறவாமல் கச்சிதமாய் செய்வாள். குடித்து ஆடிக்கொண்டு வருபவனைப் பார்த்து இன்றுவரை பல்லில் நாக்கு பட ஒரு வார்த்தை கேட்டவ ளில்லை. மொத்ததில் நல்லவள். அறியாப் பெண். அவளுக்கா இந்த நிலைமை?

"தே, மாமோவ்... இப்படி குந்திகினு இருந்தா என்னா அர்த்தம்? பொணம் வந்திடப் போவுது. பங்காளி நீ போய் தானே காரியங்கள கவனிக்கணும். எந்திரி மாமா ...தே..."

பக்கத்தில் வந்து குனிந்து பேசியவளை பாவாடை நிமிர்ந்து பார்த்தான்.

"என்னா மாமா அப்படி பார்க்குறே? எந்திரி..."

"கையிலே காலணா இல்ல புள்ளே, வெறுங்கைய வீசிக் கிட்டு அங்க எப்படிப் போவறது? செலவு மூச்சூடும் பங்காளிங்க பொறுப்புதானே? மாணிக்கம், வீரய்யன் பாடு தேவலை...நா தான் ஒண்ணுமில்லா ஆண்டியா மாட்டிக் கிட்டு முளிக்கிறேன்..."

சலிப்புடன் பாவாடை பேச, அவன் அருகில் அமர்ந்து, இடுப்பில் செருகியிருந்த சுருக்குப்பையை முன்னால் நீட்டி னாள் தேவகி.

"என்னாது புள்ளே?"

"துட்டு"

"ஏது?" —ஆச்சரியத்துடன் பையை வாங்கினவன் பிரித்து விரலை உள்ளே விட்டுத் துழாவி இரண்டு ரூபாய் ஒரு ரூபாய்த் தாள்களை வெளியில் எடுத்தான்.

ஒன்று, இரண்டு......பதினேழு ரூபாய்?

"ஏது புள்ளே, இம்மாந் துட்டு?"



"வெள்ளிக்கிளம அன்னிக்கு சாக்கெட் துண்டு வாங்க நேரம் இல்லேனு அப்பாரு எட்டு ரூவா பணமா தந்தா ரில்லே, அத்தோட, ஊர்லே ஆயா கொடுத்த நாலு ரூவா, அன்னிக்கு எரிமுட்டை வித்த ரூபா, எல்லாத்தையும் ஒண்ணா வைச்சிருக்கேன்..."

பணத்தைப் பையில் போட்டு, பாவாடை மனைவி யிடமே நீட்டினான்.

"வேணாம் புள்ளே... குருவி சேக்கறாப்பல வெயில்லே சாணி! பொருக்கி, வறட்டி தட்டி வித்து நீ சேத்த காசெல்லாம் நா வாங்கிக்கிட்டா எப்படி? ஒங்கப்பன் கொடுத்த பணத்தோட இதையும் போட்டு ரெண்டு சாக் கெட் துணியே எடுத்துக்க... உன்னண்ட நல்லதா இப்ப சட்டைத் துணியே இல்ல..."

"அடப் போ, மாமா... இப்ப சாக்கெட் எடுக்காட்டி என்ன மோசமாம்? அங்க பங்காளி பொணம் கிடக்குது, இங்க குந்திகிட்டு வெத்தா பேசிகிட்டு இருக்குற! நம்ம பங்கெ நாம செய்யாட்டி நாளைக்கு ஊர் நம்மெ ஏசாது?"

"இது பத்தாது புள்ளே... மேக்கொண்டு பத்து ரூபா வாச்சும் வேணும்..."

"அது எனக்குத் தெரியாதாங்காட்டியும். நீ இத்த எடுத்திட்டுப் போயி, மோளக்காரனுக்கு குடு, நா குண்டானை அடகு வைச்சி பத்து ரூபா வாங்கி வரேன்..."

விவகாரத்தை இனிமேலும் வளர்த்துவதில் பயனில்லை என்று நினைத்த பாவாடை எழுந்தான். பணத்துடன் இரண்டடி நடந்தவன் திரும்பினான்.

"பணம் கொடுக்க நீ அங்க வர வாணாம். நா பத்து மணிக்கா வந்து வாங்கிக்கிறேன். நீ என்னா பண்ணு; கடைக்கு போவறத்துக்கு முன்னால அம்மாவண்டெ போயி

விசயம் இப்படி, அதனால இன்னிப்பொழுதுக்கு நா வேலைக்கு வர மாட்டேன்னு சொல்லிட்டுப் போ... என்னா?''

தேவகி தலையாட்ட, பாவாடை புறப்பட்டான்.

தன்னை, சாவு வீட்டுக்கு வரவேண்டாம் என்று கணவன் சொல்வது ஏன், என்பது தேவகிக்குப் புரிந்தது தான்.

மாரி வீட்டுக்குப் பக்கத்துக் குடிசை கட்டையனு டையது. அங்குதான் பழனியம்மா, மகள் ராணியுடன் இருக்கிறாள்.

இவள் அங்கு வந்து நின்றால் பழனியம்மாளை பார்க்க நேரிடும். கட்டையனோ, அவளோ ஏதாவது தப்பாகப் பேச இவர்கள் பதில் சொல்ல நேரிடலாம்.

எதற்கு வம்பு?

வாஸ்தவத்தில் பாவாடையும், இழவு வீட்டுக்குப் போகத் தயங்கியதற்கு பணம் மட்டும் ஒரு காரணமில்லை, பக்கத்து வீடும்தான்.

பக்கத்துப் பக்கத்து வீட்டிலிருந்து கொண்டு யாராவது சாவுக்கு வராமல் இருப்பார்களா?

மூன்று வருஷங்களாய் கிட்டத்தில் பழனியம்மாளையும், ராணியையும் பார்க்காமல் தாக்காட்டியாகி விட்டது. அவர்களை சந்து முனையில் பார்த்தாலும்கூட டக்கென்று வேகமாய் வேறு பக்கம் போய்விடுவான்.

இன்று வகையாய் மாட்டிக் கொள்ளும்படி ஒரு இக்கட்டு தோன்றியிருக்கிறதே!

பாவாடை மாரியின் குடிசையை அடையும் போது அவர்கள் தேங்காய் உடைத்து, கற்பூரம் காட்டி, கை, கால் விரல்களைக் கட்டி, பிலாக்கணம் பாடத் துவங்கி விட்டார்கள்.

முதல் நாள் இரவு கலக்கல் எதையோ கண்ட இடத்தில் மாரி வாங்கிக் குடித்திருக்கிறான், நடு ஜாமம் ஆகும் போது



பீய்ச்சி பீய்ச்சி வாந்தி. அப்புறம் பேதி, விடிகாலை நாலு மணி சுமாருக்கு அப்பனும் இன்னொரு பங்காளி மாணிக்கமும் நினைவிழந்து போனவனை வண்டி கட்டி, எடுத்துப் போட்டு, டாக்டரிடம் எடுத்துப் போயிருக்கிறார்கள். அவர் என்ன ஏது என்று விவரமாய் பார்ப்பதற்குள் உயிர் போய்விட்டது. பிள்ளையின் பிணத்தை அப்பன் வண்டியில் ஏற்றி எடுத்து வருவதற்குள் மாணிக்கம் முன்னால் வந்து சேரியில் விஷயத்தைச் சொல்லிவிட்டான்.

டாக்டர் வீட்டிலிருந்து பிணம் வருவதற்குள் நாம் போய்விடலாம் என்று பாவாடை போட்ட கணக்கு பிசகாகி விட்டது,

''என்னா பாவாடை, இம்மா நாளி களிச்சி வர்றே?... பொணத்தைக் கொணாந்து கால் அவுராவுது. பங்காளி நீ இப்படி வந்தா என்னா அர்த்தம்?''

முறைத்த மாணிக்கத்துக்குப் பதில் ஏதும் சொல்லாமல் பாவாடை சுற்று முற்றும் பார்த்தான்.

இன்னும் கும்பல் சேரவில்லை. கொட்டுச் சத்தம் கேட்டால் வந்துவிடுவார்கள்.

''மோளத்துக்குச் சொல்லிட்டியா மாணிக்கம்?''

''எங்க? பொணத்தை எறக்கி, தேங்கா உடைச்சு கல்பூரம் காட்டினாத்தானே பொம்பளைங்க அளத் துவங்கலாம்னு, மொதல்லே அத்தக் கவனிச்சேன்...''

''சரி—நா போய் சொல்லி இட்டுக்கினு வரே. வீரய்யன் எங்க?''

''அவன் கன்னிம்மா ஊருக்கு ஆள் அனுப்ப போயிருக்கான்.''

பாவாடை, சந்தில் திரும்பி வேகமாய் நடந்தான்.

பறை மேளக்காரரிடம் முன் பணம் கொடுத்து, அனுப்பிவிட்டு, பந்தல் போட ஆளை ஏவினான். பல்லாக்கு ஜோடனையும், பாடையும் தயார் பண்ண ஆசாரிக்குச் சொல்லிவிட்டு இழவு வீட்டுக்கு அவன் வந்தபோது கூட்டம் நெரியத் தொடங்கிவிட்டது.

டண்டணாக்கு டண்டணாக்கு டண்டணாக்கு என்று நாலுபேர் கொட்ட, குரல் எடுத்து ஒரு பொம்பளை பிலாக்கணம் பாடினாள்.

''மலையிலே பாம்பிருக்கும்,
மலைப்பாம்பு சீறி வரும்—என்
மன்னவனை முன் அனுப்பி,
மஞ்ச வைச்சி என்ன பலன்.''

கன்னியம்மா அடித்துக் கொண்டு அழ மாணிக்கத்தின் மனைவி அடுத்த பாட்டை இழுத்தாள்.

''தம்பியோட வாசலிலே தங்கக்கொடி நட்டிருக்கும்,
தம்பி எனக்கருமை, தம்பிக்கு நா அருமை,
தம்பிக்கு வந்தவ தாவி என்ன பிடிப்பாளோ,
தகுந்த வார்த்த சொல்லி என்னச் சேர்த்து அணைப்பாளோ?''

பூ வாங்கி வர மாணிக்கம் லிஸ்டு போட, எதிர் வீட்டிருந்து வந்த காபியை அலுமினிய லோட்டாவில் ஊற்றி ரய்யன் பாவாடையிடம் நீட்டினான்.

வாசலில் ஒரு பக்கமாய் ஒதுங்கி நின்று அதைக் குடிக்க அவலை நிமிர்ந்தபோது பாவாடை அவளைப் பார்த்தான்.

பழனிம்மா...

இரண்டடி அருகாமையில்...

அவனோடு ஒருவருஷம் குடும்பம் நடத்திய பழனிம்மா வாத்தியார் படம் என்றால் முதல்நாள் முதல் ஷோ பார்த்த



பழனிம்மா! கருவாட்டுக் குழம்பை மணக்க மணக்க வைக்கத் தெரிந்த பழனிம்மா!

இவன் அவளைப் பார்க்க, அவள் இவனைப் பார்க்க அரை நிமிஷம் ஊர்ந்தது.

திடுமென்று கட்டையன் உள்ளேயிருந்து வெளியில் வந்தான். வாசத் திண்ணையில் பழனியம்மாவையும் சற்று தள்ளி பாவாடை நிற்பதையும் மாறி மாறிப் பார்த்தான். என்னவோ நினைத்துக்கொண்டு ''தேவடியா நாயே'' என்று மனைவி மீது பாய்ந்தான். ''வாசல்லே என்னடி வேல ஒனக்கு? எவன் பாப்பான், அவுத்துபோட்டு மயக்கலாம்னு நினைப்பாடி ஒனக்கு? கூறு கெட்ட நாயே...'' என்று உறுமினவன் ஓங்கி முதுகில் ஒரு குத்துக் குத்தினான் பின் கொண்டையைப் பிடித்து இழுத்து உள்ளே தள்ளிக் கதவைச் சாத்தினான்.

பார்த்துக்கொண்டே நின்ற பாவாடைக்கு திக்கென்றது.

இப்போது அவள் என்ன செய்துவிட்டாள் என்று இந்த மொத்து மொத்துகிறான்?

பறை கொட்டின சத்தத்தில் கட்டையன் கத்தியது அதிகம் பேர் காதில் விழாவிட்டாலும், பக்கத்திலிருந்த கிழவி ''நித்தமும் இதே கதைதான். வர வர சும்மானாலும் அவளை ரொம்பத்தான் ஆட்டிப் படைக்கிறான்'' என்று சொல்ல, எதையும் காதில் வாங்க விருப்பம் இல்லாத மாதிரி பாவாடை வேறு பக்கம் நகர்ந்தான்.

மணி ஒன்றை நெருங்குகையில் கன்னியம்மாவைப் பெற்றவர்கள் வந்து சேர்ந்தார்கள்.

அவர்கள் தூரத்தில் வருவதை ஒரு ஆள் ஓட்டமாக வந்து சொல்ல, சம்பந்திகளை அழைக்கும் மரியாதையில் மேளம் சேரி முனைக்குச் சென்று எதிர் கொண்டது.

பெற்றவர்களைக் கண்டதும் கன்னியம்மா புலம்ப, அவர்சள் கதற, சுற்றி இருந்தோர் அழ, சில நிமிஷங்களுக்கு ஏகமான துக்கத்தில் அனைவரும் மூழ்கிப் போனார்கள்.

ரெட்டியார் கொட்டகைக் கிணற்றிலிருந்து தண்ணீர் எடுக்க மேளத்தோடு போனவர்கள், தவலையில் தண்ணீர் நிரப்பி, அதில் வெயில் படாமல் இருக்க கொம்பில் துணி கட்டி, குடை மாதிரி எடுத்துக் கொண்டு வர, மற்ற காரியங்களை மளமளவென்று பங்காளிகள் கவனிக்க ஆரம்பித்தார்கள்.

மாமியார் வீட்டிலிருந்து வந்திருந்த எண்ணை, சீயக்காய் தேய்த்து மாரியைக் குளிப்பாட்டின பிறகு, இளநீர் தயிர், ஜல அபிஷேகம் செய்வித்து, புதுத் துணி உடுத்தினார்கள். பட்டை பட்டையாய் விபூதி இட்டு மாலை போட்டார்கள்.

மூன்று மணிக்குள் பூப்பல்லக்கு தயாராகிவிட்டது.

கடைசிக் காரியமாய், கன்னியம்மாவைப் பிணத்துக்கு அருகில் அமர்த்தி நலங்கு வைத்தார்கள். பிணத்தின் கையில் வெற்றிலை பாக்கு வைத்து மாற்றிக் கொள்ளச் செய்தார்கள். மாலை மாற்றி போட்டோ பிடித்தார்கள்.

சனிப் பிணம் தனிப் போகக் கூடாது என்று உயிரோடு ஒரு கோழிக் குஞ்சை பாடையில் வைத்துக் கட்டின பிறகு பிணத்தை பல்லக்கில் வைத்துத் தூக்கினார்கள்.

நடை பாவாடை போட ஏகாலி நாலு புடவைகளுடன் முன்னால் போனான்.

ஒரு புடவையை நீளமாய் விரிக்க, அதன்மேல் குடித்து விட்டு ஆடுபவர்களும் மேளக்காரர்களும் முன்னால் செல்ல வறுத்த பொறி, பூ, காசுகளைப் பங்காளிகள் வாரி இறைக்க, தொடர்ந்து பல்லக்குப் போனது.



பெண்கள் உருண்டு அழுதார்கள். கன்னியம்மா மயங்கி விழுந்தாள். மாரியின் அப்பன் பித்துப் பிடித்த மாதிரி பல்லக்கைச் சுற்றி ஓடினான்.

ஊர்வலம் மெயின் ரோடுக்கு வந்தபோது, அதிர் வேட்டு விட்டார்கள்.

மேளமும் வேட்டும் அமர்க்களப்பட உமா, அஞ்சலையுடன் வேலிக் கருகில் வந்து நின்று வேடிக்கை பார்க்க முற்பட்டாள்.

''அ...அதோ பாருங்கம்மா அங்கதான் சிகப்பு கைலியும் மஞ்சா பனியனும் போட்டுகிட்டு ஆடலை, அவன்தான் கட்டையன். அதாம்மா...பாவாடையோட முதல் பொஞ்சாதிய இளுத்துகிட்டுப் போனவன்...என்னா ஆட்டம் ஆடறான் பாருங்கம்மா...என்னேரமும் குடிதான். அப்பால ஆடறத்துக்கு கேட்பானேன்? அந்தா பாருங்க, பின்னால பூ போட்ட வாயில் சேல கட்டிகிட்டு, புள்ளைய கையிலே பிடிச்சுகிட்டு தெரு ஓரமா நிக்குது பாருங்க, அ, அதான் பழனிம்மா...பாவம்மா...வரவர அதுக்கு எதுவுமே சொகமில்லே...முன்னே இருந்த ஆசை இவளண்ட கட்டையனுக்கு இப்ப இல்ல...பக்கத்து கிராமத்துலே புச்சா ஒரு வைப்பாட்டி வைச்சிக்கினு இருக்கான்னு சொல்றாங்க... அன்னாடம் இங்க இவளைப் போட்டுப் பொரட்டி எடுக்கிறதா கேள்வி, பாவம்...''

அஞ்சலை காட்டிய இரண்டு நபர்களையும் உமா ஊன்றிப் பார்த்தாள். கூடவே நடு மையத்தில் பொரி வாரி இறைக்கும் பாவாடையையும் பார்த்தாள்.

என்ன ஜனங்களோ...என்ன கஷ்டங்களோ?

சட்டென்று மனசு 'ச்சீ' என்று வெறுத்துப் போனது.

''போதும்...பார்த்தது, வெயில் அதிகமா இருக்கு. நா உள்ளார போறேன்'' என்றபடி உள்ளே போகத் திரும்பியவளால் காரணம் புரியாமல் நெஞ்சு கனத்து விட்டதை நன்றாக உணர முடிந்தது...

# 7

மழை காலம் ஆரம்பித்துவிட்டது. ஓஷ் ஓஷ் என்று காற்று அடித்தது. ஜோ ஜோ என்று மழை கொட்டியது.

அம்மா அந்தப் பக்கம் போயிருக்கையில் நினைத்து நினைத்து பைப்பில் குளித்து லூட்டி அடிக்கும் விஷமக் காரப் பிள்ளைகளைப் போல செடிகளும், கொடிகளும் உச்சியிலிருந்து அடிவரை நீர் சொட்ட நின்றன.

மழை நின்று பளிச்சென்று வெயில் அரை நாள் காய்ந்தால், யாரோ வேலை மெனக்கெட்டு அருகில் உட்கார்ந்து துடைத்து, பச்சை பெயிண்ட்டை அடித்த மாதிரி இலையும், காயும் பளபளத்தன.

பாவாடைக்கு இப்போதெல்லாம் அதிக வேலை இல்லை, கொத்த முடியாமல், நீர் வார்க்கத் தேவையில்லாமல் பூமியில் என்னேரமும் சொதசொதவென்று ஜலம்.

காலையில் ஒரு சாக்கைத் தலையில் போர்த்திக் கொண்டு வருவான். மழை பெய்யாவிட்டால் முடிந்தவரை தோட்டத்தைப் பெருக்கி சுத்தம் பண்ணுவான். தொட்டிச் செடிகளுக்கு நீர் விடுவான். பூச்சி பொட்டு பிடிக்காமல் செடிகள் இருக்கின்றனவா என்று கவனிப்பான்.

அன்றைய சமையலுக்குத் தேவையான காய்களைப் பறித்துத் தருவான். ஏகமாய் முதல் நாள் இரவு மழை பெய்து, செடிகளின் கீழ் குளமாய் ஜலம் தேங்கி இருந்தால், செடி, அழுகி விடுமோ என்ற பயத்தில், இறைத்து விடுவான்.

தோட்டத்தில் ஒரு மாசமாய் இதுதான் வேலை. மற்ற படி வீட்டினுள் ஒட்டடை அடிக்க, படுக்கைகளை நாலு நாட்



களுக்கொரு முறை தட்டிப் போட என்று உமா சொல்லும் ஏதாவது உபரி வேலைகளைச்செய்துவிட்டு வெள்ளெனவே வீட்டுக்குப் போய்விடுவான்.

சிலசமயங்களில் விடிகாலையில் எழுந்து ஏர்ஓட்டிவிட்டு மதியம் இரண்டுக்கு மேல் வந்துமாலைவரை இருந்துவிட்டுப் போவான்.

காலை ஆறிலிருந்து பன்னிரண்டு வரை மூன்று சால்கள் ஓட்டினால் ஆறுரூபாய் கிடைக்கும். பாவாடையிடம் உழவு மாடுகள் கிடையாது. சித்தப்பனிடம் இரண்டு ஜதை உண்டு. பாவாடையும், அவன் அண்ணனும் ஆளுக்கு ஒரு ஜதை மாட்டை ஓட்டிக்கொண்டு வந்து உழுதுவிட்டு, சித்தப்பனிடம் மாடுகளைச் சேர்க்கும்போது மூன்று ரூபாய் பணத்தையும் கொடுத்துவிட்டு வருவார்கள்.

முதல் நாள் இந்த விவரத்தைக் கேள்விப்பட்டதும் கண்களை விரித்துக்கொண்டு உமா ''எதுக்குடா மூணு ரூபா?'' என்றாள்.

''பின்னே என்னம்மா? மாடுங்க அவுருது. நாங்க சொம்மா கொஞ்ச நேரம் ஓட்டிக்கிட்டுப் போயி திரும்ப கொணாந்து வுட்டுடறோம். மாட்டுக்குத் தீனி வைக்கணும அவுரு செலவுக்கும் எடுத்துக்கணும், அதான் ஆளுக்குப் பாதி...''

பாவாடையிடம் இருக்கும் இந்த நேர்மையான குணம் உமாவுக்கு ரொம்ப பிடித்த விஷயம் பணம். பணம் என்று பறக்காமல், கிடைத்ததை நியாயமாகப் பகிர்ந்து கொண்டு, இருப்பதில் திருப்தி அடைந்து...எத்தனை பேரிடம் இருக்கிறது, இந்த சுபாவம்?

அன்று வேலைக்கு வரும்போதே பாவாடை சோர்ந்திருப்பது, வெளிப்படையாகத் தெரிந்தது.

கோணியை மேலே போர்த்திக் கொள்ளாமல், அசிரத்தையுடன் நனைந்துகொண்டே பெருக்கினான்.

''இப்ப என்னடா பெருக்கல், மழை பெய்யறதுகூட உறைக்காமல்? ம்?''— என்று உமா அதட்டியதை காதில் வாங்காதது போல, கைக்காரியத்தைத் தொடர்ந்தான்.

அவள் கொடுத்த காப்பியை குடித்துவிட்டு வழக்கமாக 'நா வர்றேம்மா' என்றபடி வீட்டைப் பார்க்கப் புறப்படுவான். அன்று பின் வராந்தாவிலேயே குந்திவிட்டான்.

''இன்னாடா, ஒடம்புக்கு சுகமில்லையா?'' என்ற அஞ்சலையின் கேள்விக்கு ஒழுங்காகபதில் சொல்லாமல்சூள் கொட்டினான். அவள் வேலை முடிந்து வீட்டுக்குப் போன பிறகு கூட புறப்படாமல்,அங்கேயே காலை நீட்டிப் படுத்து விட்டான்.

சமையலை முடித்துக் கொண்டு வெளியே வந்த உமாவுக்கு அந்த நீட்டலும், சோர்வும் புதுசாய் இருந்தது.

''பாவாடை''

''ம்மா...'' சட்டென்று அவன் எழுந்து நின்றான்.

''என்னடா, என்ன விஷயம்?''

''......''

''சொல்லுடா...உடம்பு சரியில்லையா?''

''அதெல்லாம் ஒண்ணும் இல்லிங்க...''

''வீட்டுலே தேவகி, அண்ணன் யாருக்காவது உடம்பு சொகமில்லையா?''

''அதெல்லாம் ஒண்ணும் இல்லிங்க...''

''யாராச்சும், ஏதாச்சும் சொன்னாங்களா?''

''......''

''சொல்லேண்டா... தேவகி கிட்டச் சண்டை போட்டியா?''

''நா ஏம்மா போடறேன்?''



''சரி, அது போட்டுச்சா?''

''......''

''விஷயம் என்னனு சொல்ல இஷ்டமிருந்தா சொல்லு, இல்லாட்டி நா விட்டுடறேன். கேக்க கேக்க இப்படி 'உம்'முனு இருந்தா எனக்குப் பிடிக்காது...''

பாவாடை பெரிசாய் 'பச்' என்றான். அப்புறம் ''என்னத்தம்மா சொல்றது? மொத்தத்துலே எம் பொளப்பு நாய் பொளப்பாயிடிச்சிம்மா... அதான் சொல்வேன்'' என்றவன் உமா பேசாமல் இருக்க, சின்னக் குரலில் தொடர்ந்தான்.

''ஊருன்னா ஆயிரம் இருக்கும். வூட்டுக்கு வூடு வாசப்படிதான். இந்த நினைப்புல வைச்சிகிட்டா நமக்கு சங்கடம் இல்ல. அத்த வுட்டுட்டு அடுத்த வூட்டுலே என்னா நடக்குது அவன் ஏன் தம் பொஞ்சாதிய அடிச்சான், இவன் ஏன் கட்டினவளை தொரத்தினான்னு ஊர் கவலை முச்சூட்டையும் நம்ம தலைல தூக்கி வைச்சிக்கிறது நாயமாம்மா? சொன்னா கோபம் தான் வருது...பச்...''

தலையும் புரியாமல்,வாலும் புரியாமல் பாவாடை பேசி நிறுத்த, உமா விழித்தாள்.

''நீஎன்னடா சொல்றே? ஊர்க்கவலையைத் தூக்கி தன் தலைல வைச்சிகிட்டாளா, யாரு தேவகியா? விளக்கமா சொன்னாத்தானே புரியும்?''

''என்னாத்தம்மா விளக்கமா சொல்றது? அடிச்சிக்க ரெண்டு கை பத்தலை, அதான் விசயம்...எவ எப்படிப் போனா இவளுக்கு என்னம்மா? எவளை எவ புருஷன் விட்டுட்டு போனா இவளுக்கு என்னம்மா? நீ ஒழுங்கா இருக்கியா, உன் புருஷன் ஒழுங்கா இருக்கானா, உன்னை அடிக்காம கொள்ளாம காபந்து பண்ணி நல்லா வைச்சிருக்கானா...இத்த கவனிக்கணும். சந்தோசமா இருக்கணும்...

அத்த வுட்டுட்டு 'அவளை ஏன் அவன் தொரத்திட்டான்? அவ என்னா செஞ்சா? இனிமே காட்டி அவ என்னா பண்ணுவா?'னு பொளுது விடிஞ்சி, பொளுது போனா தொண தொணன்னா, மனுஷனுக்கு ச்சீனு ஆவாம என்ன செய்யும்? என்ன் பொளைப்புடா இதுனுபேஜாரா இருக்குது என்ன சம்சாரம், குடும்பம்னு சலிப்பா இருக்குது...மெய்யா தான்..."

உமாவுக்கு இப்போது லேசாக விவரம் புரிந்தது.

ஓ...

பாவாடை இங்கு வருகிறானா!

போனவாரம் அஞ்சலை சொன்ன சமாசாரத்தின் தொடரா இது?

ஆறு ஏழு நாட்கள் முன் பாவாடை தோட்டத்தில் இருக்கும் போது, கூடத்தில் அஞ்சலை உமாவின் காதை குசு குசுவென்று கடித்தாள்.

"யம்மா—கதை தெரியுமா?" இரவு சமையலுக்காக சின்ன வெங்காயத்தைத் தண்ணீரில் போட்டு, ஒவ்வொன்றாக உரித்துக் கொண்டிருந்த உமா தலை நிமிராமலே "என்ன கதைடீ?" என்றாள்.

"அதாம் அந்த பழனிம்மா வெவகாரம்"

"எந்தப் பழனிம்மா"

"அட, ஒங்கொப்பரானே; அதான் பாவாடையோட மொத சம்சாரம் பழனிம்மா, மறந்திட்டீங்களா?"

"அவளா?"

நிஜமாகவே உமா மறந்துதான் போய்விட்டிருந்தாள்.

'அவ அசிங்கம், அவ பிள்ளை அசிங்கம், அவங்களைப் பத்தி பேசறது மகா பாவம்—இனியொரு தபா அந்தப்



பேச்சை பேசாதீங்க,' என்று சில மாதங்களுக்கு முன் பாவாடை கராறாய் பேசிய பிறகு, அந்த விஷயத்தை உமா அடியோடு மறந்துதான் போயிருந்தாள். பிற்பாடு ஒரே ஒரு தரம் மாரியின் பிண ஊர்வலத்தின் போது பழனியம்மா வையும், கட்டையனையும் அஞ்சலை காட்டினபோது அந்த நிமிஷம் அவர்களைப் பற்றி நினைத்தாலும், அதோடு விவரங்களை ஒதுக்கித்தான் தள்ளி இருந்தாள்.

கடந்த இரண்டு மாசங்களாய் ஊரை விட்டு வேலை நிமித்தமாய் அடிக்கடி சென்னைக்கு கணவன் போனபோது தானும் போய் வந்ததில் எந்த வம்பையும் பேச, போது இருக்கவில்லை.

"பழனியம்மாவுக்கு என்னவாம்?"

"அவ புருசன் அவளை வுட்டுட்டுப் போயிட்டாம்மா... குடிசைய ஒளிச்சிகிட்டு, அடுத்த ஊரோட போயி நாலு நாளாவது. அங்க, சாராயம் காச்சற எடத்துலியே தோதா ஒரு வைப்பாட்டிய வைச்சிகிட்டதால, இந்தச் சேரில இனி என்ன வேலைனு, ஊரை விட்டே போயிட்டான்."

"அடப்பாவி! அப்ப, இவங்க கதி?"

"போடி வெளிலே தேவடியானு புடிச்சுத் தள்ளிட்டு அவன் போனப் பொறவு, பழனிம்மா நடு வீதில அளுதுகிட்டு நின்னுட்டு இருந்துச்சு... 'அவன் போகட்டும்டீ, நாங்க இருக்கோம் ஒனக்கு'னு நல்லவேளையா ஆத்தாவும், அப்பனும் வந்து கூட்டிக் கிட்டாங்க...இப்ப அவங்களோட தான் மகளையும் வைச்சிகிட்டு இவ இருக்குறா. குடிசையை வுட்டு வெளியிலே வர்றதில்லே...குன்னிப்போய் சுருட்டிகினு படுத்துருக்கா ... பாவம்...நீங்க ஊர்ல இல்ல, நேத்துத் தானே வந்தீங்க...இல்லைனா அன்னிக்கே சொல்லி இருப்பேன்..."

இந்த விஷயத்தை பாவாடையிடம் கேட்கலாமா என்று அன்று உமா யோசிக்கவே செய்தாள், அப்புறம் நாகரீகமாக இருக்காது என்று விட்டு விட்டாள்.

இப்போது அது சம்பந்தமாக பாவாடை வலிய பேச்செடுக்கிறானா?

"விளக்கமா பேசு பாவாடை...பழனிம்மாவ அவ புருஷன் விட்டுட்டு போயிட்டதைப் பத்தித் தானே பேசறே? அவன் விட்டுட்டுப் போனா தேவகிக்கு என்ன? அவ ஏன் உன்கிட்ட சண்டை போடணும்? ம்?"

"அதாம்மா எனக்குப் புரியலை... நாலு நாளா இந்த எளவு பேச்சை வுட்டா வேற பேச்சே கெடையாது. சோறு தின்ன குந்தினா, படுக்க வந்தா லவலவனு பிடிச்சுக்குறா... 'அவளை அவன் ஏன் வுட்டுட்டுப் போனான்? இவ ஏதாவது தேவடியாத்தனம் பண்ணியிருப்பா, அதான் பொறுக்காம ஓடிட்டான். இனி இவ என்ன பண்ணப் போறா'—இப்படி நை நைனு முணுமுணுத்துக்கிட்டே இருக்குறா...ஏம்மா, நா தெரியாமத்தான் கேக்கறேன். கட்டையன் வுட்டுட்டுப் போனா நாம என்னம்மா செய்ய முடியும். அவ தலைவிதி. அனுபவிக்கறா... இதுக்கு இவ கெடந்து அல்லாடறதும், அடிச்சுக்கறதும், ஏம்மா? எனக்கு நிசம்மா ஒண்ணும் புரியலை. ஏதாச்சும் பேசப் போனா, 'நீ ஏன்யா பேசமாட்டே, ஒன்னோட அவ ஒரு வருசம் வாழ்ந்திருக்கா இல்லே. அவளை நீ வுட்டுக் கொடுப்பியா'னு சம்பந்தா சம்பந்தம் இல்லாம பேசறா. ச்சே...மகா ரோதனைம்மா... இந்தப் பொம்பளை உள்ளுக்குள்ளார என்ன நினைச்சுகிட்டு பேசறானு ஸோஸியமா பாக்க முடியும்? மொத்தத்துலே வூட்டுக்குப் போகணும்னே இல்லேம்மா."

உமா யோசனையில் ஆழ்ந்தாள்.

தேவகி ஏன் மிரண்டு போயிருக்கிறாள்?

எதற்காக இப்படி அரற்றுகிறாள்?

கட்டையன் விட்டு ஓடிவிட்டதால் அனாதையாய், ஊர் பரிதாபத்துக்கு ஆளாகி நிற்கும் பழனியம்மா, அவள் மகள்மேல் பாவாடைக்கு இரக்கம் பிறந்துவிடப்போகிறதே



என்ற பயம்தான் இந்தக் கத்தலுக்கும், முணுமுணுப்புக்கும் காரணம்?

கூடத்துக் கடிகாரம் பன்னிரண்டு அடிப்பது கேட்க, "சரி நீ போயிட்டு வா—ஐயா வர்ற நேரம். எனக்கு வேலை இருக்கு" என்றபடி யோசனை மாறாத முகத்துடனேயே சமையல் வேலையைக் கவனிக்க உமா திரும்பினாள்.

## 8

ஆ"ருகிட்டயிருந்து தபால் வந்திருக்கும்மா? சந்தோசமான வெவரமா? அம்மாஞ் சிரிப்பு சிரிக்கிறீங்களே..."

கையில் பிடித்திருந்த இன்லாண்ட் கடிதத்தை தழைத்து, உமா புன்சிரிப்பு மாறாத முகத்துடனேயே பாவாடையை ஏறிட்டாள்.

"செல்வி எழுதியிருக்குடா."

"ஆரும்மா? நம்ம பாப்பாவா? என்னா எளுதியிருக்குது? அத்த இங்க இட்டுகினு வரேன்னு சொல்லிட்டே இருக்கீங்களே காட்டியும் ஒரு தபாகூட இட்டாரலை. நினைச்சா நீங்களும், அய்யாவும் போயி மகளைப் பார்த்திட்டு வந்திடறீங்க, நாங்க எப்பத்தான் பாக்குறது?"—

"ரொம்ப கவலைப் படாதேடா...இன்னும் ரெண்டு நாள்ல செல்விய நீ பாக்கப் போறே. நாளைலேந்து பள்ளிக்கூடம் லீவு விடறாங்கலாம். இந்த முறைக்கு நா அங்க வரப் போறேன், எனக்கு கிராமத்தைப் பார்க்கணும் போல இருக்கு, மாட்டு வண்டிலே ஊர் சுத்தி, ஆத்தில குளிச்சி,

இளநி குடிச்சு, பாவாடை., அஞ்சலை எல்லாரையும் பாக்கணும் போல இருக்கு'னு எழுதியிருக்குடா. செல்வி ரொம்ப ஆசைப்படறதால நாங்க அவளைக் கூட்டிக்கிட்டு புதன் கிழமை வர்றோம்னு அத்தையும் எழுதியிருக்காங்க..."

'அடிசக்கை, பாப்பா வரப் போவுதா? வரட்டும், மாட்டு வண்டிலே போவணும்னுதா? ஆத்துல குளிக்கணும்னுதா? என்னைய பாக்கணும்னுதா? அடங்கொப்புரானே... என்னப் பாத்திட்டு பாப்பா சீ பைத்தாரப் பயலேனு சிரிக்கப் போவுது. நீங்க வேணா பாத்திட்டே இருங்க...இன்னிக்கே போயி ரெட்டியார் தோப்பு காவக்காரரண்டை, 'டே எனக்கு அன்னாடம் நாலு இளநி வேணும், நல்லதா, கனமா எடுத்து வை'னு சொல்லிடறன். ஐயரண்ட சாதி மயிலக் காளைங்க இருக்குதும்மா, வண்டி ஓட்டியாரவா? நம்ம ஜீப்பு கணக்கா அதுங்க பறக்கும்..."

நீளமாய் லிஸ்டு போட்டவனை, "இருடா. இன்னிக்கே திடுதிடுன்னு எல்லாத்துக்கும் ஏற்பாடு பண்ணக் கிளம்பாதே. செல்வி முதல்லே வரட்டும், அப்புறமா பாத்துக்கலாம் என்று உமா சின்ன சிரிப்போடு தடுக்கவும், தன் பரபரப்பை நினைத்து பாவாடை வெட்கத்துடன் தலையைச் சொறிந்து கொண்டான். பிறகு "ஏம்மா, பாப்பாவுக்கு என்ன வயசாவுது?" என்றான்.

"எட்டு"

"பள்ளிக்கோடத்துக்குப் போவுதா?"

"ஏன் போவாம? நாலு வயசுலேந்தே போவறா."

"நாலு வயசு பச்சைப் பிள்ளையை எப்படிம்மா மனசு வந்து இஸ்கோலுக்கு அனுப்புனீங்க...பாவம்... ஆமா, நம்ம பாப்பா இங்கிலிசு எல்லாம் படிக்குதா?"—

"ம்..."

"அப்ப, தஸ்புஸ்னு இங்கிலிசுலே என்னோட பேசும், அதும் பேச்சு புரியாம நா நின்னா, சிரிக்கும், இல்லம்மா?"



மேற்கொண்டு எதுவும் பேச முடியாமல் 'உமா' என்று குரல் கொடுத்தபடி சரவணன் உள்ளே வர. அவள் எழுந்து உள்ளே போனாள்.

மதியம் வழக்கத்தைவிட பாவாடை சீக்கிரமே வேலைக்கு வந்துவிட்டான்.

காலையில் இருந்த பூரிப்பு முகத்தில் இப்போது இல்லை, வாட்டமாகவே இருந்தான்.

வந்தவன் பெருக்காமல், தண்ணீர் பாய்ச்சாமல் வேப்ப மரத்தடியில் உட்கார்ந்து கொண்டான்.

சற்றைக்கெல்லாம் எழுந்து வேலையைக் கவனிப்பான் என்றிருந்த உமா, அரை மணி போல ஆகியும் அவன் எழுந்திருக்காமல் இருந்ததால், கொல்லை தாழ்வாரத்தில் நின்று "என்னடா விஷயம்?" என்று விசாரித்தாள்.

இவள் கேட்பதற்காகவே காத்திருந்த மாதிரி பாவாடை குத்துக்கால் இட்டு, முகத்தைப் பதித்துக் கொண்டு விசும்ப முற்பட்டான்.

உமாவுக்கு தூக்கி வாரிப் போட்டது.

என்னாயிற்று?

யாராவது இறந்து விட்டார்களா?

உடம்பு சரியில்லையா?

பணக் கஷ்டமா?

என்ன விஷயம்?

"என்ன பாவாடை?"

"என்னானு சொல்லுவேன்?...எங்கதை வர வர பெருங்கதையாயிடிச்சிம்மா. வூட்டுக்குப் போனா நிம்மதியே இல்ல... நானும் உங்களாண்ட சொல்ல வேணாம் சொல்ல

வேணாம்னு தான் பாக்குறேன்... என்னால முடிய லைம்மா... சத்தியமாத் தாங்க முடியலை...''

''எதுவானாலும், முதல்லே நீ கண்ணைத்துடை... அப்புறம் தான் நா பேசுவேன்...பச்சப் பிள்ளையாட்டம், என்னடா இது? ம்? காலைல போறப்ப செல்வி வரப் போறதை நினைச்சி குதிச்சிக்கிட்டுப் போனவனுக்கு அதுக் குள்ளார என்ன ஆயிடிச்சி, இப்படிக் கலங்கிப் போக? கண்ணைத் துடைச்சியா? இப்பச் சொல்லு என்ன விஷயன்னு?''

கிட்டத்தட்ட பதினைந்து நாட்களாய் மனசே சரி யில்லையாம். கட்டையன் மனைவியை விட்டுவிட்டு ஓடிப் போனாலும் போனான். அமைதியாக ஓடிக் கொண்டிருந்த இவன் வாழ்க்கை அலைக்கழியத் துவங்கிவிட்டதாம்.

''எங்க மாமன் பண்ற கூத்து கொஞ்சம் நஞ்சம் இல்லேம்மா...பழனிம்மாக்கும், எனக்கும் ஒண்ணும் இல்லேனு ஆன நாளா எங்க வூட்டு வாசல் மிதிக்காம இருந் தவரு இப்ப அன்னாடம் வந்து ரோதனை பண்ணறாரு. எங்க அண்ணார் கிட்டவும், பங்காளிங்க கிட்டவும் போயி என்னேரமும் அளுது புலம்பறாரு... 'எம்மக வாழ்க்கை இப்படி ஆயிடிச்சே... அவ ஒரு பாவமும் அறியாத பொண் ணாச்சே... இதுஎந்த தெய்வக்குத்தமோ'னு சொல்லி'ஓ'னு அளுவராருங்கம்மா...''

''அவர் அழுதா உனக்கென்னடா?மக வாழ்வு வீணாப் போச்சேன்கிற வருத்தத்துலே மாமா புலம்பறாரு. இதுலே எதுவும் தப்பா இருக்குறதா தோணலியே...''

''ஐயே...அவுரு வேணா புலம்பட்டும்... முட்டிக்கட்டும் எனக்கென்னா...ஆனா அவுரு அத்தோட நிக்க மாட்டேங் கறாரே. 'பழனிம்மா மேல ஒரு தப்பும் இல்லே. யாரோ அவளுக்கு மருந்து வைச்சிட்டதால புத்தி பால் மாறிப் போயிட்டா... அப்பாலகூட கட்டையனும் அவளும் வெகுளியா பழகினாங்களே காட்டியும், அவங்களுக்குள்ளே தப்பா எதுவும நடந்திடலை...குடிச்சிட்டு கண்மண் தெரி



யாம, குடிசைக்குள்ளார கட்டையன் நுழை சமயத்துலே பாவாடையும் திடும்னு வந்திட்டதால நம்பளை நம்ம புருஷன் தப்பா எடுத்துகிட்டும்புற... அதிர்ச்சிலே அவ பேசாம இருந்திட்டா... ந என்ன பாவாடைக்குப் பொறந்ததுதான். இல்லேன்னா துக்காவ கட்டையன் அவளைவுட்டு ஓடணும்'—ஏடா?'' என்னென்னமோ சொல்றாரும்மா... அடிக்கு அம்மிக்கல்லும் நவருமபாங்க, எங்க அண்ணார், பங்காளிங்க மனசு மாற கேக்கணுமா? எங்களே, நிச கொஞ்சம்துட்டு படைச்சவரு...அண்ணன் மத்தவ சாராயம் வாங்கி ஊத்தி டவுனுக்கு போனா ஏமாந்த பளம் வாங்கியாந்து தந்ததுலே இப்ப என்னட ங்களா? என்னண்டையே எங்க அண்ணாரு தகிரியமா 'பழனிம்மா பாவம்டா, வெகுளி அதும் மேல தப்பில்லே னு சொல்றாரு, நா என்னா பண்ணுவேன்? ஏது பண்ணு வேன்? சொல்லுங்க...''

இது என்ன அநியாயம்?

நாலு வருஷம் முன் ஊர் கூடி, பஞ்சாயத்துக் கூடி, நடத்தை கெட்டவள்தான், எட்டு நூறு அபராதம் கட்டி புருஷனும், மனைவியும் பிரிந்து விடுங்கள் என்று சொல்லி விட்டு, இன்று அதெல்லாம் கட்டுக்கதை என்கிறார்களே!

''பாப்பா வரப் போவுதுன்ற குஷியோட வூட்டுக்குப் போனேனா, அங்க குத்துக்கல் மாதிரி எங்க அண்ணார் குந்திகிட்டு இருக்காரு கூடவே மாமன். அப்பால ஊர் பெரியவரு ஒருத்தரு...இன்னாடா இத்தினிபேரும் கும்பலா எதுக்காவ வந்திருக்காங்கனு முளிச்சிகிட்டே குந்தினேன். அண்ணாரு பேசினாரு நா மொதல்ல சொன்ன அத்தையும் சொல்லிட்டு என்னமோ போதாத காலம் பழனிம்மா மூணு நாலுவருசமா சீரளிஞ்சிடிச்சி...இனியும் அப்படியே இருக்க வுட்டா எப்படி? ஆயிரம் இருந்தாலும் நம்ம மாமாபொண் ணுதானே... மதானே அதுக்கு ஒருவழி பண்ணணும்னு

ரன்னவரு திடும்னு 'பழனிம்மாவையும் புள்ளையை இங்க கொண்டு வந்து விட்டுடறேன்னு மாமா ாரு. கையிலே ரொக்கமா ரெண்டாயிரமும் மூணு ல செயினும் போட்டு, கொண்டாந்து வுடறதா ரு. வேணா ஒரு கறவை மாடுகூட வாங்கித் ாரு... நீ 'ம்' னா போதும். நாளைக்கே கண்ணும் வச்சாப்பல வெவகாரத்தை முடிச்சிடலாம். உம் ாதிய நீ கூட்டிக்கப் போறே, இத்த தடுக்கறதுக்கு கு தகிரியம் உண்டு?— என்னா சொல்றே?'— ன்னதும் எனக்கு ச்சேனு ஆயிப்போச்சிம்மா... மனுசன் இவுருனு கேவலமா ஆயிடிச்சிம்மா ர தேவகி விசும்புற சத்தம் வேற கேட்டுச்சா, நா துனு எழுந்துகினேன். ஒருவாய் சோறுகூட துன்னாம இங்க வந்திட்டேன்... என்ன உவரோ, என்ன சனமோ...எனக்கு ஒண்ணும் பிடிக்கலைம்மா..."

அழுகையை எப்போதோ நிறுத்திவிட்ட பாவாடையின் குரலில் இப்போது வேதனை இருந்தது, சலிப்பு இருந்தது.

என்ன சொல்லி இவனை தேற்றுவது என்று புரியாம மா விழித்த நிமிஷத்தில், மதிய வேலைக்காக வந் ஞ்சலை கிட்டத்தில் வந்து நின்றாள்.

எதுவும் பேசாமல் மண் தரையில் குச்சியால் கோல போட்டுக் கொண்டிருந்த பாவாடையைச் சிரிப்புட நோக்கினாள்.

பின் "என்னா பாவாடை உன்னப்பத்தி என்னெ னமோ பேச்சு அடிபடுது" என்றாள்.

"என்னா?"

"உம் மாமங்காரன் ஒன்னண்டை வந்து சீரோட மக அனுப்பறேன், பொஞ்சாதியா ஏத்துக்கன்னாராம், நீ சரின்னுட்டியாம். அல்லாரும் பேசிக்கிறாங் [illegible]டா—"



பளிச் சென்று பாவாடை பாய்ந்தான்,

"ஆமா, அல்லாரும் பேசிக்கிடறாங்க நீயும் நம்புற... சர்தான் போவியா, வேலையத்தவங்களுக்கு வேற என்ன வேலை?"

"அப்ப, அவுரு வந்து உன்னைப் பார்க்கலியாடா?"

"......"

"அந்தக் குட்டி உம்மகதான்னும் சொல்றாங்களே, நிச மாடா?"

"ஆங், சொல்லுவாங்க, சொல்லுவாங்க. ஏமாந்த சோணகிரி எவண்டா ஆப்டுவான்னு இருந்தாங்களா? கட்டையனோட அவ மூணு வருஷம் போல குடித்தனம் பண்ணதை நீயும்தானே, பாத்தே?"

"அத்த ஆரு இல்லேன்னாங்க...மக உனக்கு உண்டானவ தான்னு பழனிம்மா கல்பூரம் ஏத்தி சத்தியம் பண்ணின கண்டுதான், கட்டையன் ஓடிட்டதா சொல்றாங்களே..."

"......"

"இதா, இப்ப வர்றப்பகூட எதிர்ல இட்டுகினு, அவ ஆயாக்காரி, அதாண்டா ஒன் அத்தை, வந்தா...'இன்னா அஞ்சலை எப்படி இருக்குறேனு' கேட்டுட்டு 'இத பாரு பாவாடை மவளை...அவன மாதிரியே இருக்குறா பாரு, அதே மூக்கு, அதே மொகம்'ன்னா. எனக்கும் கூட அப்படித் தான் பட்டிச்சி..."

இப்போது கோபத்தோடு பாவாடை எழுந்து நின்று கொண்டான்.

"ஆமா அதே மூக்கு, அதே மொகம்...எனக்கு வர்ற கோபத்துக்கு...போக்கா உன் வேலையப் பாரு...போ..."

"மூணு பவுன், ரெண்டாயிரம் ரூபா காசு கொடுக்கறேன்னா மாமன் சொல்றாரு? அடேங்கப்பா—எம்மாங்

காசு அது! பேசாம ரெட்டை பெண்டாட்டியா வைச்சிக்கிடு காசுக்கு காசு, சொகத்துக்கு சொகம்...''

''யக்கோவ் நீ இப்ப இந்தப் பேச்ச நிறுத்தப் போறியா இல்லியா? எனக்கு கோபம் வந்திடுச்சின்னா நா என்னா பண்ணுவேன்னு தெரியாது, ஆமா...''

பாவாடையைப் பார்த்தால் உமாவுக்குப் பாவமாக இருந்தது.

''விடு, அஞ்சலை. அவனுக்குப்பிடிக்கலைனா ஏன் மேலமேல பேசறே?இதோடு இனி இந்தப் பேச்ச விட்டுடு... என்ன?''

'எனக்கு என்னா யம்மாடி...ராணிய வைச்சிகிட்டு ஆயா கிளவி அளுததைப் பாக்கப் பாவமா இருந்திச்சி... சொன்னேன்...''

அஞ்சலை நொடித்தபடி உள்ளே போய் சப்தத்துடன் பாத்திரங்களைத் தேய்க்க ஆரம்பித்தாள்.

''பணம்னா நா ஈனு பல்லக் காட்டுவேன்னு இவங்க அல்லாரும் நினைக்கறாங்க. ஒரு மனுசன்னா அவனுக்கு சூடு சொரணை வேணாம்? என்ன நம்பி இப்ப தேவகி வந்திடிச்சி...இப்ப திடும்னு அவளை ஏத்துகிட்டு, இவளை நட்டாத்துல விட்டுற முடியுமா, சொல்லுங்க? பத்து நாள் மிந்தி ஏதோ பேசறப்பவே தேவகி 'அங்க, இங்கனு எங்கா திலே என்னமோ பேச்சுங்க விளுது, அப்படி அவுங்க ஏதாவது சொல்ல நீ ஏடாகூடமா சரின்னே, அப்பால நா தூக்குல தான் தொங்குவேன், ஆமா'னு சொன்னா. இப்ப இவங்க வந்து அவ காதுபடவே இப்படிப் பேசிட்டாங் களே, நா என்னா பண்ணுவேன்?...நிசம்மா சொல் றேம்மா...இதெல்லாம் பாக்கறப்ப, எங்கனாச்சும் ஒடிடலா மானுகூட நினைப்பு வருது போங்க...''

அன்று பேச்சு அதோடு முடிந்துவிட மறுநாள் பூராவும் பெண்ணுக்குத் தேவையான பலகாரங்களைச் செய்வதில் உமா நேரத்தைக் கழித்தாள்.



புதன் அன்று செல்வியோடு தாத்தா, பாட்டி வந்திறங்க, அடுத்த பத்து நாட்களும் இறக்கை கட்டிக் கொண்டு பறந்தன.

ஒருநாள் ஜீப்பில் ஆற்றங்கரைக்கு சித்திரான்னங்கள் எடுத்துப் போய் குளித்து, சாப்பிட்டு மகிழ்ந்தார்கள்.

இன்னொரு நாள் டூரிஸ்ட் கொட்டகையில் 'டுப் டுப்' என்ற சப்தத்துடன் ஐந்து மணி நேரத்துக்கு சினிமா பார்த்தார்கள்.

சுற்று வட்டாரத்திலுள்ள கோவில்களுக்குப் போய் வந்தார்கள்.

செல்வி ஆசைப்பட்ட விதத்தில் இரட்டை மாட்டு வண்டியில் அவளைப் பக்கத்து டவுனுக்கு அழைத்துப் போனார்கள்.

பாவாடை தன் வீட்டுக்கே போகவில்லை. 'பாப்பா, பாப்பா' என்று இங்கேயே இருந்தான்.

எங்கிருந்தோ, குலை குலையாய் இளநீர் சாய்த்து, வெட்டிக் கொடுத்தான்.

ரெட்டியார் பம்புக் கொட்டகைக்கு அழைத்துப் போய் காகிதக் கப்பல் பண்ணி, கால்வாயில் சப்பரம் விட்டுக் காட்டினான்.

பொழுது போகாத மத்தியானங்களில் தனக்குத் தெரிந்த கதைகளைச் சொன்னான்.

'ஒரே ஒரு ஊர்ல ஒரு ராசா இருந்தாங்காட்டியும்...' என்று இழுத்தால் ''இருந்தாங்காட்டியும்' னா?'' என்று சந்தேகம் கேட்பாள் செல்வி.

''ம்...வந்து—இருந்தாங்காட்டியும்னா, வந்து, என்னம்மா, பாப்பா என்னமோ கேக்குதே...'' பாவாடை உமாவின் உதவிக்குப் போவான்.

"அப்படீன்னா, இருந்தான்னு அர்த்தம் செல்வி."

"அப்ப, ராஜா இருந்தான்னு சொல்லாம ஏன் 'இருந் தானாங்காட்டியும்' னு சொல்றே?"

செல்வி கேட்கும் நூறு குறுக்குக் கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாமல் பாவாடை விழிக்க, அவள் சிரிப்பாள்.

அவனைச் சீண்டுவதில் செல்விக்கு ஏக குஷி.

"உம் பேரு பாவாடைனா உன் தம்பி பேரு ரவிக் கையா?"

"இல்ல பாப்பா, எனக்கு தம்பியே கிடையாது"— என்று அவள் கிண்டலைப் புரிந்து கொள்ளாமல் அவன் பதில் சொன்னால் இவள் கை கொட்டிச் சிரிப்பாள்.

செல்விக்காக அவன் நித்தமும் புதுசு புதுசாய் எதை யாவது செய்து தருவான். பச்சைக் கடலைகளைப் பறித்து வந்து, தோட்டத்தில் தீ மூட்டிச் சுட்டுக் கொடுத்தான். வேப்ப மரத்தில் தாம்புக் கயிறு கட்டி, ஒரு தலைகாணியை அதில் இருத்தி, ஊஞ்சல் செய்தான்.

கார்த்திகை அன்று செல்வி பார்த்திருக்க மாட்டாள் என்ற துடிப்போடு 'கார்த்திப்பூ' செய்து காட்டினான்.

முதலில் நெடுஞ்சாலையில் இருந்த பனைமரம் ஒன்றில் ஏறி, பனம்பூ பறித்து வந்தான். வேலி ஓரமாய் மண்ணில் குழி தோண்டி, அந்த பூக்களை எரித்துக் கரிக்கட்டை களாக்கி அதைப் பொடி செய்து, பழைய துணி ஒன்றில் சின்ன மூட்டையாகக் கட்டினான்.

வேப்ப மரக் குச்சிகளில் மூன்றை வெட்டி சிண்டாகக் கட்டி, அதன் நடுவில் கரி மூட்டையை வைத்து, லேசாக இருள் கவிழ்ந்ததும், அந்த மூட்டைக்குத் தீ மூட்டி கனிய வைத்து, இப்படியும் அப்படியுமாய் சுழட்டி ஆட்டி, கிட்டத் தட்ட பத்துப் பதினைந்து நிமிஷங்களுக்கு தீப்பொறி களை அருவியாய் கொட்ட வைத்து, செல்வியையும் ஏன் பெரியவர்களையும் கூட பிரமிப்பில் ஆழ்த்தினான்.



அன்று இரவு சாப்பிட எல்லோரும் உட்கார்ந்த போது, பாவாடை பற்றி, அவனுடைய நல்ல குணம், அன்பான, மரியாதையான நடத்தை பற்றி, பேச்சு எழுந்தபோது, அவனுக்கு சமீபத்தில் உண்டாகியுள்ள பிரச்சனையை விளக்கமாக உமா சொன்னாள்.

"பணம்னா பல்லைக் காட்டுற இந்தக் காலத்துலே இப்படி நேர்மையா, நியாய தர்மத்துக்குக் கட்டுப்பட்ட வனா ஒருத்தனைப் பாக்கறப்ப மனசுக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு. பட்டணத்துலே இருக்கிறவங்க எல்லாம், பட்டிக் காட்டுலே வாழ்ந்தாலும் நாணயத் தோட வாழ்ந்துட்டு இருக்கிற இவனைப் பாத்து நிறைய கத்துக்கணும்னே நா நினைக்கிறேன். ஏழ்மைலகூட பணம், பணம்னு பறக்காம இருக்கிறது எத்தனை பெரிய விஷயம்!"

உமா நீளமாக லெக்சர் அடித்ததும் சரவணன் மெல்லியதாய் புன்னகைத்தான்.

"ஒட்டு மொத்தமா பட்டணத்துக் காரங்க மோசம், கிராமத்து ஜனங்க ரொம்ப ஒசத்தினு சொல்ல முடியாது உமா... நல்லவங்களும், கெட்டவங்களும் எங்கயும்தான் இருக்காங்க...எல்லாத்துக்கும் சூழ்நிலை, தேவைகள்கூட முக்கியமான காரணங்கள்..."

"என்ன சூழ்நிலை? என்ன தேவை? அவனுக்கு மட்டும் வயிறு இல்லியா, ஆசைதான் இல்லியா?...மனசை கேவலமா அலைய விடாம, சட்டுப்பாடா வைச்சிருக்கான். நியாயமா நடக்கலைன்னா, அப்புறம் தெய்வத்துக்குப் பொறுக்காதுனு மனசாட்சிக்குப் பயந்து வாழறான். நல்லதை எடுத்துகிட்டு பாராட்டாம, வேணும்னு மட்டம் தட்டிப் பேசறது நல்லா இல்லிங்க...ஆமா..."

"பர்வாடையோட நல்ல மனசை நா கண்டிப்பா பாராட்டறேன்..., உமா, ஆனா, இவனை வைச்சி அத்தனை பேரையும் நீ எடை போடாதே. ஒட்டு மொத்தமா பட்ட

ணத்துகாரங்க மோசம், இவங்க உசத்திங்கிற முடிவுக்கு வறாதேனுதான் சொல்ல வந்தேன். ஒவ்வொரு மனுஷனுக்கும் ஒரு விலை உண்டுனு சொல்லுவாங்களே, கேட்டதில்லையா? சமயம், சந்தர்ப்பம், இக்கட்டுனு வர்றப்பதான் உண்மையான குணம் வெளிப்படும்...பாவாடைக்கு அப்படி ஒரு சந்தர்ப்பம் வந்திச்சோ, இல்லியோ யார் கண்டது...''

அன்றைக்கு உமாவுக்கு சரியான கோபம். சரவணன் என்ன சொல்லியும் அவன் வாதத்தை ஏற்றுக் கொள்ளாதது மட்டுமன்றி, அத்தையும், மாமாவும் என்ன வேணுமானாலும் நினைத்துக் கொள்ளட்டும் என்ற நினைப்பில், அரை மணி போல் பாவாடையின் உயர்ந்த குணங்களை எடுத்து பேசி, அவனுக்காக வக்காலத்து வாங்கிவிட்டே, அந்தப் பக்கம் நகர்ந்தாள்.

## 9

பத்து நாட்கள் கழித்து செல்வி தன் பாட்டி, தாத்தாவோடு சென்னையைப் பார்க்கக் கிளம்பினபோது, உறவினர் வீட்டில் விசேஷம் ஒன்றும்இருந்ததால் சரவணனும், உமாவும் கூட, அவர்களோடு புறப்பட்டனர்.

விசேஷத்துக்குப் போய்விட்டு இரண்டு நாளில், ஞாயிறு அன்று, திரும்புவதாகத் திட்டம்.

ஊருக்குக் கிளம்புவது தீர்மானமானதும் உமா ஒரு பெட்டியில் தங்களுக்குத் தேவையான சாமான்களை எடுத்து வைத்தாள்.





அஞ்சலையை இரண்டு நாள் வேலைக்கு வர வேண்டாம் என்றாள். பாவாடையை அழைத்து ''காலை நித்தமும் வந்து, தோட்டத்தப் பெருக்கி தண்ணி ஊத்து. செடிலே யாரும் கை வைக்காம பாத்துக்க. நா வாட்ச்மேன் கிட்டயும் சொல்லிவிட்டுப் போறேன்'' என்று வேலைகளை வரிசையாக அடுக்கினாள்.

பாவாடை விழித்தாள்.

''என்னம்மா திடும்னிட்டு?''

''ஆமா, திடீர்னுதான் ஐயா முடிவு பண்ணாங்க...''

''போயிட்டு எப்பம்மா வருவீங்க?''

''ரெண்டு நாள்ள...நீ; போயி கூடத்திலே படுக்கை வைச்சிருக்கேன், கட்டு, நேரமாச்சி...ம்ம்...''

படுக்கையைக் கட்டிவிட்டு பாவாடை வீட்டுக்குப் போகாமல் சுத்தி, சுத்தி வந்து உமா தனியாக கொல்லைப் புரத்துக்கு வந்த போது ''யம்மால்'' என்று குழைந்தான்.

''என்ன பாவாடை?''

''வந்தும்மா...வந்து.',

''சொல்லுடா, உள்ளே வேலை கிடக்கு''

''இவங்கல்லாம் புறப்பட்டு போனப்பொறவு, நாளைக்கு நிதானமா கேக்கலானு இருந்தேம்மா... நீங்களும் நெனைச்ச நினைப்பில்லாம ஊருக்குப் போறேன்ன தொட்டுதாம்மா, இப்பவே கேக்கறேன்...''

''என்ன?''

''வந்தும்மா...தப்பா எடுத்துக்காதீங்க...வந்து''...

''அடடா, இப்ப நீ விவரத்தை மளமளனு சொல்லப் போறியா, இல்ல நா உள்ளரா போயிடட்டுமா?''

''சொல்றேம்மா...இதா சொல்லிடறேன். எங்க சின்னப்பன் இருக்காரில்லே...அதாம்மா செத்தானே அந்த

மாரிக்கு அப்பன். அவுரு இன்னா பண்ணிட்டார்ன்னா, அவுரு நெலத்தை நாங்க ஆண்டு ஆண்டாக போக்கியத்துக்கு எடுத்துப் பயிரிட்டுகிட்டு வர்ரோம். போன வருசமே கொஞ்சம் தகராறு பண்ணாரு. சமாளிச்சிட்டம். இப்ப நீ போக்கியத்துக்கு வேற நெலம் பாத்துக்க, எனக்கு இந்த நெலம் வோணும்னு அக்குறும்பு பண்றாரும்மா... நாலு நாளா ஒரே தகராறுதான். அண்ணாரும் நானுமா நல்ல வார்த்தை பேசிப் பார்த்திட்டம், காட்டமா சொல்லிட்டம், அவுரானா மசியமாட்டேன்கறாரு. இருந்த ஒத்தை புள்ளையும் செத்துட்டான் இப்ப இவுரு பணத்துக்கு ஏன் தான் பேயா அலையறாரோ புரியலை. அக்கம் பக்கத்துல 'டேய், ஒங்க சித்தப்பனுக்கு ஒங்களைப் பாத்தா பொறாமையா இருக்குதுடா நம்ம புள்ளைய ஐயோ, நாம்ப பறி கொடுத்திட்டமே, இவனுக அண்ணன்`தம்பியுமா வளைய வரானுகளேனு ஆத்தாமை பட்டுக்கறாரு'ன்னு சொல்றாங்க... மொத்தத்துலே எனக்கு இப்ப நல்ல காலம் இல்லம்மா, அதான் நா செல்றது..."

உமா கால் மாற்றி கால் வைத்தாள்.

"சரிடா, இத இப்ப ஏன் என்கிட்டச்சொல்றே?... வேலை இருக்குடா...ஊருக்குப் போயிட்டு வந்து பேசக் கூடாதா?"

"இல்லம்மா வந்து ஒரு அஞ்சு நிமிஷம் நில்லுங்கம்மா... பரபரனு சொல்லிடறேன். இந்த நெலம் எங்க சின்னப்பனுக்கு மட்டும் சொந்தமில்லே...இது எங்க தாத்தா சொத்து, ஆதி நாள்ல எங்கப்பனை ஒருநாள் இவரு எங்கயோ இட்டுகினு போயி, சாராயத்தையும் கண்டதையும் வாங்கிக் கொடுத்து புத்தியக் கெடுத்து, ஒரு வெத்துப் பேப்பர்ல கையெளுத்து வாங்கிக்கிட்டாராம். நாங்க அப்ப அறியாத புள்ளைங்க, அதனால எங்கப்பனை அவுரு சுலபமா ஏச்சிட்டாரு. வயசானப்பொறவு வெவரம் தெரியறக்குள்ளார எங்க அப்பன் செத்துட்டாரு—என்னா பண்ணறது? ஒளுஞ்சி போகட்டும்னு விட்டுப்புட்டோம். ஆனா, இப்ப இந்த ஆளு இப்படி அடாவடி



பண்ணறாரு. இது நாயமா சொல்லுங்கமா... இன்னொண்ணும் கேட்டுக்கிடுங்க... சேட் ஒத்தரு இப்ப அந்த நெலத்தை வாங்கப் போறாராம். பாக்டரி போடப்போறாருனு இங்க அங்க பேசிக்கிறாங்க... இப்ப ஏக்கரா பத்து, இருபது ஆயிரத்துக்குக்கூட போவுன்றாங்க.. யம்மாடி, யம்மாடி, எம்மாங் காசும்மா? நமக்கு பங்கு இருக்கிறப்ப, வுடறது, நாயமா?"

நியாயமில்லைதான்.

ஆனாலும், இதையெல்லாம், இவன் ஏன் என்னிடம் சொல்ல வேண்டும்? எனக்கும் இதற்கும் சம்பந்தம் என்ன?

"மழை நல்லா பெஞ்சிருக்கு. இந்த வருசமாவது பயிறு வெளையும், கஸ்டம் இல்லாம குந்திக்கினு துன்னலாம்னு நெனச்சிருந்த, நெனைப்புலேயும் மண்ணு விளிந்திடிச்சி...நாலு பேரண்ட இவரு இப்டி அக்குரும்பு பண்ணறாரே என்னடா செய்யலாம்னு கேட்டோம்—கேஸு போடுங்கடா, செயிக்கும்றாங்க..."

"அது எப்படிடா ஜெயிக்கும்? எந்த ஆதாரத்தை வைச்சி கேஸ் போடுவீங்க?"

"அத்தயும் விசாரிச்சிட்டாரு எங்க அண்ணாரு. நேத்து டவுனுக்குப் போயி ஒரு வக்கீலப் பாத்திருக்காரு...அவுரு நீ நில பட்டா நம்பரைக் கொண்டு போய் பதிவு பண்ணற ஆபீஸ்ல கொடுத்தா, உங்க சின்னப்பன் பேர்ல நிலம் இருக்குதா இல்லியானு தெரிஞ்சிடும்...உங்க அப்பன் கையெளுத்து போட்டது நிசமா, இல்லியானு தெரிஞ்சிடும்ன்றாராம்..."

"அதெப்படிடா முடியும்? நிலத்தோட பட்டா நம்பர் யார்கிட்ட இருக்கு? சித்தப்பன் கிட்டயிருந்து அத தெரிஞ்சிக்கிறது எப்படி?"

பாவாடை எங்களை யாரென்று நினைத்தீர்கள் என்று சொல்லும் பார்வை ஒன்றைப் பார்த்தான்.

"அத்தயும் அண்ணாரு விசாரிச்சிட்டாருங்க. ரிஜிஸ்தர் ஆபீஸ்ல ஒரு ஆளண்டை பேசினாராம் நீ அம்பது ரூபா பணம் கொண்டா, நா பட்டா நம்பரைத் தேடி, விவரம் சொல்றேன்னிட்டாராம்"

ஐம்பது ரூபாயா?

லஞ்சமா?

என்ன கஷ்டகாலம் இது!

பட்டா நெம்பரை அந்தப் பேப்பர் சமுத்திரத்தில் எப்படித் தேடி எடுப்பானாம்?

அதையே உமா பாவாடையிடம் கேட்டாள்

"இன்ன நிலம், இங்க இருக்குதுன்னிட்டா போதுமாம்மா... கண்டுபிடிச்சிடுவாராம்..."

இல்லை...அந்த ஆள் ஏதோ தில்லு முல்லு பண்ணுகிறான். அசடுகள் கஷ்டப்பட்டுச் சம்பாதிக்கும் பணத்தை யாரோ,என்னவோ சொன்னான் என்கிற ஆசையில் விரயம் பண்ணிவிடப் போகிறார்களே!

உமா பதைப்புடன் பேசினாள்.

"எனக்கு என்னவோ இது சரிப்படும்னு தோணலை பாவாடை. நீ அவசரப்பட்டு எதையும் செஞ்சிடாதே "

"இன்னும் ரெண்டு நாள்ல வெவரம் கண்டுபிடிச்சி நோட்டீஸ் அனுப்பிடணும்மா. இல்லாட்டி சித்தப்பன் இன்னொரு ஆளுக்கு போக்கியம் விட்டுடுவாரு. அதுவும் இல்லாட்டி நாங்க ஏதாச்சும் செய்றோம்னு புரிஞ்சிக் கிட்டாருன்னா,இங்க அங்க துட்டுக் கொடுத்து காரியத்தை தனக்குச் சாதகமாக்கிக்கிடுவாரு. கண்ணும் காதும் வைச்சாப்பல நா முடிச்சுத் தரேன்னு வக்கீலய்யாவும் சொல்றாரு உடனடியா நானூறு ரூபா பணம் இருந்திச் சின்னா, நாளைக்கு நிலத்தை நம்பளுதாக்கிக்கலாம்..."



ஓ! பாவாடை இப்படி சுற்றிக்கொண்டு வருகிறானா? பணத்துக்காக இத்தனை பீடிகையா?

பாவாடை நெளிந்தான். தலையைச் சொறிந்தான்.

"வந்தும்மா, எப்படியாச்சும் அந்த ஒதவி பண்ணிடுங்கம்மா... ஆயுசுக்கும் நாங்க நாயா ஒங்கக் காலடிலே கிடப்பம்... யம்மா..."

நானூறு ரூபாய்!

எட்டு மாச சம்பளம்!

இங்கு வந்து பத்து மாசங்கள் ஓடிவிட்டன. ஒரு வருஷத்தில் மாற்றி விடுகிறேன் என்று பாங்கில் சொல்லி இருக்கிறார்கள். அந்தக் கணக்குப்படி பார்த்தால் இன்னும் எண்ணி இரண்டு மாசங்கள். அப்புறம் வேறு எந்த ஊரோ?

எதை நம்பி இவனுக்கு அத்தனை பணம் கொடுக்க முடியும்?

எப்படித் திரும்ப வசூலிக்க முடியும்?

ம்ஹூம் முடியாது. கண்டிப்பாய் முடியாது.

"நானூறு ரூபாய்க்கு நா எங்க போவேன் பாவாடை? அத்தனை பணம் என்கிட்ட ஏது?"

"நானூறு இல்லாட்டி முன்னூறாச்சும் குடுங்கம்மா... வக்கீல் கால கையப் புடிச்சி கேஸ நடத்திக்கறோம்..."

"சொன்னா கேளு பாவாடை. அத்தனை பணம் என் கிட்ட நிஜமா இல்ல...வேணா அம்பது ரூபா தரேன். அதுவும் இப்ப இல்ல... ஊருக்குப் போயிட்டு வந்துதான். இந்த மாசம் எனக்கு ஏகப்பட்ட செலவு..."

"அப்படிச் சொல்லிட்டா எப்படிம்மா? நா ஒங்களைத் தானே மலையா நம்பியிருக்கேன். சரி, இது நடக்குறபடி

நடக்கட்டும்: இப்ப சமயத்துக்கு வேற புச்சா நெலத்தை போக்கியத்துக்கு எடுப்பம்னா, அவன் 'இருநூறு கொடுத்திட்டு ஒரு வருசம் அனுபவிச்சிக்க'ன்றான், இப்பத் திக்கு அதையாவது கொடுங்கம்மா!''

உமாவுக்கு எரிச்சலாக இருந்தது.

என்னவென்று தன் மனசில் நினைத்துக்கொண்டு, இருநூறைக் கொண்டா, முன்னூறைக் கொண்டா என்கிறான்?

சாதாரணமாக இப்படிப் பிடிவாதம் பிடிக்கும் ரகம் இல்லையே இவன்?

என்னாயிற்று இன்று இவனுக்கு!

ஊருக்குப் புறப்படும் அவசரத்தில் இருப்பதுகூட புரியாமல் தொண தொண வென்று தொந்தரவு!

அவளுடைய சிணுங்கின முக பாவத்தை பாவாடை கவனித்திருக்க வேண்டும்.

சட்டென்று கெஞ்சத் தொடங்கினான்.

''மாட்டேன்னு சொல்லாதீங்கம்மா...பத்து நாளா சரியா சோத்துக்கே இல்லாம திண்டாடறோம். இந்த சித்தப்பன் ஒரு பக்கம், அந்த போக்கிய நிலக்காரன் ஒரு பக்கம், ஒடனடியா பணம் கொடுக்கலைனா, அவனும் யாருக்காச்சும் கொடுத்துருவாம்மா... அய்யா கிட்டே கேளுங்கம்மா...யம்மாடி, யம்மா?''

உமாவுக்கு பாவமாகத்தான் இருந்தது. ஆனால் அத்தனை பணம் கொடுப்பது நிச்சயம் அவள் சக்திக்கு மீறின விஷயம்தான்.

கொஞ்சமாவது கொடுக்கலாம் என்றாலும் ஊருக்குப் போகும் செலவு இருக்கிறது. இனிவந்து 'ட்ரா' செய்தால் தான்.



''வீணா தர்க்கம் பண்ணாதே பாவாடை, புறப்படற நேரத்துலே நீ விதண்டா வாதம் பண்ணுறது கொஞ்சம் கூட நல்லாயில்லே...ஐயாவுக்குத் தெரிஞ்சா திட்டப் போறாரு...நா போறேன். வந்தப்புறம் எல்லாத்தையும் விளக்கமா பேசிக்கலாம்...''

உமா உள்ளே சென்றுவிட்டாள்.

மாலையில் ஜீப்பில் சாமான்களை ஏற்றும் போது பாவாடையின் முகம் சட்டி போல இருப்பதை அவளால் புரிந்துகொள்ள முடிந்தது.

இருக்கட்டும், இருக்கட்டும்...

அது என்ன பிடிவாதம்?

எவனோ, ஏதோ ஆபீஸில் எதுவோ சொன்னான் என்றால் அதை விசாரிக்காமல் உடனே செய்வேன்என்றால் எப்படி?

நான் இவனுடைய நல்லதுக்குத்தானே சொல்கிறேன்!

கோபம் வந்தால் வரட்டும், கவலை இல்லை.

ஏதோ நல்லவனாய், திருட்டுப் புரட்டு இல்லாமல் இருக்கிறானே என்று பார்த்தால், ரொம்பத்தான் அடம் பிடிக்கிறான்...

ஊரிலிருந்து வந்து பக்குவமாய் பேசி, புத்தி சொல்ல வேண்டும்.

ரயிலில் போகும்போது கூடவே மாமனார், மாமியார் இருந்ததால் உமா எதுவும் கணவனிடம் இதுபற்றிக் கூற வில்லை.

ஊருக்குப்போன மறுநாள் உறவினர் வீட்டு விசேஷத்துக் போய் வந்தார்கள்.

மதியம் கடைக்குச் சென்று செல்விக்குத் தேவையான சில சாமான்களை வாங்கினார்கள்.

ஞாயிறு காலையில் காரணமில்லாமல் சரவணனுக்கு தூங்கி எழுந்ததிலிருந்து ரொம்ப தலையை வலித்தது. உடம்பு நெருப்பாய் கொதித்தது. தர்மாமீட்டர் நூத்தி இரண்டைக் காட்டவே, அன்றையப் பயணத்தை ரத்து செய்யும்படி ஆயிற்று.

மறுநாளும் ஜுரம் இறங்காமல் இருந்து, தலைமை ஆபீஸுடன் சரவணன் தொடர்புகொண்டு நிலைமையை விளக்க, அவனுக்கு பத்து நாள் விடுப்பு கொடுத்துவிட்டு, உடனே மாற்று ஆபீஸர் ஒருவரை பாங்க் அனுப்பியது.

சென்னையில் இப்பொழுது காணப்படும் ஃப்ளூ இது என்று டாக்டர் சொல்லிச் சிகிச்சை செய்ய ஐந்தாம் நாள் காலை ஜுரம் கொஞ்சம் குறைந்தது.

மேற்கொண்டு இரண்டு நாட்கள் ரெஸ்ட் எடுத்துக் கொண்டு உமாவும் சரவணனும் ஊர் திரும்பிய போது, கிளம்பி மொத்தம் பன்னிரண்டு நாட்கள் ஆகியிருந்தன.

ரயிலில் ஊரைப் பார்க்க பயணம் செய்த நாழிகையில் பாவாடை பேசிய பேச்சுக்களை உமா கணவனிடம் விலரமாகச் சொன்னாள்.

கேட்டுக்கொண்டே வந்த சரவணன் புருவங்களை உயர்த்தினான்.

"நிலத்தை சேட் வாங்கி பாக்டரி கட்டப் போறாரா? அது யார் சேட் எனக்குத் தெரியாம? எனக்குத் தெரிஞ்ச வரை அப்படி ஒண்ணும் பேச்சு இல்லியே—அப்புறம் அது யாரு, ரிஜிஸ்டரார் ஆபீஸ்லே அப்படிச் சொன்னது, கிளார்க்கா?"

"க்ளார்க்கோ, யாரோ தெரியாதுங்க...அம்பது ரூபா தந்தா பட்டா நம்பரைத் தேடித் தரேன்னு ஒரு ஆளு சொன்னார்னு தான் சொன்னான்."

"ஷியர் நான்ஸன்ஸ் உமா...ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ்லே கட்டுக் கட்டா எத்தனை பேப்பர் இருக்குத் தெரியுமா? சரி



யான விவரங்களோட போனாலே, நமக்குத் தேவையான பேப்பரைத் தேடி எடுக்க இரண்டு நாளாகும். அப்படியிருக்க, ஊர்ப்பேரும், எங்க இருக்குன்னும சொன்னா எப்படி தேட முடியும்? நோ...நோ...ஸம்திங் ஈஸ் ராங் ஸம் வேர். ...எனக்கென்னவோ அந்த ஆளு யாரோ ஏமாத்துப் பேர் வழினுதான் தோணுது..."

"அதாங்க நானும் நினைச்சேன்...ஆனா அவன்தான் ஒரே மட்டா சாதிச்சானே!"

"அப்புறம் அந்த வக்கீல்...இந்த மாதிரி இழுபறி கேஸ் எல்லாம் வருஷக்கணக்கா இழுத்தடிக்கும். இரண்டு நாள்ல நிலத்தை இவனுதாக்கித் தரேன்னு அவர் சொன்னது நிஜம்னா, அங்கயும் ஏதோ தப்பிருக்கு. படிப்பு வாசனை இல்லாதவங்களை ஏமாத்தப்பாக்கிறது, ரொம்பத் தப்பு..."

உமா பதில் ஏதும்பேசாமல், ஜன்னல் வழியாக பராக்குப் பார்க்க முற்பட்டாள்.

தரிசாய்க் கிடந்த பூமியில் ஆட்டு மந்தை ஒன்று எதையோ தின்றுகொண்டிருக்க, சில ஆடுகளின் முதுகுகளில் வால் நீண்ட கருங்குருவிகள் ஜம்மென்று உட்கார்ந்து ஒளி சவாரி செய்தன.

கணவன் அழைப்பது கேட்டு உமா திரும்பினாள்.

"நாளைக்கு வேணா நீ அவனை என்னைப்பார்க்கச் சொல்லு...பேசிட்டு, பாங்க் மூலமா ஏதாவது ஒத்தாசை பண்ண முடியுமானு பாக்கறேன். முன் பின் தெரியாத எவனுக்கெல்லாமோ, மாடு வாங்க, ஏர் வாங்க, கோழி வாங்கனு கடன் கொடுக்கறப்ப, இவனுக்கும் ஏதாவது தர முடியுமானு முயற்சி பண்ணறேன். நீ அவன்கிட்ட இது பத்தி எதுவும் சொல்லாதே; 'ஐயாவ பாத்திட்டுப் போ'னு மட்டும் சொல்லு என்ன?"

உமா சரி என்று தலை ஆட்டினாள்.

பாங்க் மூலம் பாவாடைக்கு உதவி பண்ண முடியலாம் என்றுகணவர் பேசியது மனசுக்கு சந்தோஷமாக இருந்தது.

பாவம்—ஏழை, நேர்மையானவன்.

"எனக்கு உங்ககிட்ட இவனுக்கு உதவுங்கனு கேட்க ஏனோ தோணவேயில்லீங்க...பாவம்...கண்டிப்பா எப்படி யாவது பணம் கொடுத்திடுங்க...பிழைச்சிப் போகட்டும். தலையை அடகு வைச்சாவது கடனைத் திருப்பிடுவான். பணத்துக்காக அடாவடி வேலை பண்ண மாட்டான். ரொம்ப நேர்மையானவன். நியாய, அநியாயத்துக்குப் பயந் தவன். கண்டிப்பா பணம் கொடுக்க ஏற்பாடு பண்ணுங்க... கறவை மாடோ, உழவு மாடோ எதாச்சும் வாங்கிக் கொடுத்தா, பிழைச்சிப்பாங்க...என்னங்க...செய்றீங்களா?"

சரவணன் பார்க்கலாம் என்கிற தினுசில் புன்னகைக்க, எப்படியாவது கணவர் பாவாடைக்கு உதவிவிடுவார் என்ற நம்பிக்கை பிறக்க, உமா ஜன்னலுக்கு வெளியே மீண்டும் வேடிக்கை பார்க்க முற்பட்டாள்.

## 10

ரயில் இரண்டு மணி நேரம் லேட். குட்ஸ் வண்டி ஒன்று இருப்புப் பாதையை விட்டு இறங்கிவிட்டதாம். அதைச் சரி பண்ணும் வரையில் இரண்டு பக்கமும் போக்குவரத்தை நிறுத்திவிட்டார்கள்.

எட்டு மணிக்கு வந்து சேர வேண்டிய ரயில் ஊரை அடையும் போது மணி பத்து. முன்கூட்டியே தகவல் வந்து காத்திருந்த ஜீப்பில் ஏறிக்கொண்டு வீட்டுக்குள் காலை எடுத்து வைக்கும் போது பதினொன்று அடித்துவிட்டது.



பூட்டைத் திறந்து உள்ளே போனதும் "வாட்ச்மேனை அனுப்பி அஞ்சலையைக் கூட்டிவரச் சொல்லலாமாங்க?" என்று உமா கேட்க, சரவணன் முறைத்தான். என்றைக்குமே பாங்க் ஆட்களை அத்துமீறி சொந்த வேலைக்காக உபயோகித்துக் கொள்வது அவனுக்குப் பிடிக்காது.

பெட்டியை உள்ளே கொண்டு வந்து வைத்த ட்ரை வரிடம் கணவன் கிட்டத்தில் இல்லை என்பதை ஊர்ஜிதப் படுத்திய பின், தணிந்த குரலில் "உனக்கு அஞ்சலை வீடு தெரியுமாப்பா?" என்று விசாரித்தாள். அவன் தெரியாது என்றான்.

"பாவாடை வீடு?"

"தெரியுங்க."

"அப்ப நீ என்ன பண்ணு, டீ சாப்பிடப் போறப்ப, ஓட்டமாய் ஓடி பாவாடையண்ட நாங்க வந்திட்டம்னு சொல்லி, வரச் சொல்லு. என்ன? போனான் போனான் டோய்னு போயிடாதே...... சட்டுனு ஒரு நிமிஷத்தில வந்திடணும்......"

ட்ரைவர் தலை ஆட்டிவிட்டு வெளியில் போனான்.

உமா சமையல் கட்டில் நுழைந்து, அன்றைய சாப்பாட் டுக்கு என்ன இருக்கிறது என்று பார்த்தாள். இரண்டு உருளைக் கிழங்கும், ஒரு வெங்கயமும் வதங்கியபடி கூடை யில் கிடந்தன.

ஜன்னல் வழியாகத் தோட்டத்தைப் பார்த்த போது, முள்ளங்கியும், வெண்டையும் தேறும்" என்று தோன்ற, அவைகளையே சமைக்கத் தீர்மானித்தாள்.

பில்டரில் காபிப் பொடி போட்டு ஜலம் ஊற்றி அது இறங்குவதற்குள் ஸ்டேஷனிலிருந்து வரும்போது, முன் யோசனையுடன் ஒரு டீக்கடையிலிருந்து கூஜாவில் வாங்கி வந்திருந்த பாலைப் பாத்திரத்தில் ஊற்றிக் காய்ச்சினாள். இரண்டு தம்ளர் காபி கலந்து கணவனிடம் ஒன்றைக்

கொடுத்து, தானும் குடித்த பின் குக்கரில் அரிசி, பருப்பை வைத்துவிட்டு, பெட்டியைத் திறந்து துணிகளை எடுத்து நல்லதை அலமாரியில் அடுக்கி, அழுக்கைத் தோய்க்கப் போட்டாள்.

இனியும் பாவாடைக்காக காத்திருக்க நேரம் இல்லை என்று தோன்ற, பிளாஸ்டிக் கூடையுடன் தோட்டத்துக்குப் போனாள்.

எப்போதும் குப்பை செத்தை இல்லாமல் பளிச்சென்று இருக்கும் தோட்டம் அன்று கூளமாக இருந்தது. செடிகள் எல்லாம் நீரைக் கண்டு நாளான தினுசில் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டிருந்தன.

என்ன விஷயம்?

பாவாடை சரியாகவேலைக்கு வருகிறானா இல்லையா?

லேசாய்எழுந்த கோபத்துடன் வெண்டைக்காய்களைப் பறித்துக் கூடையில் போட்டாள். மண்ணுக்கு மேல் பருமனாய் தெரிந்த முள்ளங்கிகளைப் பிடுங்கி, கொல்லைப்பைப்பில் அலம்பினாள். நாலு பச்சை மிளகாய், கொத்தமல்லிகளையும் பறித்துக் கொண்டு உள்ளே போகத் திரும்பிய போது ட்ரைவர் வந்தான்.

''என்னப்பா, பாவாடையப் பாத்தியா?''

''போனேம்மா வூடு பூட்டியிருக்குது.''

''எங்க போயிருக்கானு யார்கிட்டயாவது விசாரிக்கிறது தானே?''

''பக்கத்து வூடுங்கள்ள பாத்த வரைக்கும் ஆரும் இல்லேம்மா...இப்ப நடவு சமயம் பாருங்க, அவனவன் நிலம் நீச்சப்பாக்க போயிருப்பான்... ஒரு ஆயாவண்ட கேட்டேன். அவன் எங்க இங்க இருக்கான்? போயி அண்ணாரு வூட்டுலே விசாரின்னுச்சி. எனக்கு அண்ணாரு வூடு தெரியாது...நேரம் வேற ஆயிடிச்சி...வந்திட்டேன்...''



எங்கே போயிருப்பான்?

மழை பெய்து ஓய்ந்திருந்ததால் நில வேலை இருக்கிறதா?

ஏது நிலம்? யார் நிலம்?

உமா யோசித்தபடியே குளித்துச் சமையலை ஆரம்பித்தாள்.

சாம்பாரும், ரஸமும் கொதித்த நிமிஷத்தில் ரொம்பத்தான் தூசியும் துப்பட்டையுமாகக் கிடக்கிறதே என்ற அங்கலாய்ப்புடன், வீட்டைப் பெருக்கினாள்.

ஒரு மணிக்கு கணவனுக்கு சாப்பாடு போட்டு, தானும் சாப்பிட்டு உள் காரியங்களைக் கவனித்ததும், ஒரு பக்கெட்டில் சோப்புத் தூளைப் போட்டு அழுக்குத் துணிகளை ஊற வைத்தாள். கண்களை அசதி அழுத்த, வேறு எந்த வேலையையும் செய்ய மனமில்லாமல் போய்ப் படுத்தாள்.

திரும்ப அவள் கண் விழித்தபோது மணி நாலடிக்க ஐந்து நிமிஷம் என்றது.

எழுந்து டீ போட்ட பின், ஒரு நடை வேலி வரைக்கும் சென்று, தெரிந்தவர்கள் யாருடைய நடமாட்டமாவது நெடுஞ்சாலையிலோ, இல்லை சேரியிலோ தென்படுகிறதா என்று பார்த்தாள்.

ம்ஹூம் இல்லை.

எங்கே போய்த் தொலைந்தார்கள், இந்த அஞ்சலையும், பாவாடையும்?

அஞ்சலைக்காவது சொல்லி அனுப்பினால்தான் நாங்கள் வந்துவிட்டது தெரியும். ஆனால் இந்தப் பாவாடை இரண்டு வேளையும் வேலைக்கு வரவேண்டியவன்தானே, ஏன் இன்னும் அவனைக் காணோம்.

ஊரில் இல்லை என்பதால் வேலையைச் சரியாகச் செய்யாமல் ஏமாற்றுகிறானா?

சேச்சே...இது நாள் வரை எத்தனையோ முறைகள் ஊருக்குப் போய்விட்டு வந்தவர்கள்தானே! அப்போதெல்லாம் தோட்டத்தை கண்ணுக்குள் வைத்துப் பார்த்துக் கொண்டவன் இல்லையா? தெரியாமல் எதையும் சொல்லக் கூடாது......

என்ன விஷயம்?

உடம்பு சுகமில்லையா?

துணிகளைத் தோய்த்து உலர்த்தும் போது உமாவுக்கு கடைசி நாளன்று அவன் தன்னிடம் பேசிய பேச்சுக்கள் பளிச் சென்று நினைவுக்கு வந்தன.

ஓ! கோபமா?

அவன் கேட்டு தான் பணம் தரவில்லை என்ற கோபமா? அதுதான் வேலைக்கு வராமல் நின்றுவிட்டானா?

பாங்க் வாட்ச்மேன் கண்ணில் தென்பட, கையைத் தட்டி அவனை அழைத்தாள்.

''நாங்க ஊருக்குப் போனப்புறம் பாவாடை வேலைக்கு வந்தானோ?''

''வந்தானம்மா......''

''இல்ல, செடியெல்லாம் வாடி இருக்கிற மாதிரி தோணிச்சி, அதான் கேட்டேன்...''

''நேத்து நா லீவும்மா, முத்தையன் ட்யூடியிலே இருந்தான், அதனால எனக்குத் தெரியாது. முந்தா நா கூட குளந்தையோட வந்து தண்ணி ஊத்திட்டுத்தான் போனான். நா பார்த்தேன்...''

தொடர்ந்து பேச முடியாமல் வாசலில் ஏதோ சப்தம் கேட்க, வாட்ச்மேன் 'வாரேம்மா' என்றபடி ஓடினான்.

குழந்தையா?

யார் குழந்தை?

அண்ணன் குழந்தையா?

இல்லை, ஊரிலிருந்து யாராவது விருந்தாளிகள் வந்திருக்கிறார்களா?



டீ பாத்திரங்களைத் தேய்த்து கவிழ்த்துக் கொண்டிருக்கையில் கொல்லைப் பக்கம்'யம்மோவ்' என்ற உற்சாகமான குரல் கேட்டது.

பாவாடையா?

கைப்பாத்திரத்தை அப்படியே வைத்துவிட்டு உமா வராந்தாவுக்குப் போனாள்.

பாவாடைதான்.

இடுப்பில் மூணு வயசுப் பெண் குழந்தை ஒன்றோடு நின்றிருந்தான்.

''எப்பம்மா வந்தீங்க?'' என்றவனின் முகமெல்லாம் 'ஹா' என்று மலர்ந்திருந்தது.

உமா பாவாடையை ஊன்றிப் பார்த்தாள்.

வெள்ளை வேட்டி, கோடு போட்ட சட்டை, எண்ணெய் வழிய வழியப் படிய வாரிய தலை, காதுகளில் சிகப்புக்கடுக்கன்.

இடுப்பில் இருந்த பெண்ணின் உடம்பிலும் ஜப்பான் ஜரிகை போட்ட மிட்டாய் ரோஸ் கலர் பாவாடை, சட்டை மின்னியது. கைகளில் ரப்பர் வளை. கழுத்தில் மணி மாலை. முன்னுச்சியில் பின்னியிருந்த பின்னலின் நுனியில் சிகப்பு ரிப்பன். அதில் விரல் நீளத்துக்கு கதம்பம். கண்களில் தடவப்பட்டு கன்னங்களில் தீற்றிக் கொண்ட மை, சாந்துப் பொட்டு.

புஷ்ஷுக்கென்று இருந்தபெண், பாவாடையின் கழுத்தை கெட்டியாய் இரண்டு கைகளாலும் பிடித்துக்கொண்டிருந்தது.

''என்னம்மா அப்படிப் பாக்கறீங்க. எம் மகம்மா...எம் மக ராணி—எப்படி இருக்குறாம்மா? என்ன மாதிரியே இருக்கிறா இல்லே? அதே மூக்கு. அதே மொகவா...சின்ன வயசுலே நா இப்படியேதான் இருந்தேன்னு அல்லாரும் சொல்றாங்க...என் தங்கம், என் ராசாத்தி, எங் கண்ணாட்டி.''

பச் பச்சென்று மகளை அணைத்து பாவாடை முத்தம் கொடுக்க, என்ன இது என்று ஒன்றும் புரியாமல் உமா விழித்தாள்.

என் மகளா?

என் கண்ணாட்டியா?

அதே மூக்கு, அதே முகவாயா?

என்ன இதெல்லாம்?

பழனியம்மாளின் மகள் ராணிதானே இவள்?

கட்டையனோடு வாழப் போய், பஞ்சாயத்து மூலம் இவள் என் மனைவி இல்லை என்று தீர்ப்பான பழனியம்மாவின் மகள்தானே இவள்?

என்ன நடந்தது இந்தப் பன்னிரண்டு நாட்களில்?

பாவாடையின் பேச்சு, நடத்தை, உலகம் அத்தனையும் மாறிப் போகிற அளவுக்கு என்னதான் நடந்தது?

"அய்யாவுக்கு ஒடம்பு சொகமில்லேனுசொன்னாங்களே இப்ப தாவலாமா? எப்ப வந்தீங்கம்மா, காலையிலேயா? நா நேத்தும் இன்னிக்கும் வேலைக்கு வரலை, அதான் எனக்கு வெவரம் எதுவும் தெரியலை...நேத்து எங்க வூட்டுலே படையல் படைச்சோம். இன்னிப் பொளுதுக்கும் விருந்தாளிங்க இருக்காங்க. அதான் வரமுடியலை. இப்பக்கூட பாருங்கம்மா அல்லாரும் ஒன்னாப் படத்துக்குப்போவலாம்னு தீர்மானம் பண்ணி, இதும் ஆத்தாவும், அண்ணியும் அத்தையும் டிக்கெட் எடுக்கறதுக்காவ முன்னாலியே புறப்பட்டுப் போயிட்டாங்க...அண்ணாருவரட்டும்சேர்ந்து போவலாம்னு நா காத்திட்டு அய்யாயிரம் பெட்டிக் கடைக்குப் போனப்ப அவன்தான் 'டே உங்க அய்யா, அம்மா, வந்திட்டாங்கபோலிருக்கு. ட்ரைவர் சொன்னா'னு சொன்னான். இதா ஓட்டமா ஓடியாரேன். இன்னி ஒரு பொளுதுக்கு வுட்டுடுங்க. வேலைக்கு வரலைனு கோவிச்சிக்காதிங்க. படத்துக்கு இட்டுகினு போறேன்னு பழனிம்மாட்ட சொல்லிட்டேன். அது அங்க போய் காத்திட்டு இருக்கும். நாளைக் காலைல கருக்கல்ல வந்திடறேன். நா வாரம்மா ...நாளி ஆவுது..."

"ஒரு நிமிஷம் நில்லுடா..." பதைப்புடன் உமா வேகமாக நகர்ந்தவனை நிறுத்தினாள்.

"என்னாம்மா?"



"இல்லே...வந்து...நீ பழனிம்மாவையும், பெண்ணையும் கூட்டிகிட்டதுக்கு தேவகி ஒண்ணும் சொல்லலியாடா? வந்து... அவளோட சம்மதம் வாங்கிக்கிட்டுதானே இந்தக் காரியத்தை செஞ்சே, ஏண்டா?"

சட்டென்று பாவாடையின் கண்கள் இடுங்கின. புளிச் சென்று வாயில் இருந்த புகையிலைச் சாறை ஒரு பக்கமாய் திரும்பித் துப்பினான்.

"அந்தக் களுத பேச்ச என்னண்ட பேசாதிங்கம்மா... அப்பால நா பொல்லாதவனாயிடுவேன். அத்த நா என்னவோனு நினைச்சிட்டிருந்தேன். பொறாமக்கார நாயி...ஆத்தாம புடிச்ச பேயி...அவளைப் பத்தி பேசறது கூட அசிங்கம், தப்பு வேணாம்மா...வேணாம். நல்லநாளும் அதுவுமா அதும் பேச்ச பேச நா விரும்பலை...நாளைக்கு வெவரமா பேசிக்கலாம். இப்ப நா வர்றேன்...நாளி ஆச்சு...என்னமோ ஏதோனு பழனிம்மா அங்க தவிக்கும்..."

உமா பிரமித்து நிற்க, எதையும் லட்சியம பண்ணாமல் பாவாடை பெண்ணோடு புறப்பட்டுப் போனான்.

பழனிம்மாவையும் பெண்ணையும் பாவாடை சேர்த்துக் கொண்டுவிட்டான், சரி புரிகிறது. தேவகி என்னானாள் என்று புரியவில்லையே!

இரண்டு பெண்டாட்டிகளுடன் சுகமாய் குடும்பம் நடத்துகிறானா?

இல்லை— அப்படியென்றால் நாய், பேய் என்று திட்ட மாட்டான்.

தேவகி என்னானாள்? ஏன் இந்த திடீர் முடிவு?

'தேவகிக்கு துரோவம் பண்ணா அவ கயத்துலே தொங்கிடுவாம்மா' என்றானே, இப்போது மட்டும் அவளை பொறாமை பிடித்த பேய் என்று ஏன் திட்டுகிறான்?

என்ன நடந்தது இந்தப் பன்னிரண்டு நாட்களில்?

எதுவும் தோன்றாமல் கொல்லை படிகட்டில் உமா உட்கார்ந்திருக்க, அரக்கப் பரக்க அஞ்சலை வந்தாள்.

"எப்பமமா வந்தீங்க? இப்பத்தான் பாவாடை 'அம்மா வந்திட்டாங்க ஓடு'னு சொல்லிட்டு போவுது...ஓடியாரேன்

ஒரு ஆள் வுட்டு அனுப்பி இருக்கக் கூடாதா? வூடு தூசியா கெடந்திருக்குமே...நீங்களா சுத்தம் பண்ணிங்க? அய்யா ஒடம்பு தாவலாமா? அதென்னம்மா போன எடத்துலே அப்படி காய்ச்சல் வந்து படுத்துக்கிட்டாரு...வூட்டுலே பாப்பா, அத்தை, மாமா நல்லா இருக்காங்களா? மொதல்ல இப்ப நா வூடு பெருக்கி மொளுகவா, இல்ல வேற ஏதாச்சும் வேல இருக்குதா?''

சரமாரியாய் கேள்விகளை அஞ்சலை கேட்டதை காதில் வாங்காமல் ''என்னாச்சு அஞ்சலை, பாவாடைக்கு என்னாச்சு?'' என்று உமா கேட்கவும், அஞ்சலை புருவங்களைச் சுருக்கி ''அவனுக்கு என்ன?'' என்று பார்த்தாள்.

''ஒண்ணும் ஆவலியே, நல்லாதானே இருக்கான்!''

''குழந்தையோட வந்து நின்று, 'அம்மா எம் மகளை பாத்திங்களா'னு சொன்னப்போ நா திடுக்கிட்டுப் போயிட் டேண்டி...என்ன நடந்தது, சொல்லு''

''ஆ...அத்த கேக்கறிங்களா? நா அவன் ஒடம்புக்கு தான்ஏதாவது கேடானு கேக்கறிங்களோனு நினைச்சேன்... நீங்க ஊருக்குப் போன ரெண்டாம் நாளு எல்லாம் ஒண்ணா கூடிக்கிட்டாங்கம்மா...பாவாடைக்கு இங்க அங்கனு ஏக கடன் போக்கியத்துக்கு இத்தினி வருசமா நெலம் கொடுத்த சித்தப்பன் இந்த வருசம் மாட்டேனிட் டாரு...புச்சா எடுக்காலாம்னா அவன் பணத்தை வைச்சா தான் நெலத்துலே எறங்கலாம்னிட்டான். என்னடா பண்ணறதுன்னு இவனுக மண்டைய போட்டுக் குளப்பிட்டு இருக்குறப்ப மாமன் வந்தாரு... 'என்னத்துக்காவ அவதி படறீங்க? நா ஒருத்தன் இருக்குறது உங்க கண்ல படலியா? ரெண்டாயிரம் ரூவா துட்டும், மூணு சவரன் செயினும் தயாரா வைச்சிருக்கேன், நீ 'ம்,' னிட்டா நாளைக்கே ஆறு நூறு ரூபாய்ல ஒரு கறவ மாடு இட்டாரேன். 'வேணாம் மாமா உழவு மாடு ரெண்டு புடிச்சிக் கொடு'ன்னாலும் சரி. யார் கால்லியாவது விளுந்து கெஞ்சி, பணம் பொரட்டி உழவு மாடுங்களை நாளைக்கே கொணாந்து நிறுத்தறேன். என்ன சொல்றீங்க'னு பக்குவமா பேசி இருக்காரு...



மாமன் பேச்சிலே நாயம் இருக்கக்கண்டு, அண்ணாரும், பங்காளிகளும் தொந்தரவு பண்ண பாவாடை சரினிட் டான். அதான் நடந்தது.''

''பாவாடை சரினு எப்படிச் சொல்லலாம் அஞ்சலை? தேவகி பாடு என்னாறது?''

''அத்த பாத்தா, வவுறு காயுதே, அதுக்கு ஆரு வனி பண்ணறது? ராசா கணக்கா கையிலே ரெண்டாயிரம், மூணு சவரன் செயினு, ஒரு சதை உழவு மாடுங்க...யம்மாடி ...ஆரு கொடுப்பாங்க இத்தினி?...''

''அப்ப போன மாசம் எதுக்கு அத்தனை வீராப்பு பேசி னான் !அவன்? முதல்லியே சரினு சொல்லி இருக்கலாம் இல்லலே?''

''அப்ப புத்தி குளம்பி இருந்துச்சி, ஒண்ணும்புரியல ...இப்ப யார் பண்ண புண்ணியமோ தெளிஞ்சிட்டான். புத்தியா நடந்துக்கிட்டான். 'ம்' னு சொன்ன மருநாளே அவன் குடும்பத்தோட கஸ்டம் விடிஞ்சி போயிருச்சி. இரு நூறு கொடுத்து புது நெலத்தை போக்கியத்துக்கு எடுத்துக் கிட்டான். உழவு மாடுங்களை வைச்சி மூணு சால் உளுதிட் டான். இன்னும் ரெண்டுநாள்ல நடவு ஆயிடும். அப்பால என்ன? அடமானத்துல இருந்த தவலை, குண்டான், கடுக்கன், மோதிரம்னு அத்தனையும் எட்டு நூறு ரொக்கம் கொடுத்து மூட்டுகிட்டான். கையில ஏக துட்டு இருக்கு துனு தலைகால் புரியாம நடந்துக்காம, அல்லாருக்கும் ஜாமான் வாங்கித்தரான். 'இந்தா அஞ்சலைக்கா ஒம் புள்ளைக்கு வைச்சிக்கனு எம் மவளுக்கு ஒரு சாக்கெட் துணி கூட எடுத்தாந்தான்— அவனுக்கு என்னம்மா, ராசா...''

''தேவகி என்ன சொல்றா, அஞ்சலை? அவளுக்கு இந்த ஏற்பாட்டில திருப்திதானா?''

''அது கெடக்கும்மா கூறு கெட்ட களுதை. அதும் பேச்சையே இனி பேசாதீங்க. என்னா பண்ணிச்சி தெரியும்மா, அந்த மூதேவி? பழனிம்மாவும், ராணியும் வூட்டுக்கு வந்த பொறவு ஒரு நா, சோத்துல எலி பருந்த

கலந்திடிச்சி, அது. வெஷத்னதக் கொடுத்து அவுங்களை கொல்லணும்னா அதுக்கு. எம்மாந் துணிச்சல் இருக்கணும். யம்மாடி, நினைச்சாலே வவுறு பகீருனுது...பொம்பளையா அது? பேய்...பொறாமை பிடிச்ச முண்டம். த்தூ..."

விஷமா, தேவகி வைத்தாளா?

தான் தின்பதற்கு கலந்தாளா, இல்லை பழனியம்மாவுக்கு கொடுக்கத் தயாரித்தாளா?

இவர்கள் சரியாக விசாரித்தார்களோ?

"தேவகி அப்படி நடந்துக்கற பொண் இல்லியே அஞ்சலை....புருஷன் திரும்ப பழனியம்மாவைக் கூட்டி லந்தா, தான் இல்லே செத்துடறதா அவ சொல்லிட்டு இருந்தா, சரியா விசாரிச்சிங்களா, இல்லியா?"

"ஆங், விசாரிக்காம வுடுவமா? கையும் களவுமா பிடி பட்ட பொறவு வேற என்னம்மா வோணும்? பத்து ஆளுங்களா சேர்ந்து அவளை நாய அடிக்கிற மாதிரி அன்னிக்கே அடிச்சி வெரட்டியாச்சி ஒளியட்டும்... நாசக்கார மூதேவி..."

தேவகியை அடித்து விரட்டி விட்டார்களா? அடப் பாவிகளா? ஒண்ணுமே தெரியாத அந்த சின்னப் பெண்ணை அடித்து விரட்டிவிட்டார்களா?

ஏன்?

இவர்களுடைய சந்தோஷமான வாழ்க்கைக்கு அவள் முட்டுக்கட்டையாக இருப்பாள் என்ற பயமா?

அவள் எதற்கு தண்டச் சோறாய் என்ற எரிச்சலா?

அவளால் இனி என்ன ஆதாயம் என்ற அசிரத்தையா?

ஐயோ – என்ன அநியாயம் இது.

குந்தி உட்கார்ந்து தீவிரமாக பாவாடைக்காகவும் அவன் குடும்பத்திற்காகவுமாக வக்காலத்து வாங்கும் அஞ்சலையைப் பார்க்கப் பார்க்க உமாவினுள் ஆத்திரம் பெருகியது.

தேவலை, பாவாடை திட்டமிட்டுத்தான் செயல் பட்டிருக்கிறான் அங்கங்கு மனிதர்களுக்கு வாய்க்கரிசியாக ரவிக்கைத் துணி, அது, இது என்று வாங்கிக் கொடுத்து புத்திசாலித் தனமாகத்தான் நடந்து கொண்டிருக்கிறான்.



பாவாடை இத்தனை சாமர்த்தியக்காரனா? வெகுளி என்று நினைத்தவன் இத்தனை சந்தர்ப்பவாதியா? நம்ப முடியவில்லையே!

சாமர்த்தியமா?

ம்ஹூம் இல்லை...இது வெறும் சுயநலம். தான் நன்றாகத் தின்ன வேண்டும், வசதியாக இருக்க வேண்டும் என்ற அப்பட்டமான சுயநலம்.

பட்டணத்தானோ, கிராமத்தானோ, படித்தவனோ, ஏழையோ யாராக இருந்தாலும் கடைசியில் பணம் என்றால் இளிக்கத்தான் செய்வார்களா?

பணத்தைக் காட்டினால் பிணமும் வாயைத் திறக்கும் என்று எத்தனை சரியாகச் சொல்லி இருக்கிறார்கள்!

ஆமாம்— இப்போது ஆளே மாறிவிட்ட பாவாடை, முதலிலேயே ஏன் சரி என்று சொல்லவில்லை? அப்போது பணத்துக்கு முடை இல்லை, அதனால் கொஞ்சம் நியாயம், தர்மத்தை பார்த்தானா? போக்கியத்துக்கு நிலம் எடுக்கும் இக்கட்டும், அடுத்த வருஷம் சோறு இருக்காது என்ற பயமும் உண்டானதும் ஆள் குப்புற விழுந்துவிட்டானா?

ச்சே...

நாய்க்குப் போடும் ரொட்டித் துண்டாக, ஊர் ஜனத்துக்கு அவ்வப்போது எதையாவது வீசிவிட்டால், அவர்களும் காற்று அடிக்கும் பக்கம் சாய்வார்கள், அப்படித் தானா?

இப்போது அஞ்சலையின் பெண்ணுக்கு ரவிக்கைத் துணி வாங்கிக் கொடுத்து, அவள் வாயை அடைத்த மாதிரி?

பழனியம்மா கெட்ட நடத்தை உள்ளவள் என்றால், அத்தனை பேரும் ஆமாம என்றார்கள்; இல்லை என்றால் இல்லை என்கிறார்கள்.

தேவகி, மூத்தாளுக்கு விஷம் வைத்து விட்டாள் என்று அதற்கும் ஒத்துப் பாடுகிறார்கள்

நாளைக்கு இவளைத் துரத்திவிட்டு அவளைத் திரும்ப பாவாடை ஏற்றுக் கொண்டு, இவர்களுக்கு வாய்க்கரிசி போட்டு விட்டால் அதையும் சரிதான் என்று சத்தியம் பண்ணுவார்கள்.

கடைசியில், எல்லாரும் இந்த ஆட்டு மந்தையில் ஒன்றாக வாழ்பவர்கள்தானா? தனிப்பட்ட நபர், மனுஷத் தன்மை நிறைந்தவர் என்று யாருமே கிடையாதா?

பணம், தன் சுகம், தன் சந்தோஷம் இவைதான் எல்லாவற்றையும் விட முக்கியமானவையா?

எங்களுக்கு ஒருஇக்கட்டு வந்தால் நாங்களும் இப்படித் தான் நடந்து கொள்வோமா?

பணம் என்ற அசுரனின் பிடிக்குள் சிக்காமல் யாருமே தப்பிக்க முடியாதா?

இதற்கு பாவாடை, என் கணவர், நான், என்று யாருமே விதிவிலக்கு கிடையாதா?

அன்றைக்கு ஒரு நாள் சரவணன் சொன்னது உமாவின் நினைவில் சட்டென்று எட்டிப் பார்த்தது.

"ஒவ்வொரு மனுஷனுக்கும் ஒரு விலை உண்டு உமா. அந்த மாதிரி விலை பேசற சந்தர்ப்பம் இன்னி வரை பாவாடைக்கு வந்துச்சோ, இல்லியோ... அதை நீ நினைச்சி பார்க்கணும்...ஒருவன் நல்லவனாகவோ, கெட்டவனா கவோ வாழறதுலே, சூழ்நிலை, தேவைக்கு பெரிய பங்கு இருக்கு... இத நீ புரிஞ்சிக்கணும்..."

திடுமென்று உமாவுக்கு கண்களில் ஈரம் கட்டிக் கொண்டது.

பெரிசாய் ஏமாந்துவிட்ட உணர்வில் தொண்டையில் என்னமோ பந்தாய் அடைத்தது.

"இப்ப வேலை ஒண்ணும் இல்ல, போயிட்டு காலைல வா" என்றபடி உள்ளே திரும்பியவளுள், பாவாடையின் நேர்மை, பணத்துக்காக பல்லைக் காட்டாத குணம் இவை களுக்காக அன்று அத்தை மாமாவுக்கு எதிரில் அத்தா னுடன் அப்படி வாதம் செய்தேனே, அடுத்தமுறை அவர்கள் பாவாடை எப்படி இருக்கிறான் என்று விசாரித்தால் என்ன பதில் சொல்வது என்ற கேள்வி தோன்ற அவளுக்கு ரொம்ப அவமானமாக இருந்தது.

முற்றும்.

24 JUN 1991